விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 23 சனிக்கிழமை (10.10.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 295

# முள்ளியவளை காட்டில் சட்டவிரோத குடியேற்றம்!

## பல ஏக்கர் கணக்கில் காணிகளும் பிரித்தெடுப்பு



(யாழ்ப்பாணம்)

முள்ளியவளையில் உள்ள காட்டினை சட்டவிரோதமான முறையில வெட்டி அகற்றி அப்பகுதியில் சில அரசியல்வாதிகளின் துணையுடன் குடியேற்றங்கள் பாரியளவில் அமைக்கப்பட்டு வருகின்றது. இது குறித்து குற்றஞ்சாட்டியுள்ள அப்பகுதி மக்கள் இக்காடழிப்பு தொடர்ந்தால் இப்பகுதி இன்னொரு வில்பத்தாக மாறிவிடும் அபாயம் காணப்படுவதாகவும் அச்சம் தெரிவித்துள்ளனர்.

முள்ளியவளையிலிருந்து குமுளமுனை செல்லும் வீதியில் குமாரபுரம் எனும் பகுதியின் கிழக்கு எல்லையிலிருந்து யுத்தத்தின் பின்னரான காலம் தொடக்கம் இக்காடழிப்பு நடைபெறுகின்றது. அதாவது இதுவரை முள்ளியவளையின் எல்லைக் கிராமமாக இருந்த கற்பூர புல்வெளி கடந்து, வன்னி யன்மேடு

23ஆம் பக்கம் பார்க்க

## 73 அகதிகள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

இந்தியாவில் முகாம்களில் வாழ்ந்து வருகின்ற இலங்கை அகதிகளில் 73 பேர் நாடு திரும்பியுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் உதவியுடன் இவர்கள் மீண்டும் நாடு திரும்பியுள்ளதாக இந்திய தகவல்கள் கூறுகின்றன.

நாட்டில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக 1990ஆம் ஆண்டளவில் இந்த அகதிகள் தமிழகத்திற்கு சென்றமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# ஐ.நா தீர்மானம்; இரு நாள் விவாதம்

## பிரதமர் ரணில் அறிவிப்பு



(கொழும்பு)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானம் தொடர்பில் இரண்டு நாட்கள் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த தீர்மானித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே மேற்படி அறிவிப்பை பிரதமர் வெளியிட்டார். பிரதமர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா அறிக்கை தொடர்பில் இருநாட்கள் விவாதம் நடத்த திகதியை நிர்ணயிக்குமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள்

23ஆம் பக்கம் பார்க்க

## தமிழர்களுக்கு மைத்திரி நன்றிக்கடன் பட்டுள்ளார்

### ஹேமன் குமார யாழில் கருத்து

(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் மகிந்தவை தேற்கடித்ததன் மூலம் மைத்திரியை வாழவைத்துள்ளனர். எனவே ஜனாதிபதி மைத்திரி அவர்களுக்கு நன்றிக்கடன் செய்ய கடமைப்பட்டுள்ளார் என தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹேமன் குமார தெரிவித்துள்

23ஆம் பக்கம் பார்க்க

## தமிழர்களை சம பிரஜைகளாக மதித்தாலே பிரச்சினைகள் தீரும்

### சோபித தேரர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நாட்டில் நீண்ட காலமாக நிலவி வரும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வை எட்டுவதற்கு இது சிறந்த சந்தர்ப்பம் என்றும் அதைப் பயன்படுத்தி நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த இயலும் என்றும் சமூக நீதிக்கான மக்கள இயக்க தலைவர் மாதுலுவாவே

23ஆம் பக்கம் பார்க்க

## 9 மாதங்களில் வாகன விபத்தில் 2 ஆயிரத்து 171 பலி!

(கொழும்பு)

2015ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் இடம்பெற்ற 2 ஆயிரத்து ஏழு வீதி விபத்துகளில் 2 ஆயிரத்து 171 பேர் பலியாகியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவற்றில், வீதி விபத்துகளில் 614 சாரதிகள், 404 பயணிகள் மற்றும் 206 பாதசாரிகளும் பலியான

23ஆம் பக்கம் பார்க்க

## 2016இல் அரசின் செலவு ரூபா 3,138 பில்லியன்!

(கொழும்பு)


2016ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மதிப்பீட்டு யோசனையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. எதிர்வரும் 23ஆம் திகதி இது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

2016ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் மொத்த செலவு 3 ஆயிரத்து 138 பில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. வெளிநாட்டு உதவிகள் உட்பட 2016ஆம் ஆண்டில் ஆயிரத்து 789 பில்லியன் ரூபாய் கிடைக்க உள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. (செ-12)

## பிரகீத் கடத்தல் வழக்கு; விசாரணையை சீர்குலைக்க சதி

### மனைவி சந்தியா குற்றச்சாட்டு




(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமல் போனது தொடர்பான வழக்கின் விசாரணைகளை சீர்குலைப்பதற்கு மகிந்த குடும்பத்தினர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக

23ஆம் பக்கம் பார்க்க

## முழு ஊடக சுதந்திரத்தை புதிய அரசு வழங்கியுள்ளது

### உண்மையை தெரிவியுங்கள் -ஜனாதிபதி



(கொழும்பு)

முழுமையான பத்திரிகை சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அடிப்படைவாதிகளின் குறுகிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு இடமளிக்காது உண்மைக்கு முதலிடம் வழங்க வேண்டியது ஊடகவியலாளர்களின் பொறு

23ஆம் பக்கம் பார்க்க

## கொலையாளிகளை தண்டிக்காத நாடு

(கொழும்பு)

ஊடகவியலாளர்களை கொலை செய்து, காணாமல் போக செய்த கொலையாளிகளை கண்டுபிடித்து தண்டனை வழங்காத நாடுகள் வரிசையில் இலங்கை 6ஆவது இடத்தில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இலங்கை 5வது இடத்தில் இருந்தது. ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் மாநாட்டில் வருடாந்தம் வெளியிடப்படும்

24ஆம் பக்கம் பார்க்க

## சதாம், கடாபியின் கதியே மகிந்தவுக்கும் ஏற்பட்டிருக்கும்

### அமைச்சர் எஸ்.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் மகிந்த வெற்றிபெற்று ஆட்சியை மீண்டும் கைப்பற்றி அவரது செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தால் லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கடாபி, ஈராக் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி

23ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உள்ளக விசாரணையை மேற்கொள்ள குறைந்தது ஒரு ஆண்டாவது தேவை - ராஜித



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போரின்போது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர் மீறல்கள் தொடர்பில் கால அவகாசம் வழங்கினால் மாத்திரமே சரியான விசாரணைகளை மேற்கொண்டு உண்மைகளை கண்டறிய முடியும். இது தொடர்பில் ஒரு சிலரின் வலியுறுத்தலுக்கேற்ப உடனடியாக எந்தவிதமான விசாரணைகளையும் மேற்கொள்ள முடியாது. அதற்கு குறைந்தது ஒரு ஆண்டாவது தேவைப்படும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன இதனை அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை. இந்த விடயம் தொடர்பாக அரசாங்கம் என்ற ரீதியில் நாம் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

ஜெனிவா தீர்மானத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் நாம் சிந்தித்து செயற்பட வேண்டும். அது மட்டுமே இப்போது எமக்கு இருக்கும் சவாலாகும்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கும் நீதிமன்ற பொறிமுறை என்பது முழுமையான உள்ளக பொறிமுறையையே குறிப்பிடுகிறது. இதில் எவ்விதமான சர்வதேச தலையீடும் இருக்காது. இந்த விசாரணைகள் இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு அமையவும், எமது நீதி கட்டமைப்பின் கீழுமே நடைபெறும். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இந்த உள்நாட்டுப் பொறிமுறையில் சர்வதேசப் பிரதிநிதிகள் தமது ஆலோசனைகளை வழங்கவும், இலங்கை மேற்கொள்ளும் விசாரணைகளுக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கவுமே ஜெனிவா தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே இந்த விசாரணையை சர்வதேச விசாரணை என ஒருபோதும் கூற முடியாது.

இலங்கை மீது போர்க்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட போது முன்னைய அரசாங்கத்தினால் அது புறக்கணிக்கப்பட்டது. அப்போது சர்வதேச விசாரணையே வலியுறுத்தப்பட்டது. ஆனால் இப்போது அத்தகைய நிலை இல்லை. இலங்கை அரசாங்கத்தின் உள்ளக செயற்பாடுகள் மீது இன்று சர்வதேச மட்டத்தில் நல்ல நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

போர் மீறல்கள் தொடர்பில் கால அவகாசம் வழங்கினால் மாத்திரமே சரியான விசாரணைகளை மேற்கொண்டு உண்மைகளை கண்டறிய முடியும். இது தொடர்பில் ஒரு சிலரின் வலியுறுத்தலுக்கேற்ப உடனடியாக எந்தவிதமான விசாரணைகளையும் மேற்கொள்ள முடியாது. அதற்கு குறைந்தது ஒரு ஆண்டாவது தேவைப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-12)

## கசிப்பு உற்பத்தி; குடும்பப் பெண்ணிற்கு ரூ10 ஆயிரம் அபராதம்

(கரணவாய்)

வடமராட்சி துன்னாலை மேற்கு சக்குச்சம்பா பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த 34 வயதுடைய இளம் குடும்பப் பெண்ணொருவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் அபராதம் செலுத்தத்தவறின் 6 மாதகால சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும் என பருத்தித்துறை மாவட்ட நீதவான் மா.கணேசராஜா நேற்றைய தினம் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த 23 ஆம் திகதி நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட குறித்த பெண் அன்றைய தினமே பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

எனினும் அப் பெண்ணிற்கு எதிராக வழக்குத்தாக்கல் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நெல்லியடிப் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டது.

இதனையடுத்து பிரஸ்தாப பெண் கடந்த 25 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

இதற்கமைய நேற்றைய தினம் மீண்டும் குறித்த பெண் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த போதே மேற்கண்டவாறு தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (செ-5-60)

# கள்ளுக்கடைகளுக்கு கொழும்பில் எதிர்ப்பு

(கொழும்பு)

கொழும்பு நகருக்குள் தடையின்றி கள்ளுக கடைகளை ஆரம்பிப்பதற்கு கொழும்பு பிரதேச செயலாளர் வழங்கியுள்ள அனுமதியை ரத்து செய்யுமாறு கோரி உச்ச நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தர்ம ஷக்தி அமைப்பு இந்த மனுவை தாகல் செய்துள்ளதாக அந்த அமைப்பின் தலைவர் மாதம்பாகம அச்சாஜி தேரர் தெரிவித்தார்.

கொழும்பு நகரில் தற்போது 5 கள்ளுக் கடைகளை நடத்துவதற்கு மட்டுமே அனுமதி உள்ளது.

தற்போது கொழும்பு பிரதேச செயலாளர் விடுத்துள்ள உத்தரவின்படி, தடையின்றி எத்தனை கள்ளுக்கடைகளை வேண்டுமானாலும் ஆரம்பிப்பதற்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறிய அச்சாஜி தேரர் இதன் மூலம் பெரும் சமூகப் பிரச்சினைகள் உருவெடுப்பதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாக தெரிவித்தார்.

இது சம்பந்தமாக கொழும்பு பிரதேச செயலாளரிடம் தான் கேட்டதாகவும் அப்போது அவர், இது அரசாங்கத்தின் கொள்கைரீதியான முடிவென்று தெரிவித்ததாகவும் அச்சாஜி தேரர் கூறினார்.

போதை பொருட்களை ஒழிப்பதற்கு அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுக்குமென்று ஜனாதிபதி பலமுறை தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் அரசு இம்மாதிரியான தீர்மானங்களை எடுக்க முடியுமா என்று கேள்வி எழுப்பிய அச்சாஜி தேரர், கொழும்பு பிரதேச செயலாளரின் உத்தரவை ரத்து செய்வதற்கு ஜனாதிபதி உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கூறினார். (செ-12)

## அசாத் சாலிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

மத்திய மாகாண சபை உறுப்பினரும், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான அசாத் சாலிக்கு எதிராக கொழும்பில் நேற்று பாரிய ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றுள்ளது.

மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத சாலி, தனது சக மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் குடும்பத்தில் குழப்பம் விளைவித்ததாக கூறப்படுகிறது.

இதனை எதிர்த்து கடந்த வெள்ளிக்கிழமை கிழக்கு மாகாணத்தின் அனைத்துப் பகுதிகளிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்நிலையில் அசாத் சாலியின் சகோதரர நம்பிக்கைப் பொறுப்பாளராக உள்ள கொழும்பு -07 தெவட்டகஹ பள்ளிவாசல் முன்பாக நேற்று அசாத் சாலிக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

அடுத்தவரின் குடும்ப வாழ்க்கையை சீர்குலைக்கும் அசாத் சாலிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேணடுமென்று கோரி ஆர்ப்பாட்டக்காரர்கள் கோசம் எழுப்பினர்.

மேலும் அசாத் சாலிக்கு நல்லாட்சியில் அமைச்சரவை பாதுகாப்புப் பிரிவின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமையை கண்டிப்பதாக பதாகைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கிப் பிடித்திருந்தனர். (செ-12)

மிருக வைத்திய சேவை
தாவடிக்கு அண்மையில் நடமாடும் மிருக வைத்திய சேவைகளுக்கு
(2013)
தொடர்புகளுக்கு
077 973 8802
021 224 2502

அமெரிக்க Green Card Lottery -2017
அமெரிக்க Green card Lottery
விண்ணப்பத்தில் 13 வருட அனுபவமிக்க எமது நிறுவனத்தில் 2017 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை ரூபா 15/- முத்திரையொட்டப்பட்டு சுய முகவரியிட்ட தபாலுறையை Bristol Cyber cafe. No. 8/3/4, Bristol Street, Colombo -01 எனும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.
Tel : 0112393919, 0774276579
(C-2243)
W/A 44843 www.bristolcc.biz

ஜீவக வாத தைலம்
Jeewaka Vata Thailaya
முதுகு வலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலியும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு,அரிப்பு, எரிவு, நரம்பு சார்ந்த வலி, பாரிசவாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்கும். வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம். காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.
25ml-150ரூபா 50ml-280ரூபா 100ml-450ரூபா
Manufactured & Marketed by
Jeewaka Herbals
No.17/3, wedagedara'Koskandawala yakkala
Ayu Lic No.6/2/1/02/11BR NO.W/Au/L/3621.
Contact: 071 227 1526
ஏக விநியோகஸ்தர்கள்,
சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2567

பிறந்த தின வாழ்த்து
துரைராசா துரையம்மா

தனது 80 ஆவது அகவையை
லண்டனில் மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகளுடன் வெகுவிமர்சையாக
08.10.2015 கொண்டாடிய
துரைராசா துரையம்மா அவர்களை
இலங்கை யாழ் கொக்குவில் மேற்கிலுள்ள
சகோதரி ரவி - வனிதா குடும்பம் மற்றும்
பிள்ளைகள், மருமக்கள், பேத்தி ஆகியோர்
பல்லாண்டு காலம் நலத்துடன்
வாழ வேண்டும் என்று
வாழ்த்துகின்றனர்.
(2014)
ரவி - வனிதா
வராகி அம்மன் கோவிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்
பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு
மண்டபத்தில் அதிமேதகு ஜனாதிபதி
மைத்திரிபால சிறிசேன
அவர்களிடமிருந்து 06.10.2015 அன்று
" பிரதீபா பிரபா "விருதினைப் பெற்ற
மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய
ஆசிரியரான
சிவஞானம் சிவகாந்தன்
B.com, H.N.D.ACC, Dip. in MNG,
ESPM, Dip. in PE, Dip in Edu,
M.A (Merit)

(C-2426)
அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல விருதுகளை
பெற்று உயர்ச்சி பெற இறைவனை வேண்டி நிற்கின்றோம்
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

# சர்வதேச விசாரணையை விடவும் கலப்பு நீதிமன்ற முறை சிறந்தது!

## பிரதியமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

**சர்வதேச விசாரணை என்ற நிலைக்கு போவதை விட கலப்பு நீதிமன்ற முறைமை சிறந்ததாகும். முழுமையான சர்வதேச தலையீட்டை தவிர்த்து உள்ளக விசாரணைகளையும் வலியுறுத்தியுள்ளமை வரவேற்க வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரும் பிரதி நிதியமைச்சருமான லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.**

நாட்டில் நிரந்தர அரசியல் தீர்வை எட்டுவது தொடர்பில் பிரதான இரண்டு கட்சிகளும் அக்கறை காட்டி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கலப்பு நீதிமன்ற முறைமையை எதிர்க்கும் வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மகிந்த தரப்பு செயற்பட்டு வரும் நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டவுடன் யுத்த இழப்புகள் தொடர்பில் உண்மையான விசாரணை ஒன்றை ஏற்படுத்த அனைத்து தரப்பும் வலியுறுத்தி நின்றன. குறிப்பாக தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் மட்டுமல்லாது சிவில் அமைப்புகள், சர்வதேச அமைப்புகள் என பல தரப்பினராலும் இந்த அழுத்தம் வழங்கப்பட்டது.



எனினும் மகிந்த ராஜபக்ஷ இந்த அழுத்தங்களை கவனத்தில் கொள்ளாது தன்னை ஒரு தலை சிறந்த தலைவர் என நிரூபிக்கும் வகையில்பக்கச்சார்பான வகையிலேயே செயற்பட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் பக்கச்சார்பாக நடந்து கொள்ளும் நபர்களுக்கு அப்போது முன்னுரிமை வழங்கப்பட்டதே தவிர நடு நிலையாக செயற்பட்ட எம்மை புறக்கணித்தே செயற்பட்டனர்.

ஆகவே நாம் முன்வைக்க விரும்பிய கருத்துக்களும் புறக்கணிக்கப்பட்டன என்பதே உண்மை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## கொண்டயாவின் வாக்குமூலம் ஆதாரமில்லை

குற்றவாளியென்று சந்தேகிக்கப்படுபவர், வாக்குமூலமளித்துள்ளதை . மாத்திரம் கருத்திற்கொண்டு அவரை குற்றவாளியென்று குறிப்பிட முடியாது என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் ருவான் குணசேர தெரிவித்துள்ளார் .

ஒரு குற்றம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு எது உண்மை என்பது நிரூபிக்கப்படும் வரை, சந்தேகிக்கப்படுபவரின் வாக்குமூலம்சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்தார். வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்ட 5வயது சிறுமியான சேயாவின் கொலையுடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் துனேஷ் பிரியஷாந்த என்றழைக்கப்படும் "கொண்டயா" தொடர்பாக அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் . வாக்குமூலமளிப்பதன் மூலம் ஒருவர் குற்றவாளியென்று கருதப்படமாட்டார் என்றும் துனேஷ் பிரியஷாந்த தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார் என்றும் ஒரு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் என்ற ரீதியில் நான் ஒருபோதும் தெரிவிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார் . மேலும் துனேஷ் பிரியஷாந்த, வாக்குமூலத்தை மட்டுமே அளித்தார் என்றும் அவர் தெரிவித்தார். குற்றத்துக்கு அப்பால் பொலிஸாரினால் கண்டு பிடிக்கப்படும் உண்மைகளும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் ஆதாரங்களுமே ஒரு வழக்குக்கு ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அவர மேலும் தெரிவித்தார். (இ-10)

## பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்க்கை நிலை குறித்து ஆய்வறிக்கை யாழில் நேற்று வெளியீடு

யாழ்மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும் பங்களின் வாழ்க்கையின் உண்மை நிலை தொடர் பான ஆய்வறிக்கை ஒன்று நேற்று யாழில் வெளியிடப்பட்டுள்ளது.

இவ் ஆய்வறிக்கையினை தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் பிரஜா அபிலாஷை வலையமைப்பு ஆகிய அமைப்புக்கள் தயாரித்து வெளியிட்டுள்ளன.

வடக்கில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் மற்றும் குடும்ப தலைமைத்துவ பெண்கள் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று யாழ். நகரிலுள்ள விடுதி ஒன்றில் நேற்றைய தினம் நடைபெற்றது .இதன்போது மேற்படி ஆய்வறிக்கை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது

இடம்பெயர்ந்து நலன் புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களின் தரவுகள் தொடர்பில் ஆட்சியாளர்களினால் பொய்யான தரவுகள் கூறப்பட்டு வருகின்றன. இதனால் மக்கள் தமது சொந்த இடங்களிற்கு செல்வதற்கு பல பின்னடைவுகளினை எதிர்நோக்கி வருவதோடு உதவித்திட்டங்கள் கிடைப்பதிலும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கிவருகின்றனர். இதனை கருத்திற்கொண்டும் இடம்பெயர்ந்த மக்களின் நலன்களினைகருத்திற் கொண்டும் மேற்படி அறிக்கை தயாரிககப்பட்டுள்ளதாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடகிழக்கு இணைப்பாளர் அன்டனி ஜேசுதாசன் தெரிவித்தார்.

இதே வேளை நேற்றைய கலந்துரையாடலின் போது மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு 10 பேர் கொண்ட குழுவொன்றும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன், க.சர்வேஸ்வரன், பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)

## எச்.ஐ.வி.தொற்றுக்குள்ளானவர்கள் 2 ஆயிரத்து 245 ஆக உயர்ந்துள்ளது


(கொழும்பு)

இலங்கையில் எச்.ஐ.வி. தொற்றுக்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை 2,245 ஆக உயர்ந்துள்ளது.

15 முதல் 25 வரையான வயதுப் பிரிவைச் சேர்ந்தவர்களே எச்.ஐ.வி. தொற்றுக்கு அதிகளவில் இலக்காவதாக பாலியல் நோய்கள் மற்றும் எய்ட்ஸ் தொற்று தேசிய ஒழிப்பு திட்டத்தின் பணிப்பாளரான டாக்டர் சிசிர லியனகே தெரிவித்தார்.

எவ்வாறாயினும், வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் சுமார் 9 இலட்சம் பேர் வரை எய்ட்ஸ் தொடர்பான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் அதிகமானோர் தாய்மார்கள் எனவும் பாலியல் நோய்கள் மற்றும் எய்ட்ஸ் தொற்று தேசிய ஒழிப்பு திட்டத்தின் பணிப்பாளர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-10)




## நீண்ட நாள் கொள்ளையர்கள் அகப்பட்டனர்

(கொழும்பு)

ஆனமடு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல்வேறு பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்ட பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 15 வயதுச் சிறுவன் ஒருவனுடன் இராணுவத்திலிருந்து தப்பி வந்து மறைந்திருக்கும் 26 வயது இளைஞனையும் கைது செய்திருப்பதாக ஆனமடு பொலிஸார் தெரிவித்தனர். (இ-10)

## மோசடிக்காரர்களுக்கு அமைச்சுப் பதவி வீதியில் இறங்கி நடக்கவே முடியவில்லை

### பாலித தேவப்பெரும எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

கள்வர்கள், மோசடிகாரர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளதாகவும், இதனால் வீதியில் இறங்கி நடக்க முடியவில்லை எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தேவப்பெரும தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தல் காலத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் கள்வர்களை கைது செய்வதாக நாம் கூறியிருந்தோம்.

எனினும் தற்போது எமது அரசாங்கம் இவ்வாறானவர்களுக்கும் அமைச்சுப் பதவி வழங்கியுள்ளது.

இதனால் எம்மால் வீதியில் இறங்கி நடக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தததன் பின்னர் எமது ஊரில் மட்டும் தொழில் வாய்ப்பு இல்லை என்ற விரக்தியினால் மூன்று இளைஞர்கள் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதன் பின்னர் தொழில் வாய்ப்பு கோரி மக்கள் வரிசையில் வருகின்றனர். நிவாரணங்கள் கோருகின்றனர். எனினும் எம்மால் செய்யக்கூடியது எதுவுமில்லை.

இதனால் நாம் மக்களுக்கு முகம் கொடுக்க முடியாது மறைந்து ஒளிந்தே இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் நல்ல பாடம் புகட்டுவார்கள் என பாலித தேவப்பெரும கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-10)

## குற்றச்சாட்டுக்களிலிருந்து கே.பி. விடுவிக்கப்படவில்லை

(கொழும்பு)


கே.பிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களிலிருந்து அவர் விடுவிக்கப்படவில்லை. பொலிஸார் அறிக்கை சமர்ப்பித்தால் அவருக்கு எதிராக வழக்குத் தொடரும் அதிகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு இருப்பதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழான கட்டளைகளை அங்கீகரிப்பது தொடர்பான விவாதத்தில் பதிலளித்து உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.முன்னதாக விவாதத்தில் உரையாற்றிய எதிக்கட்சியின் பிரதம கொறடா அநுர குமார திஸாநாயக்க, கே.பிக்கு எதிராக அரசாங்கம் இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லையென குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த நீதி அமைச்சர் கேபிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களிலிருந்து அவர் விடுவிக்கப்படவில்லையென்று தெரிவித்தார். நீதித்துறை கட்டமைப்பில் குறைபாடுகள் காணப்படுகின்றன. இவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்போம். உச்ச நீதிமன்ற நீதியரசர் ஒருவருக்கு எதிராக பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் அமைச்சரவையிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். அண்மைக் காலமாக நீதித்துறை தொடர்பான நம்பகத்தன்மை அதிகரித்துள்ளது. கடந்த காலங்களை விட நீதிமன்றங்கள் மீது மக்களுக்கான நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (இ-10)

# வரி ஏய்ப்பு வழக்கில் மெஸ்ஸிக்கு 22 மாதங்கள் சிறை தண்டனை?




வரி ஏய்ப்பு வழக்கில் ஆர்ஜென்டினாவின் நட்சத்திர வீரர் லயனல் மெஸ்ஸிக்கு 22 மாதங்கள் சிறை தண்டனை விதிக்க வாய்ப்பிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2000-ம் ஆண்டு முதல் ஸ்பெயினில் வசித்து வரும் ஆர்ஜென்டினா கால்பந்து அணியின் தலைவரும் பார்சிலோனா அணியின நட்சத்திர வீரருமான லயனல் மெஸ்ஸிக்கு, கடந்த 2005-ம் ஆண்டு அந்நாட்டின் குடியுரிமை வழங்கப்பட்டது.

இந்நிலையில், மெஸ்ஸி தனது புகைப்படங்களை பயன்படுத்திக் கொள்ள உருகுவே, சுவிட்சர்லாந்து நாடுகளின் நிறுவனங்களுக்கு அனுமதி அளித்தது தொடர்பாக கிடைத்த வருவாயில் வரி ஏய்ப்பு செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதனையடுத்து கடந்த 2007-ம் ஆண்டு முதல் 2009-ம் ஆண்டு வரை சுமார் 6.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை மெஸ்ஸியும் அவரது தந்தை ஜார்ஜ் கார்சியோவும் வரி ஏய்ப்பில் ஈடுபட்டதாக கூறி ஸ்பெயின் நிதித்துறை அதிகாரிகள் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கு ஸ்பெயினில் உள்ள பார்சிலோனா நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், மெஸ்ஸி அளித்துள்ள மனுவில், தனக்கு அதை பற்றி ஒன்றும் தெரியாது என்றும், தனது வரி தொடர்பான விவகாரங்களை தந்தை ஜார்ஜ் கார்சியாதான் கவனித்து வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தான் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்றும் தெரிவித்திருந்தார்.

ஆனால் அந்த மனுவை தள்ளுபடி செய்த பார்சிலோனா நீதிமன்றம் அவரை நேரில் ஆஜராகும் படி அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.

இந்த வரி ஏய்ப்பு வழக்கில் மெஸ்ஸிக்கும், அவரது தந்தை ஜார்ஜ் கார்சியோவுக்கும் 22 மாதங்கள் சிறைத் தண்டனையும், தலா 2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அபராதமும் விதிக்க வாய்ப்பிருப்பதாக கூறப்படுகிறது.

இந்த வரி ஏய்ப்பு விவகாரம் மெஸ்ஸியின் கால்பந்து வாழ்க்கைக்கே இடையூறாக அமையும் என கருதப்படுகிறது. (க)

# இலங்கை அணி அறிவிப்பு



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடும் இலங்கை வீரர்கள் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.


மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் இரண்டு இருபது- 20 போட்டிகளில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் 14-ம் திகதி தொடங்குகிறது.

இதில் காயத்தால் அவதிப்பட்டு வந்த உபுல் தரங்க இடம்பெறவில்லை. அதே சமயம் மிலிந்த சிறிவர்த்தன மற்றும் குஷால் மெண்டிஸ் இடம்பெற்றுள்ளனர்.

**இலங்கை அணி வீரர்கள் விவரம்:-**

மத்யூஸ் (அணித் தலைவர்), திரிமன்னே (துணைத்தலைவர் ), கவுஷால் சில்வா, திமுத் கருணாரத்ன, தினேஷ் சந்திமால், குஷல் ஜனித் பெரேரா, மிலிந்த சிறிவர்த்தனே, குஷால் மெண்டிஸ், ரங்கன ஹேரத், டில்ருவான் பெரேரா, கவுஷால், தம்மிக்க பிரசாத், நுவான் பிரதீப், சுரங்க லக்மால், துஷ்மந்த சாமிர. (க)

# சொந்த மண்ணில் தொடரை இழந்தது வருத்தமளிக்கின்றது : விராட்



சொந்த மண்ணில் தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான இருபது-20 தொடரை இழந்தது வருத்தமளிக்கிறது என்று இந்திய துணைத்தலைவர் விராட் ஹோலி தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் பங்கேற்றது.

இதில் தர்மசாலாவில் நடந்த முதலாவது ஆட்டத்தில் 7 விக்கெட் வித்தியாசத்தில் தோற்ற இந்திய அணி, கட்டாக்கில் நடந்த 2-வது ஆட்டத்தில் 6 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியடைந்து இருபது-20 தொடரை 2-0 என்ற கணக்கில் பறிகொடுத்தது.

கொல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்தில் நடைபெறவிருந்த 3-வது மற்றும் கடைசி இருபது-20 கிரிக்கெட் மழையால் ரத்து செய்யப்பட்டது.

இந்த நிலையில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான இருபது-20 தொடரை இழந்தது வரும் இருபது-20 உலகக்கிண்ணத் தொடரில் சிறப்பாக செயல்பட எங்களுக்கு கிடைத்த ஒரு பாடம் என்று ஹோலி தெரிவித்துள்ளார்.

மேலும், சொந்த மண்ணில் இருபது-20 தொடரை இழந்துள்ளதால் இந்த தோல்வி வருத்தமளிக்கிறது. இருப்பினும் நான் நல்ல போர்மில் இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

இலங்கை தொடரில் இருந்து நான் நல்ல நிலையில் இருப்பதை உணர்கிறேன். துடுப்பாட்ட பயிற்சியாளர் சஞ்சய் பங்கர் உடன்தொடர்ந்து ஆலோசனையும் கேட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (க)

# கால்பந்து ஜாம்பவான் பீலேவை சந்திக்கும் ஏ.ஆர்.ரஹ்மான்





இந்தியாவுக்கு வருகைதரும் பிரேசில் கால்பந்து ஜாம்பவான் பீலேவை ஆஸ்கார் விருது வென்ற பிரபல இசை அமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் சந்திக்கிறார்.

இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து (ஐ.எஸ்.எல்) தொடரை நேரில் பார்ப்பதற்காக நாளை 11-ம் திகதி பீலே இந்தியாவுக்கு வருகிறார்.

கொல்கத்தாவில் 3 நாட்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்கிறார்.

12-ம் திகதி கொல்கத்தாவில் நேதாஜி உள்ளரங்க மைதானத்தில் நடக்கும் ஜாம்பவானின் இந்திய பயணம் என்ற நிகழ்ச்சியில் அவர் பங்கேற்கிறார்.

இதில் "பேர்த் ஒப் லெஜண்ட்" என்ற பெயரில் உருவாகும் பீலே வாழ்க்கை வரலாற்று படத்துக்கு இசை அமைக்கும் ஏ.ஆர்.ரஹ்மானும் பங்கேற்கிறார். இதனால் பீலேயை ரஹ்மான் சந்தித்து தனது இசை தொடர்பாக பேசுவார் என்று தெரிகிறது.

தவிர, இந்த நிகழ்ச்சியில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, கொல்கத்தா கால்பந்து அணி சக உரிமையாளர் கங்குலி பங்கேற்கின்றனர்.

பின்னர் 13-ம் திகதி ஐ.எஸ்.எல் லீக் போட்டியில் கொல்கத்தா, கேரளா அணிகள் மோதும் ஆட்டத்தை பீலே பார்வையிடுகிறார்.

இது பற்றி பீலே கூறுகையில், இந்தியாவில நடக்கவுள்ள சுப்ரட்டோ கிண்ண தொடரில் பங்கேற்கும் மாணவர்களை காண ஆர்வமாக உள்ளேன் என்று கூறியுள்ளார்.

மேலும், ஒவ்வொரு வீரருக்கும் தனித்திறமை இருக்கும். ஆனால் என்னைப் போலவும், மரடோனா போன்ற திறமையான வீரர்கள் வேறு யாரும் இனி வர வாய்ப்பு இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார். (க)

# மைலோ கிண்ண உதைபந்தாட்டம் யாழில் இன்று ஆரம்பம்

மைலோ கிண்ண உதைபந்தாட்ட தொடர் 2015 இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

மைலோ நிறுவனத்தின் அனுசரணையில் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக இந்த ஆண்டும் யாழ் மாவட்ட ரீதியான உதைபந்தாட்ட தொடர் நடைபெறுகிறது.

இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ள போட்டியில் வல்வெட்டித்துறை வல்லை விளையாட்டுக் கழகம் எதிர் வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமையும் என்பதால் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

பருத்தித்துறை லீக் அணிகளுக்கிடையிலான போட்டிகள் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் மைலோ நிறுவனம் 2013, 2014-ம் ஆண்டுகளில் நடத்திய சுற்றுப் போட்டியில் யாழ் சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் தொடர் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# சானியா - ஹிங்கிஸ் ஜோடி இறுதிப் போட்டிக்கு தகுதி

சீன ஓபன் டென்னிஸ் போட்டி பீஜிங் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் பெண்கள் இரட்டையர் பிரிவில் உலகத் தரவரிசையில் முதல் இடத்தில் இருக்கும் இந்தியாவின் சானியா- சுவிட்சர்லாந்தின் ஹிங்கிஸ் ஜோடி அரையிறுதியில் சொந்த நாட்டின் சென் லியாங்- யபான் வாங் ஜோடியை எதிர்கொண்டது.

சொந்த நாட்டில் விளையாடினாலும் சீன ஜோடியால் சானியா ஜோடிக்கு நெருக்கடி கொடுக்க முடியவில்லை. இதனால் சானியா ஜோடி 6-2, 6-3 என நேர்செட் கணக்கில் எளிதில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

சானியா ஜோடி இறுதிப் போட்டியில் டெல்லாக்குவ- ஸ்வெடோவா அல்லது ஹெச் சான்- ஒய் சான் ஜோடியை எதிர் கொள்ள இருக்கிறது.


சானியா- ஹிங்கிஸ் ஜோடி சமீப காலமாக சிறப்பாக விளையாடி வருகிறது. விம்பிள்டன் மற்றும் அமெரிக்க கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை அடுத்தடுத்து வென்று சாதனைப் படைத்தது குறிப்பிடத்தக்கது. (க)

# மத்திய அரசாங்கத்திடம் தமிழரை பணியவைக்க பார்க்கிறது ஐ.நா.

## வடக்கு முதலமைச்சர் காட்டம்

(யாழ்ப்பாணம்)

**இலங்கையின் மத்திய அரசு கூறும் நல்லிணக்கத்திற்கு எங்களை பணிய வைக்கப் பார்க்கின்றது ஐக்கிய நாடுகள் சபை என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.**



ஐக்கிய நாடுகள் சபையினால் செயற்படுத்தப்படும் இணைந்த தேவைகள் மதிப்பீட்டு ஆலோசகர் தொடர்பில் வடக்கு மாகாண எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா நேற்று முன்தினம் நடைபெற்ற மாகாண சபை அமர்வின் போது முதலமைச்சரிடம் கேள்வியெழுப்பியிருந்தார். இக் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லிணக்கம். பொறுப்புக் கூறலைகளில் முதலாவது ஏற்பாடு சம்பந்தமாக 750 ஆயிரம் டொலர்கள். இரண்டாவது சம்பந்தமாக 550 ஆயிரம் டொலர்கள். மூன்றாவது சம்பந்தமாக 1,200 ஆயிரம் டொலர்கள். நான்காவது சம்பந்தமாக 500 ஆயிரம் டொலர்களும் குறிப்பிடப்பட்டிருந்தன. இவை பற்றிய என்னுடைய கருத்து முரண்பாடுகள் பின்வருமாறு அமைந்தன.

ஜெனிவா தீர்மானத்தைத் தள்ளி வைத்த பின்னரே இப்பேர்ப்பட்ட நிதி பேசப்படுகிறது. இது முழுமையாக மத்திய அரசாங்கத்திற்கு சார்பாகவே அமைந்துள்ளது. நாங்கள் சர்வதேச பொறிமுறைகளைக் கோரியிருக்கும் வேளையில் உள்ளகப் பொறிமுறை ஒன்றினை அமைக்க நடவடிக்கைகள் எடுப்பது எமக்கு சந்தேகத்தைத் தருகிறது. ஏற்கனவே உள்ளகப் பொறிமுறை ஒன்றிற்கு அத்திவாரம் இட்டாகியதோ என்று எண்ண வேண்டியிருக்கின்றது. இதனால்தான் நான் கடைசி நேரத்திலும் உள்ள கப் பொறிமுறை எமக்கு ஏற்படுத்தப் போகும் பாதிப்புப் பற்றிக் குறிப்பிட்டு ஜெனிவாவில் பங்குபற்றிய அனைத்து பிரதிநிதிகளுக்கும் 30.09.2015 அன்று ஒரு கடிதம் அனுப்பியிருந்தேன். அதனை இங்கு என் அறிக்கையுடன் இணைத்துச் சமர்ப்பிக்கின்றேன். அது எமது பதிவேட்டில் இருப்பது நல்லது என்று கருதுகின்றேன். நான் அதில் குறிப்பிடும் பிரச்சினைகள் விரைவில் எழுவன என்பது எனது கருத்து.

நல்லிணக்கத்திற்கான பணம் மத்திய அரசாங்கத்திற்கே கொடுக்கப்படுகின்றது. எமக்கல்ல. எம்முடன் எதுவும் கலந்தாலோசிக்கப்படவும் இல்லை. மத்தி கூறும் நல்லிணக்கத்திற்கு எங்களைப்பணிய வைக்கப் பார்க்கின்றது ஐக்கிய நாடுகள் சபை. மேலும் மீள்குடியேற்றத்திற்குப் பணம் ஒதுக்கப்படுகின்றது. ஆனால் அது பற்றிய எந்தவிதமான கலந்துரையாடல்களும் இதுவரை எம்முடன் நடைபெறவில்லை. அது பற்றிய எமது தேவைகளும் கரிசனைகளும் கண்டறியப்படவுமில்லை.

ஒருவிதப் பின் நினைவாகவே எமக்கும் சொற்ப பணம் குறித்தொதுக்கப்பட்டுள்ளது. எங்களை மற்றைய மூன்றுக்கும் ஒத்துப் போக வைக்கவே இந்தப் பணத்தை முன் வைத்துள்ளீர்கள். ஆனால் எல்லாமே மத்தியுடனான ஒழுங்குகளே. நாங்கள் எம்மை உட்படுத்திய ஒரு வேலைத்திட்டத்திற்கு அன்றி, ஐக்கிய நாடுகள் சபை தன்னிச்சையாக மத்திய அரசாங்கத்தின் நன்மைக்காகச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது என்று கூறினேன்.

அத்துடன் உண்மை விளம்பல், நீதி, நட்ட ஈடு செய்தல், திரும்ப நிகழாதுதடுக்கும் உத்தரவாதங்கள் ஆகியவற்றிற்குப் பொறுப்பான ஐக்கிய நாடுகள் சபை விசேட உயர் மட்ட பிரதிநிதி Pablo de Greiff இவ்வருடம் ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி இங்கு வந்து சென்ற போது குறிப்பிட்ட பல விடயங்கள் ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதியால் கருத்துக்கெடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினேன். ஆங்கிலத்திலான அவ் அறிக்கை தற்பொழுது என்வசம் இருக்கின்றது. எமது கௌரவ உறுப்பினரகளின் நலனுக்காக அவர் குறிப்பிட்ட விடயத் தலையங்கங்களை மட்டும் இங்கு தருகின்றேன்.

1.(இலங்கையில்) விசாரணை ஆணைக்குழுக்கள் தேவைக்கதிகமாக நியமிக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள நம்பகத்தன்மை இழப்பு

2.நல்லிணக்கத்திற்குக் குறுக்கு வழிகள் கிடையாது

3.மனித உரிமைகள் பற்றி அரசின் வலுவான கொள்கைப் பிரகடனம் தேவை

4.(போரின் பின்னரான) நிவாரணங்கள் முழுமையானதாக அமைய வேண்டும்

5.கலந்து பேசல், பங்குபற்றுதல் (அவசியம்)

6.காணாமற் போனோர், தொல்லை தரல், வன்முறை, தடுத்து வைத்தல், காணி மற்றும் உளவியல் சார்ந்த சமூக உதவிகள் பற்றி உடனே நடவடிக்கை எடுத்தல் அவசியம்.

அவற்றுள் முக்கியமாக கலந்து பேசல், பங்குபற்றுதல் ஆகியன எத்துணை அவசியம் என்பதை விசேட ஐக்கிய நாடுகளின் பிரதிநிதி குறிப்பிட்டும் எம்முடன் கலந்து பேச அப்போது பின்நின்றார் வதிவிடப்பிரதிநிதி.

பின்னர் இலங்கையிலும் ஜெனிவாவிலும் நடந்த நடவடிக்கைகள் யாவும் முன்னரே ஒருதலைப்பட்சமாக விவாதித்து இலங்கை அரசாங்கத்துடன் கருத்தொருமித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளே என்பதைருசுப்படுத்துவதாக அமைந்துள்ளதை எமது கௌரவ பிரதிநிதிகள் புரிந்து கொள்ள வேண்டும். கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் இன்று கொண்டு வர இருக்கும் மற்றொரு பிரேரணையை வாசிக்கும்படி அவரையே நான் இத்தருணத்தில் கேட்டுக் கொள்கின்றேன். மக்கள் பிரதிநிதிகளின் எவ்விதப் பங்களிப்பும் இல்லாது மாவட்டத்தின் எதிர்காலத்திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளதாகக் கூறுகின்றார். அதைத்தான் நானும் அன்று சுட்டிக காட்டினேன்.

ஜெனிவாவில் எப்பேர்ப்பட்ட பொறிமுறை என்று தீர்மானிக்க முன்னர் உள்ளகப் பொறிமுறை ஒன்றிற்குப் பணத்தை குறித்தொதுக்க வேண்டிய அவசியம் என்ன? அத்துடன் நல்லிணக்கத்தை எவ்வாறு மத்திய அரசு எங்களுடன் பேசாது ஏற்படுத்தப் போகின்றது? பணத்தைக் குறித்தொதுக்க முன் எமது நடவடிக்கைகள் வெளிப்படையாக இருக்க வேண்டும். உண்மைகளை அரசு அறிந்து கொள்ளாமல் நல்லிணக்கத்தினை எவ்வாறு ஏற்படுத்தப் போகின்றது?

இராணுவத்தினரை வெளியேறாது, மீள்குடியேற்றம் பற்றிக் குறிப்பிடுவது பணத்தை மத்தி எடுத்துக் கொண்டு தன்னிச்சையாக சில காணிகளை விடுவிப்பதாக முடியுமல்லவா?

நான்கு விடயங்களும் எம்முடன் கலந்தாலோசித்து முடிவு எடுக்க வேண்டிய விடயங்கள். எங்களைப் பலாத்காரப்படுத்தி எங்களின் ஒப்புதலை வாங்கவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பணம் எங்களுகக்குத் தரப்படமாட்டாது மத்திக்கே கிடைக்கும். ஆனால் எங்கள் ஒப்புதலை மட்டும் கேட்கின்றார்கள். எனவே எனது மனவருத்தத்தைக் கடைசியாக நான் பேசிய சிரேஷ்ட ஐக்கிய நாடுகள் அலுவலருக்குத் தெரியப்படுத்தி விட்டேன். அவரும் அதனைப் புரிந்து கொண்டிருந்தார். உண்மையில் அதன் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் ஒருவர் வடமாகாண சபையிடம் கேட்டே வட இலங்கையில் அபிவிருத்திகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று கூறியிருந்தார்.

வதிவிடப் பிரதிநிதி தனக்கு மேலிடத்தில் இருந்து நெருக்குதல் ஏற்பட்டதால், நான் கோரிய நபரைத் தான் ஏற்காததால்தான் நான் சம்மதம் தெரிவிக்கவில்லை என்றும் அந் நபரை ஏற்றால்தான் கருத்துக் குறிப்பை ஏற்க முடியும் என்று நான் கூறியிருந்ததாகவும் திரித்துக் கூறத் தலைப்பட்டார். அதற்கு அவருக்குத் தக்க பதில் தயாரித்துள்ளேன்.

அதாவது முன்னர் ஏற்றுக்கொண்ட ஒரு விடயத்தைக் காலங்கடத்தி வைத்து கருத்துக் குறிப்புக்கு நான் அனுசரணை வழங்கினால்தான் குறிப்பிட்டவரை நியமிக்க முடியும் என்று கூறியவர் நீங்களே அன்றி நான் அல்ல என்றும் கருத்துக் குறிப்புக்கு ஒப்புதல் அளிப்பதானால் அவரை முதலில் நியமியும் என்று நான் எத்தருணத்திலும் கூறவில்லை என்றும் அவ்வாறு கூறியிருந்தால் அதைக் காட்டும் என்றும் அவருக்குக் கூறிவைத்தேன்.

அத்துடன் அவர் வழியாக எமக்கு ஆலோசகர் பற்றிய எதிர்பார்ப்பு எதுவும் இல்லை என்று அவருக்குக் கூறிய பின்னரும் இவ்வாறு அவர் கூறியுள்ளார். ஆலோசகர் கிடைத்திருந்தால் என்ன? கிடைக்காதிருந்தால் என்ன? எமக்குத் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய கருத்துக் குறிப்புக்கு நான் எப்போதும் சம்மதித்திருக்கமாட்டேன். இப்பொழுது எமது ஒப்புதல் இல்லாமலே பணத்தை மத்தி கையேற்றிருப்பதாகத் தெரிகின்றது. அதனை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாகவே எதிர்க்கட்சித் தலைவரின் பிரேரணை அமைகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

## ராசி பலன்

**10.10.2015**

(புரட்டாதி 23, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
திரயோதசி பின்னிரவு 1.29 மணிவரை
பூரம் முன்னிரவு 9.28 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
அருணந்தி சிவாச்சாரியார் குருபூசை,
புரட்டாதிச் சனி விரதம்,
பிரதோச விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவோணம், அவிட்டம்<br>இரவு 4.15 இற்கு<br>கன்னி--சந் | | குரு, சுக்<br>செவ், சந் |
| | சனி | | ராகு<br>புத, சூரி |

**மீனம்:** ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், பகைவர்கள் விலகுவர், முயற்சிகளில் முன்னேற்றமுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மேடம்:** அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியங்களை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம், பணக் குறைவான நாள்.

**இடபம்:** ரோக பயமுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** மனோ தைரியத்துடன் செயற்படுவீர்கள், உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வரலாம், நற் கீர்த்தியுண்டு, மாதர் நட்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, காரிய அனுகூலமான நாள்.

**கடகம்:** போசன சுகக்குறையுண்டு, விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, செலவுகள் அதிகரிக்கும், மனோ சங்கடங்கள் கூடும் நாள், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**மகரம்:** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், பொருட்களில் கவனம் தேவை, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், போசன சுகக் குறைவான நாள்.

**சிம்மம்:** வெகுமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மாதர் நட்புண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், மனதில் இனம் புரியாத கற்பனைகள் தோன்றும், போசன சுகமுண்டு.

**தனுசு:** தொழிலில் சரீரப் பிரயாசை காட்டுவீர்கள், எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம், தேவையற்ற பயங்கள் உருவாகும், ஆதாயம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், சில நிர்ப்பந்தங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், இஷ்ட சித்தியுண்டு, ஆரோக்கியமான நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள்.

**துலாம்:** உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், தன தானிய சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** சோம்பலை விலக்குவது நல்லது, சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சயன சுகக் குறைவான நாள், சஞ்சலங்கள் கூடும் நாள்.




தோழர் சேகுவேராவின் 48 ஆவது சே தினத்தை முன்னிட்டு சோஷலிச இளைஞர் சங்கத்தினால் கருத்தரங்கும் கலாசார நிகழ்வும் யாழ்ப்பாண ரிம்மர் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு இலங்கைக்கான கியூப நாட்டின் தூதுவர் லொரெண்டினோ படிஸ்ட்டா மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் தோழர் ரில்வின் சில்வா, சோஷலிச இளைஞர் சங்க தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய பிமல் ரத்நாயக்க, வட மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். தவராசா பல்கலைக்கழக மாணவர்கள், கலைஞர்கள் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்: பொ.சோபிகா)

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சண்டிலிப்பாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

ஜெ.அபர்ணா-157

யாழ்.மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை

ர.திலக்சன்-188,பி.கீர்த்திகன்-183,ச.நிருஷனா-180,சி.டிக்சனா-175,க.கீர்த்திகா-175,சு.யதுர்சிகா-174,கு.தர்மிகா-173,சி.பரணிதன்-170,ந.கஜீவன்-167,சி.சுவிக்சன்-166,க.யகிதன்-166, கு.நிலோஜினி-165,பி.சயந்திகா-164,செ.திருசன்-164,ச.பிரியந்தன்-163,செ.அனோஜிகா-162,உ.தஜிந்தினி-161,கு.திலக்சியா-161,ப.ஜனு சன்-156,ச.பிரியந்தி-156,ம.வாணிதன்-155, ம.சுவிதரன்-155,கு.சுவேதன்-153, ர.மாதினி-153.

யாழ்.மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை

கா.மேரிசுஜந்தா-158,ச.கிருஜிகன்-154

யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

ச.சஹானா-183,கௌ.தேனுஹர்சன்-179,தி.திருவேரகன்-177, சி.டர்மிகா-177,ந.தரிணிகா-177, ர.ஜதுசிகா-175,கு.பிரவீன்-175, ஜெ.துஸ்யந்தன்-174, கு. பவோஜன்-173,சு.பிரியன்ஷா-173, த.மாதுங்கி-172,பு.விதுஷனா-172, கா.வேந்தினி-172,ர.மிதுன்-170, க.கிசோலினி-170,க.அஸ்வினி-170,க.வாகீசன்-170,ந.நிருத்திகன்-169,அ.அஷ்வினி-168, ச.யதுசன்-166,அ.ஜெயதாரணி-166, கி.பிரணவி-164,பு.பிரவீனா-164,கு.டினோஜன்-163,சி.மானஷா-162,ர.கஜந்தன்-162, ஜெ. துஸ்யந்-162,சு.யதுஷன்-161, சு.நிதுஜா-161,வ.வானுசன்-161, இ.தரணிகா-160,க.மாதங்கன்-160,பு.கிருஷாந்-160, செ. தசலோஜிதன்-160, ப.ஜித்தேஸ்-158, ர.சங்கீதசர்மா-158,அ.லக்சனா-157, க.டர்மினி-157,த.சரண்யா-157, ச.அஸ்வின் சர்மா-156, பி.தனாமிகா-156,க.டிலக்சனா-156, க.டதுஷிகா-156,ரா.பிரவீன்-156,ந.கேசவன்-156, ல. விஷோபன்-155,ச.சந்தோஷ்-155, ர.ரஜிந்-155, தெ.கவிதரன்-155, ம.ஷாயித்தியா-155,வ.டஷ்வினா-154, கோ.தீபிகன்-154, ஞா. அபிநயா-154,அ.புவிதன்-154, மை.அனுஷன்-153,ஜெ.ஆர்த்தி-153, வி.லக்ஷிகன்-153, பு.கனிஷா-153. (இ)

## போர்க்குற்றவாளிகளை ஐ.நாவில் காப்பாற்றிய

# மைத்திரி அரசை நல்லாட்சி அரசென இனியும் கூறுவது முட்டாள்தனமே

### தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**இலட்சக்கணக்கான தமிழ் மக்களை கொன்றொழித்தவர்களை ஐ.நாவில் காப்பாற்றிய மைத்திரி அரசினை நல்லாட்சி அரசு என இனியும் கூறுவது அடி முட்டாள்தனம் என தமிழ்த்தேசிய மக்கள் 'முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.**

வடக்கில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் மற்றும் குடும்பத் தலைமைத்துவப் பெண்கள்தொடர்பான விசேட கலந்துரையாடல்யாழ்ரில்கோஹோட்டலில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் மாறிமாறி ஆட்சிக்கு வரும் தென்னிலங்கை பேரினவாத சக்திகளினால் நசுக்கப்பட்டுக் கொண்டே உள்ளது.

பேரினவாதிகளின் அடக்கு முறை வடிவங்களே மாற்றமடைந்து வருகின்றன.மாறாக தமிழ் மக்களை அடக்கு முறைகளிலிருந்து விடுவிப்பதற்கு தற்போது ஆட்சியிலுள்ள அரசு உள்ளடங்கலாக எந்த அரசும் முயற்சி செய்யவில்லை.

இலட்சக்கணக்கான தமிழ் மக்களை கொன்றொழித்த உலக போர் விதிகளை மீறி யுத்தம் செய்தவர்களை ஆட்சியிலமர்ந்துள்ள நல்லாட்சி எனக் கூறப்படுகின்ற அரசு காப்பாற்றியுள்ளது.

குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படல் வேண்டுமென்ற நியதிக்கு மாறாக பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டுமென்ற நீதிக்கு முரணான நிலை,நல்லாட்சி என சொல்லப்படும் இந்த அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

யுத்தக்குற்றவாளிகள் சர்வதேசத்திடமிருந்து பாதுகாக்கப்படுவதற்காக எமது இனம் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

எமக்கு ஐ.நாவில் இந்த அரசினால் இழைக்கப்பட்ட அதியுச்ச அநீதியை மறந்து நாம் இனியும் இந்த அரசினை நல்லாட்சி அரசாங்கம் எனக்கூறுவோமானால் அதுவே இந்த உலகில் அடிமுட்டாள் தனமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

சுன்னாகம் சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் வர்த்தக சங்க மேல்மாடிக் கட்டடத்தில் தலைவர் ஆ.உதயசங்கர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினரும் இளைஞர் விவகார விளையாட்டுத்துறைப் பொறுப்பாளருமான இ. ஆனோல்ட் கலந்துகொள்ளவுள்ளார்.

அன்றையதினம் சுன்னாகம் சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச்சங்கத்தின் எல்லைக்குட்பட்ட அனைத்து சிகை ஒப்பனை நிலையங்களுக்கும் பொதுவிடுமுறை தினமாகும்.

எனவே அனைத்து சிகை ஒப்பனை நிலைய உரிமையாளர்கள் மற்றும் அங்கத்தவர்களை மேற்படி பொதுக்கூட்டத்திற்கு கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ-5)




## காய்ந்து போகாத இரத்தக் கறைகள்

வல்வெட்டித்துறை மானங்கனை இளங்கதிர் கலாமன்றத்தின் அனுசரணையில்கம்பிகளின் மொழி பிறேமின் காய்ந்து போகாத இரத்தக் கறைகள் எனும் குறுநாவல் வெளியீட்டுவிழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லியடி உதயன் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் ப.சர்மிலன், கலாசார உத்தியோகத்தர் திருமதி. ரே.செல்வசுகுணா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5-60)

## மூன்று மாதகாலக் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் மனிதவள முகாமைத்துவ (Human Resource Management) மூன்று மாத காலக்கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தி பெற்ற அனைவரும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். இக்கற்கைநெறிக்குரிய அனைத்து வகுப்புக்களும் பிறவுண் வீதி,கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் இடம்பெறும். விண்ணப்ப படிவங்களை இன்று முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ்.பிராந்தியநிலைய உதவிப்பணிப்பாளர் கேசுந்தவேல் அறிவித்துள்ளார். (இ-5)

## புதிய பயிற்சிகள் 15இல் ஆரம்பம்

(கரணவாய்)

வடமராட்சி வதிரி கரவெட்டியில் உள்ள சுருக்கெழுத்து கழகத்தில் பாடசாலையை விட்டு விலகிய க.பொ.த (சா.த) சித்தியடைந்தோருக்கான புதிய பயிற்சிகள் இம்மாதம் 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வாரநாட்களில் தமிழ்சுருக்கெழுத்து. தட்டெழுத்து. தமிழ் ஆங்கில தட்டெழுத்து.கணனித் தட்டெழுத்து. கணனி Ms Office பயிற்சிகளும். வார இறுதிநாட்களில் ஆங்கில சுருக்கெழுத்து. கணனி DTP . சிங்கள மொழிப் பயிற்சி வகுப்புகள் என்பனவும் நடைபெறவுள்ளன.

இப் பயிற்சி சலுகை அடிப்படையில் வசதி குறைந்தோருக்கு முன்னுரிமை கொடுத்து நடத்தப்படும் எனவும் ஆர்வமுடையோர் கழகத்தில் வாரநாட்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம் எனவும் மேலும். விபரங்களைப் பெறவிரும்புவோர் 021 226 4211 அல்லது 077 864 8213 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என கழகத் தலைவர் வ. சிவச்சந்திரதேவன் தெரிவித்துள்ளார். (இ-5-60)

## யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்தும் பாரதி விழா இன்று

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தும் பாரதி விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச் சங்கத்தின் பெருந் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இநநிகழ்வில் யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் வடிவாம்பிகை சுபதாஸ் தமிழ்த்தாய் வாழ்த்திசைப்பார்.

நிகழ்வின் அனுசரணையாளரான கிருபா லேணர்ஸ் உரிமையாளர் கிருபாகரன் தம்பதியர் மங்கல விளக்கேற்றுவர். தமிழ்ச் சங்கப் பொருளாளர் ச.லலீசன் வரவேற்புரையாற்றுவார்.

இந்தியத் துணைத்தூதர் ஆ. நடராஜன் தொடக்கவுரை ஆற்றுவார். பாரதி கண்ட அதியுயர் மானுடன என்ற பொருளில் கோகிலா மகேந்திரனின் சிறப்புரையும் யாழ். முன்னணிக் கலைஞர்கள் இணைந்து வழங்கும் எட்டயபுரத்து ஏழிசை என்ற பொருளில் பாரதி பாடல்கள் இசை நிகழ்ச்சியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத்துறை விரிவுரையாளர் சத்தியப்பிரியா கஜேந்திரனின் நெறியாள்கையில் நீர்வேலி பொன்சக்தி கலாகேந்திரா நாட்டியப்பள்ளியினர் வழங்கும் உதயகன்னி என்ற நாட்டிய நாடகமும் இடம்பெறவுள்ளன. தமிழ்ச் சங்கத் துணைச்செயலர் லோ. துஷிகரன் நன்றியுரையாற்றுவார். (இ-10)

# விமல் தரப்பினர் இல்லாமல் சு.க. வெற்றி பெறமுடியாது

## அடித்துச் சொல்கின்றார் காஞ்சன

(கொழும்பு)

விமல் வீரவன்ச தரப்பினர் இல்லாமல் சுதந்திரக் கட்சியால் ஒருபோதும் தனித்து தேர்தல்களில் வெற்றி பெறமுடியாது என்று மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுபபினர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பி.பி.சி.சந்தேசய சேவைக்கு அளித்துள்ள செவ்வியில் அவர் தொடர்ந்தும் தெரிவித்துள்ளதாவது,

விமல் வீரவன்ச தரப்பினர் இன்றி தேர்தல்களில் தனித்துப் போட்டியிட்டு வெற்றிபெறுவதைக் குறித்து சுதந்திரக் கட்சியால் நினைத்துப் பார்க்கவே முடியாது.

எனவே அவர்களையும் இணைத்துக் கொண்டு பயணிப்பதே சுதந்திரக் கட்சியின் அரசியல் எதிர்காலத்தை உறுதிப்படுத்தும்.

மறுபுறத்தில் சுதந்திரக் கட்சியினருக்கு விமல் எந்தளவுக்கு முக்கியமோ. அந்தளவுக்கு சுதந்திரக் கட்சியின் வாக்குகள் இன்றி விமல் வீரவன்ச தரப்பினரும் வெற்றி பெற முடியாது.

எனவே அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அவசியம் குறித்து நான் ஜனாதிபதியிடம் விளக்கமாக எடுத்துரைத்துள்ளேன். மிக விரைவில் நாங்கள் முன்போன்று இணைந்து செயலாற்றுவதற்கான காலம் வரும் என்றும் காஞ்சன விஜேசேகர மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# 50 இலட்சமும் இல்லை 100 இலட்சமும் இல்லை

## நாடாளுமன்றில் குமார வெல்கம ஆவேசம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுவந்த 50 லட்சம் ரூபா நிதி 100 இலட்சமாக அதிகரிக்கப்படுமென அறிவிக்கப்பட்ட போதும், இன்றுவரை 10 மாதங்கள் கடந்துள்ள நிலையில், 50 லட்சமும் இல்லை. 100 இலட்சமும் இல்லை என முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் எதிர்க்கட்சி உறுப்பினருமான குமார வெல்கம குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நெல், தேயிலை, இறப்பர் ஆகியவற்றுக்கான உத்தரவாத விலையை வழங்கக்கோரும் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோது மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டிய அவர் மேலும்தெரிவிக்கையில்,

நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கு வருடந்தோறும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியாக 50 இலட்சம் ரூபா வழங்கப்பட்டு வந்தது. இந்த அரசு வந்தவுடன் அந்த 50 இலட்சம் ரூபாவை 100 லட்சம் ரூபாவாக அதிகரிப்பதாக கூறியது.

ஆனால், இவ்வருடம் 10 ஆவது மாதமும் தொடங்கிவிட்ட போதும் 50 இலட்சம் ரூபாவும் இல்லை.ம 100 லட்சம் ரூபாவும் இல்லை. இனிமேல் தந்தால் அதனை நாம எப்படி சிறந்த முறையில் செலவுசெய்ய முடியும்? அவசர அவசரமாக அநியாயமாகத்தான் செலவிட வேண்டியேற்படும்.

அடுத்ததாக, நாடாளுமன்றத்தில் விவாதங்கள் இடம்பெறும் போது அமைச்சர்கள் கட்டாயம் சபையில் இருக்க வேண்டும் என பிரதமர் அறிவுறுத்தியிருந்தார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# சர்வதேச சிறுவர், முதியோர் விழா

(யாழ்ப்பாணம்)

கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் சர்வதேச சிறு வர், முதி யோர் விழா நாளை ஞாயி ற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

பிரதம விருந்தினராக சட்டத்த ரணி ஜொனி மருதநாயகம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.யூட், யாழ். மாந கர சபை பொதுசன தொடர்பு உத்தியோகத்தர் ச.யோகசிவம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன் கௌரவ விருந்தினர்களாக ஜே/83 கிராம அலுவலர் திருமதி. கோபிசாலினி, ஜே/ 83 அபிவிருத்தி உத்தி யோகத்தர் பே. பிரபாலினி, ஜே/83 சமுர்த்தி உத்தியோகத்தர் அ.வேல் அழகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)


## English/ Sinhala பிரத்தியேக வகுப்புக்கள்

6 ஆம் தரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள், தொழில் புரிவோர் இணைந்து கொள்ளலாம்.

அடிப்படையிலிருந்து G.C.E (O/L) வரை கற்பிக்கப்படும்

ஆசிரியர் T.Sagathevan, B.A.London பிரத்தியேக மொழி பெயர்ப்பு வேலைகள் (மும்மொழிகளிலும்)

ஆய்வுக்கட்டுரைகள், கடிதங்கள், படிவங்கள் நிரப்பல்

T.Phone: 021 222 3520, 077 821 0178

(981)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2015 தரம் 5 இல் எமது கல்வியகத்தில் கல்வி கற்ற மாணவர்களில் அகில இலங்கை ரீதியில் புலமைப்பரிசில் பரீட்சையில் முதன்மை பெற்ற மாணவர்களையும் அவர்களோடு சித்தியெய்திய 400க்கும் மேற்பட்ட ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.


ப.வசீகரன்-192 மா.நிலை-01


சி.துளசிகன்-191 மா.நிலை-02


ர.திலக்சன்-188 மாவட்ட நிலை-05


ஸ்ரீ.கஜலக்ஷன்-186 மா.நிலை-09


மு.சஞ்சயன்-186 மா.நிலை-09

அன்பொளி கல்வியகம்
யாழ்.இந்துக் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.



## அதிரடிச் சலுகை

வலம்புரியின் அதிரடிச் சலுகை

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

ஆகியவற்றுக்கு

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு :-
021 221 7603,
021 321 0815
021 567 1543

Valampurii@yahoo.com


## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 69 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L/ பிரான்ஸ் NOT PR<br>தொ.இ: B/1265 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 18 1/4<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: G/2013 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 48 செவ் 7 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: O/L/ லண்டன் PR<br>தொ.இ: B/1281 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 34 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்<br>தொ.இ: G/2020 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 8 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L/ ஜேர்மன் PR<br>தொ.இ: B/1283 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 10 செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Diploma/ ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/2024 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 13<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/1285 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 62 செவ் 1 ல்<br>உயரம்: 5<br>தகைமை/தொழில்: A/L/ பிரான்ஸ் NOT PR<br>தொ.இ: G/2031 |


## சேவைநலன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

10.10.2015

திருமதி இராஜேஸ்வரி சிவானந்தம் - S.L.T.S-I



"வாழக்கல்மின்" எனும் வாசகத்திற்கு அமைவாக வாழ்ந்து கண்ணியமும் கட்டுப்பாடுகளும் நிறைந்த வாழ்க்கைப் பண்புகளோடு கடமைமிகு சேவகியாகத் திகழ்ந்த செம்மல் ஓய்வு காலத்திலும் உள்ளத்தில் உவகையுடன் வாழ உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சேவை விபரம்

யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி- 03.06.1977-26.06.1977
யா/ வீமன்காமம் மகா வித்தியாலயம்- 27.06.1977-31.12.1979
யா/பலாலி ஆசிரியர் கலாசாலை- 01.01.1980-31.12.1982
மன்/ முருங்கன் மகா வித்தியாலயம்- 01.01.1983- 31.03.1989
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம் - 01.04.1989-06.09.2009
யா/ உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை- 07.09.2009-10.10.2015 வரை

(900)

பாடசாலைச் சமூகம்
யா/ உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை.



## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# 2.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இரு வீதிகளின் புனரமைப்பு பணி ஆரம்பம்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் 2.5 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் எழுத்தூர் மற்றும் தாழ்வுபாடு கிராமங்களில் இரண்டு வீதிகளை புனரமைக்கும் திட்டத்தை மன்னார் மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

இதற்கமைய எழுத்தூர் சந்தி முதல் தலைமன்னார் பிரதான வீதியைதொடுக்கும் வீதியும் தாழ்வுபாடில் கிறிஸ்தவ ஆலயம் தொடங்கி கடற்கரைக்கு செல்லும்வீதியும் புனரமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான ஆரம்ப வேலைகளை வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் அண்மையில் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்விற்கு மதகுருக்கள், வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள், கிராம மட்ட அமைப்புக்களின நிர்வாக சபை அங்கத்தவர்கள், மீனவர் சங்கங்களின் அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (2-9)

# ஒட்டுசுட்டான்-மாங்குளம் பிரதான வீதியில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரிப்பு

## அச்சத்துடன் பயணம் மேற்கொள்வதாக பயணிகள் தெரிவிப்பு



(பனிக்கன்குளம்)

ஒட்டுசுட்டான்-மாங்குளம் பிரதான வீதியில் பயணிக்கின்றவர்கள் காட்டு யானைகளினால் பெரும் இடர்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது, மேற்படி வீதியில் பிற்பகல் 3 மணிக்கு பின்னர் யானைகள் நடமாடுவதாகவும் இதனால் வாகனங்கள், துவிச்சக்கரவண்டிகள் ஆகியவற்றில் பயணிப்போர்அச்சத்துடன்செல்லவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

அண்மை நாட்களாக மாங்குளம்-ஒட்டுசுட்டான் வீதியில் மணவாளன் பட்டமுறிப்புக்கும் ஒட்டுசுட்டானுக்குமிடையில் மூன்று இடங்களில் யானைகள் கூட்டமாகவும் தனியாகவும் நின்று வீதியால் பயணிப்போருக்கு இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளது. சுமார் 30 யானைகள் அண்மை நாட்களாக வீதியில் நடமாடித் திரிந்ததாக பொது மக்கள் தெரிவித்தனர்.

இந்த யானைகள் விவசாய நிலங்களினுள் உள்நுழைந்து பயிர் வகைகளை நாசப்படுத்துவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வளவு தொகையான யானைகள் இப்பகுதியில் கடந்த காலங்களில் இல்லையெனவும் தென்பகுதியில்இருந்து கொண்டு வரப்பட்டிருக்கலாம் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாக இருப்பினும் உரிய அதிகாரிகள் இதனைக் கவனத்திற் கொண்டு பயணிகள் ஆபத்தை எதிர்கொள்வதற்கு முன்னர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-281)

# கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

வடக்கு மாகாண தொழில்சார் ஊடகவியலாளர்களின் சங்கம், ஊடக ஊழியர்களின் தொழிற் சங்க சம்மேளனம் இணைந்து தகவல் அறியும் உரிமை யாருக்காக? எதற்காக? எனும் மக்கள் கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30மணிக்கு பரந்தன் பொதுநோக்கு மண்டபத்தில் ஊடக ஊழியர்களின் தொழிற் சங்க சம்மேளன பிரதான செயலாளர் தர்மசிறி லங்காபேலி தலைமையில் நடைபெறும்.

கருத்துரைகளை திருகோணமலை வளாக மக்கள் தொடர்பாடல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ரகுமான்,யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் திருமதி கோஷலி மனோகரன்.யாழ். பல்கலைக்கழக மொழியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் சாமிநாதன் விமல் ஆகியோர் வழங்கவுள்ளனர். (2)

**தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்**

**மு/உடையார் கட்டு ஆரம்ப பாடசாலை**

பா.தனுசன்-163

**வவு/கணேசபுரம் விநாயகர் வித்தியாலயம்**

தி.ரினுசியா-158




# 2016 ஆம் ஆண்டில் பாடசாலை தவணைகள் ஆரம்பம் தொடர்பான விபரங்கள் வெளியீடு

(மல்லாவி)

**மத்திய கல்வி அமைச்சினால் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு பாடசாலைகளுக்கான புதிய தவணைகள் ஆரம்பம் தொடர்பான விபரங்களை கல்வியமைச்சின் செயலாளர் டபிள்யூ. எம்.பந்துலசேன அறிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது, 2016 ஆம் ஆண்டு அரச மற்றும் அரச உதவி பெறும் பாடசாலைகள் அனைத்தும் 197 நாட்கள் நடத்தப்பட வேண்டும்.

தமிழ் - சிங்கள பாடசாலைகளின் முதலாவது தவணை எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி வரையும் நடத்தப்படவேண்டும்.

இரண்டாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 29 ஆம் திகதி வரை நடத்தப்பட வேண்டும்.

மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகள் ஓகஸ்ட்மாதம்31ஆம்திகதிமுதல்டிசெம்பர்மாதம்2 ஆம் திகதி வரை நடத்தப்பட வேண்டும்.

இதேவேளை முஸ்லிம் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 4 ஆம்திகதி முதல் ஏப்ரல்மாதம் 11 ஆம் திகதி வரை நடத்தப்பட வேண்டும்.

இரண்டாம் தவணையின் முதலாம் கட்ட ஆரம்பம் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 3 ஆம் திகதி வரையும் இரண்டாம் கட்டம் ஜூலை 7 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வரையும் நடத்தப்பட வேண்டும்.

மூன்றாம் தவணை ஆரம்பமானது ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை நடத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் பாடசாலைகள் ரம்ழான் விசேட விடுமுறையின் நிமிர்த்தம் ஜூன் மாதம் 6 ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 6 ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம்7,11 ஆகிய வகுப்புக்களில் நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்ட செயலமர்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிவரை துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். (2-15)

# “செவ்வானம்” கவிதை நூல் அறிமுகம்

(வவுனியா)

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் பூ.பிரதீபனின் மகரந்தம் படைப்பான “ செவ்வானம் ” கவிதை நூல் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மொழிப்பெயர்வுக்கற்கைகள் பிரிவு இணைப்பாளரும் சிரேஷ்ட ஆங்கில மொழி விரிவுரையாளருமான கலாநிதி சுந்தையா ஸ்ரீ கணேசன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதனை அடுத்து நூல் வெளியீடு இடம் பெறும். (2)

# பிரதேச அபி.நிலையங்களின் மாவட்ட மட்ட கண்காட்சி

கிளிநொச்சி மாவட்ட செயலகம் நடத்தும் பிரதேச மகளிர் அபிவிருத்தி நிலையங்களின் ஆடை வடிவமைத்தல் மற்றும் அழகுக் கலையும் மனைப்பொருளியலுக்குமான மாவட்ட மட்டக் கண்காட்சி மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் நா.பஞ்சலிங்கத்தின் தலைமையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு மாவட்ட கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ள நிகழ்வுக்கு வடக்குமாகாண கிராம அபிவிருத்திதிணைக்களம் அனுசரணையை வழங்கவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி.மீன்பிடி.போக்குவரத்து.வர்த்தக வாணிப வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மேலதிக மாவட்ட செயலாளர் சி.சத்தியசீலன், வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் ஜே.ஜே. பெலிசியன் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

கௌரவ விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன் கலந்து கொள்ளவுள்ளார். (2-254)

# அரைக்கும் ஆலையை பாவனைக்கு திறக்குமாறு மக்கள் கோரிக்கை

(பனிக்கன்குளம்)



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒலுமடு பிரதேசத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் சேவாலங்கா நிறுவனத்தினால் அமைத்துக்கொடுக்கப்பட்ட மம்மில் விநாயகர் விவசாய கம்பனி அரைக்கும் ஆலை நெற்களஞ்சியசாலை மக்கள் பாவனைக்கு வழங்கப்படவில்லையென மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த ஆலையின் கட்டட வேலைகள் பூர்த்தியான நிலையில் மக்களின் பாவனைக்கு திறக்கப்படாமல் பற்றைகள் சூழ்ந்து காணப்படுகின்றது. ஆலை தொடர்பான வேலைகள் மேற்கொள்வதற்கு மேற்படி பிரதேசமக்கள் ஆறு கிலோமீற்றர் தூரம் வரை சென்று வருவதாக கூறுகின்றனர். எனவே உரிய திணைக்கள அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கவனமெடுத்து பாவனையற்று காணப்படும் ஆலையை பயனுள்ள தாக்க ஆவன செய்ய வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-281)

# விவசாயிகளுக்கு உள்ளீடு வழங்கும் நிகழ்வு நேற்று உயிலங்குளத்தில் நடைபெற்றது



(மன்னார்)

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியம்-2015 (PSDG) இன் கீழ் மன்னார் மாவட்டத்தில் வெவ்வேறு திட்டங்களினூடாக விவசாய உள்ளீடுகள் வழங்கும் வைபவம் நேற்று காலை 9 மணியளவில் உயிலங்குளம் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி அ.சிறிரங்கன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், கௌரவ விருந்தினர்களான வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான வைத்திய கலாநிதி ஞா.குணசீலன், சட்டத்தரணி பிரிமூஸ் சிறாய்வா மற்றும் விவசாய திணைக்கள அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விவசாயம் மற்றும் தோட்டச் செய்கைகளை மேற்கொள்ள தேவையான பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்தோடு தெரிவு செய்யப்பட்ட விவசாயிகள் 10 பேருக்கு விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தலா 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான காசோலைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

விவசாயிகளுக்கான குறித்த உள்ளீடுகளை வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், சட்டத்தரணி பிரமூஸ் சிறாய்வா ஆகியோர் இணைந்து வழங்கி வைத்தனர். (2-281)




## சட்டவிரோத மணல் அகழ்வு நிலங்கள் உவர்ப்படையும் அபாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தட்டுவன்கொட்டிக் கிராமத்தின் பயிர்ச்செய்கை காணிகளில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் அகழ்வினை கட்டுப்படுத்துமாறு இப்பகுதி மக்கள் பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள தட்டுவன்கொட்டி கிராமத்தில் பெருமளவான பகுதிகளில் சட்டவிரோதமான மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது.

அதாவது தட்டுவன்கொட்டி கிராமத்தின் நெற்செய்கை காணிகள், தோட்டக்காணிகள் உள்ளிட்ட பயிர்ச் செய்கை காணிகளில் உமையாள்புரம், பரந்தன் கோரக்கன்கட்டு உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களால் கனரக வாகனங்களைக்கொண்டு இரவு வேளைகளிலும் பகல் வேளைகளிலும் என்றுமில்லாதவாறு பாரியளவில் சட்டவிரோத மணல் கொள்ளை இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறு இடம்பெற்று வரும் மணல் அகழ்வை தடுத்து தமது பயிர்ச்செய்கை காணிகளை பாதுகாக்க வழி செய்யுமாறு கோரி மாவட்ட அரசாங்க அதிபர், கண்டாவளைப் பிரதேச செயலாளர், பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட சகல தரப்பினருக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளதாகவும் இப்பகுதி கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு மணல் அகழ்வினால் பயிர்ச் செய்கை நிலங்கள் பாதிக்கப்படுவதுடன் கடல்நீர் உட்புகுந்து எஞ்சியிருக்கும் நிலங்களும் உவரடையும் அபாய நிலை காணப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (2)

**உதயநகர் மேற்கு**

## 30 வீட்டுத் திட்டத்தில் சிரமதானப்பணி

உலக வதிவிட தினத்தையொட்டி கிளிநொச்சி உதயநகர் மேற்கு 30 வீட்டுத் திட்டத்தில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சிரமதானப்பணி கிளிநொச்சி மாவட்ட வீடமைப்பு அதிகார சபை முகாமையாளர் யோ.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

அதன்பின்னர் கூட்டம் இடம்பெறும்.

இதில் வீதி புனரமைப்பு, கட்டட புனரமைப்பு, காணி உறுதிகள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் உதயநகர் மேற்கு கிராம அலுவலர், கனகபுரம் கிராம அலுவலர், ஓய்வு பெற்ற கிராம அலுவலர் மு.சிவஞான சுந்தரமூர்த்தி, சங்கச் செயலாளர் செ. இராஜரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2)

## வன்னி விழிப்புணர்வற்றோர் சங்க அங்கத்தவர்களுக்கு உதவிப் பொருட்கள்

(மல்லாவி)

யாழ்.வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் வன்னி விழிப் புணர்வற்றோர் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு ஒரு தொகுதி உதவிப்பொருட்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவுச் சங்க கலாசார மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக வட்டு. இந்து வாலிபர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வன்னி விழிப்புணர்வற்றோர் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை 100 வெள்ளைப் பிரம்புகளும் 200 குடைகள் ஆகியன அன்பளிப்பு செய்யப்படவுள்ளன.

அன்றைய தினம் சங்க அங்கத்தவர்களுக்கு மதிய போசனமும் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (2-15)

## பேருந்து உரிமையாளர் சங்கங்களின் தலைமை சங்கத்துக்கான நிர்வாகத் தெரிவு

வடக்கு மாகாணத்தை பிரதிபலிக்கும் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் தலைமை சங்கத்துக்கான புதிய நிர்வாகத் தெரிவு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சியில் உள்ள கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதிய நிர்வாகத் தெரிவுக்கு வெளி மாவட்டங்களுக்கிடையில் சேவைகளை வழங்கும் பேருந்து உரிமையாளர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் போக்குவரத்து தொடர்பாக பல்வேறு ஒழுங்கீனங்களும் வன்முறைகளும் நாளாந்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் பொது மக்களுக்கு சிறந்த பாதுகாப்பான சேவையினை வழங்குவது மட்டுமல்லாது பேருந்து உரிமையாளர்களின் நலன்களை பாதுகாக்கும் விதமாகவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கமானது நீண்டகாலமாக இயங்காமல் இருந்து தற்போது புதிதாக நிர்வாகத்தை தெரிவு செய்து மீண்டும் இயங்க தங்கள் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

அதனடிப்படையில் பேருந்து உரிமையாளர்களின் நலன்களை பாதுகாக்கும் நோக்கிலும் பொது மக்களுக்கு தரமானதும் பாதுகாப்பானதுமான ஒரு போக்குவரத்து சேவையை வழங்குவதற்கும் உரிமையாளர்களின் நலன்கள் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் ஒட்டுமொத்த வடக்கு மாகாணத்தின் ஒரே குரலாக குரல் கொடுப்பதற்கும் ஏதுவாக மேற்படி அமைப்பினை புனரமைப்புச் செய்வது காலத்தின் ஒரு தேவையாக இருக்கின்றது.

மேற்படி கூட்டத்துக்கு வெளி மாவட்டங்களுக்கிடையில் சேவையினை வழங்கும் பேருந்து உரிமையாளர்கள் தவறாது சமுகமளித்து வினைத்திறனான நிர்வாகக் கட்டமைப்பை தெரிவு செய்து வடக்கு மாகாணத்தில் பாதுகாப்பான ஒரு தரமான சேவையை பொது மக்களுக்கு வழங்குவதற்கும் உரிமையாளர்களின் நலன்களை பாதுகாப்பதற்கும் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (2-9)

## பப்பாசி நடுகை செய்யப்பட்ட காணிகளில் யானைகள் உள்நுழைந்து அட்டகாசம்

(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்டத்தில் தற்போது பப்பாசி செய்கை சிறப்படைந்துள்ளதுடன் மீள் குடியேறிய பிரதேச மக்களின் வாழ்வாதார தொழிலாகவும் காணப்படுகின்றது.

இந்நிலையில் பட்டிக்குடியிருப்புப் பிரதேசத்தில் பப்பாசி செய்கையில் ஈடுபடும் செய்கையாளர்கள் தமது பயிர்ச்செய்கை நிலங்களுக்குள் நுழையும் யானைகள் கூட்டம் பயிர்களை சேதப்படுத்துவதாக தெரிவிக்கின்றனர்.

இங்கு மின்சார வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படாமையின் காரணமாக யானைகளில் இருந்து பயிர்களை பாதுகாத்துக்கொள்ள முடியாதுள்ளதாக தெரிவிக்கும் பப்பாசி செய்கையாளர்கள், தமது கிராமங்களுக்கு மின்சார வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை மீள்குடியேறிய பகுதிகளை இலக்காகக்கொண்டு பப்பாசி செய்கைகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில் தேவையான பசளைகளை பெற்றுக்கொள்வது மற்றும் யானைகளின் தாக்கம் என்பன பொருளாதார மற்றும் இழப்புகளை ஈடு செய்ய பெரும் சிரமமாகவுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

வெளிநாட்டு ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு செய்கை பண்ணப்பட்ட பப்பாசி செய்கையானது தற்போது உள்ளூரிலும் பெரும் கிராக்கியாக உள்ள நிலையில் இவ்வாறான தாக்கம் செய்கையாளர்களை இழப்புகளுக்குள் தள்ளியுள்ளமையினால் விவசாய திணைக்கள அதிகாரிகள் இச்செய்கையாளர்கள் தொடர்பில் அக்கறை கொள்ள வேண்டும் என பயிர்ச் செய்கையாளர்கள் கோரிக்கை விடுகின்றனர். (2-281)





**கிளிநொச்சி மாவட்ட அரச ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் ஏற்பாட்டில் ஓய்வு பெற்ற மூத்தோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்றபோது....**

(படங்கள்:- சிவநகர் செய்தியாளர்)

# மகிந்தவின் நிழல் ஆட்சியா தற்போது நடைபெறுகிறது?

## வடக்கு மக்கள் கேள்வி

**(யாழ்ப்பாணம்)**

**மகிந்த அரசின் காலத்தில் மீள்குடியேற்றத்திற்கு இராணுவமே தடையாகவுள்ளது எனக் கூறியவர்கள் தற்போதும் அதே காரணத்தை கூறுகின்றார்கள். அப்படியானால் மகிந்தவின் நிழல் ஆட்சியா நடைபெறுகின்றது? என வலி.வடக்கு மக்கள் கேள்வி யெழுப்பியுள்ளனர்.**

உறுதியளித்தபடி ஆறுமாத காலத்திற்குள் எம்மை சொந்த இடத்தில் மீள் குடியேற்றம் செய்யாவிட்டால் வெள்ளைக் கொடியுடன் நாமே சென்று குடியேறுவோம் என எச்சரித்துள்ளனர்.

எமது பிரச்சினைகளுக்காக உயிரை கொடுத்து போராடிய போதிலும் எங்களுக்கு இன்னமும் விடிவில்லை.

உண்ணாவிரதப் போராட்டங்கள், பேரணிகள் என எத்தனையோ! எம்மை சொந்த இடத்தில் மீளக்குடியமர்த்த கோரி முன்னெடுத்திருந்தோம்.

நாம் தங்கியுள்ள நலன்புரி முகாம்களுக்கு ஜனாதிபதி மீள்குடியேற்ற அமைச்சர், வெளிநாட்டு தலைவர்கள் வந்து அடுத்த இரு மாதங்களிற்கு மீள்குடியேற்றம் என ஒவ்வொருவருடமும் கூறிச்செல்வார்கள். இப்போது எத்தனை இரண்டு மாதங்கள் கழிந்து விட்டது என்பது தெரியவில்லை.

மகிந்த ஆட்சிக் காலத்தில் மீள் குடியேற்றத்திற்கு இராணுவமே தடையாகவுள்ளனர் என தற்போது ஆட்சியிலிருந்தவர்கள் அப்போது கூறியிருந்தனர்.

ஆனால் இப்போதும் மீள் குடியேற்றத்திற்கு இராணுவமே தடையாகவுள்ளனர் என அப்போது கூறியவர்கள் இப்போதும் இடைவிடாது கூறிக்கொண்டேயுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் காலத்தில் இராணுவத்தை கட்டுப்படுத்த முடியாது என்ற நிலைமை இருந்தது.

ஆனால் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று தேசிய அரசாங்கம் அமைத்து தம்மை நல்லாட்சி அரசாங்கம் எனக்கூறி கொள்பவர்கள், மீள்குடியேற்றத்திற்கு இராணுவம் தடையாகவுள்ளது என கூறுவார்களானால் இதுவும் மகிந்தவின் நிழல் ஆட்சி என்பதில்மாற்றுக்கருத்திற்கிடமில்லை.


ஐ.நாவினை ஏமாற்றியவர்கள் எம்மை ஏமாற்றலாம் என நினைத்தால் அது பாரிய விளைவை ஏற்படுத்தும். கூறிய படி 6மாதங்களிற்குள் சொந்த இடங்களில் எம்மை மீள்குடியேற்றம் செய்ய வேண்டும் இல்லையேல் நாமே வெள்ளைக் கொடியுடன் அத்துமீறி மீள்குடியமர்வோம் என அம்மக்கள் மேலும் எச்சரிக்கை செய்துள்ளனர்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினால் வடக்கில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் மற்றும் குடும்பத்தலைமைத்துவப் பெண்கள் தொடர்பான கலந்துரையாடலொன்று யாழ்.ரில்கோ சிற்றி ஹோட்டலில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் போதே மேற்படி கருத்தினை மீள் குடியேற்றம் செய்யப்படாத மக்கள் முன்வைத்துள்ளனர். (இ-

# மரண தண்டனையை அமுல்படுத்தக் கோரி விரோத அரசியலை வெளிப்படுத்தியுள்ளனர்

## டிலான் பெரேரா குற்றச்சாட்டு



(கொழும்பு)

"ஷரிஆ" சட்டத்தை இச் சபையில் எதிர்த்தவர்கள் இன்று மரண தண்டனை எமது நாட்டில் அமுல்படுத்தப்பட வேண்டுமென பிரேரணையை முன் வைப்பதன் மூலம் பரஸ்பர விரோத அரசியலை வெளிப்படுத்தியுள்ளனர் என பிரதியமைச்சர் டிலான் பெரேரா பாராளுமன்றில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற குற்றவியல் கருமங்களில் சீனாவுடன் பரஸ்பர உதவியளித்தல் தொடர்பான கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே பிரதியமைச்சர் டிலான் பெரேரா இவ்வாறு தெரிவித்தார்.

பிரதியமைச்சர் சபையில் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராவாரா? அநுர திஸாநாயக்க எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவாவாரா? என எவரும் கனவு கூட கண்டிருக்கமாட்டார்கள்.

ஆனால் கனவு விடயம் இன்று நனவாகியுள்ளது. இதற்கு இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து இணக்கப்பாட்டு ஆட்சியை ஏற்படுத்தியதே இவ்வாறான வரலாற்று மாற்றத்தை, கனவு காணாத மாற்றத்தை ஏற்படுத்த முடிந்தது.

எனவே இனியும் இதனை கட்சி நிறக்கண்ணாடிகளால் பார்க்காது யதார்த்தத்தை புரிந்து எதிர்ப்பவர்கள் செயற்பட வேண்டும். இது ஒரு புதிய அரசியல் கலாசாரமாகும்.

அன்று ரிஷானாவை சவுதியில் கொன்ற போது "ஷரிஆ" சட்டத்தை இச் சபையில் எதிர்த்தவர்கள் இன்று இச் சபையில் மரண தண்டனையை அமுல்படுத்த வேண்டுமென பிரேரணையை முன்வைக்கின்றனர். இதுதான் பரஸ்பர அரசியல் விரோதச் செயற்பாடாகும்.

சட்டங்கள் விரைவாக செயற்படுத்தப்பட வேண்டும். சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள், பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள், கொலைகள் போன்ற குற்றச் செயல்கள் தொடர்பாக நீதிமன்ற விசாரணைகள் துரிதப்படுத்தப்படும் சட்டங்கள் இயற்றப்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

குற்றம் ஒழிக்கப்பட வேண்டும் குற்றத்தை தூக்கிலிட வேண்டும் என்றும் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார். (இ-10)

# அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு சீனா தயார்

இலங்கைக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு சீனா தயாராக இருப்பதாக அந்நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சீனாவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் லியு சென்மின் உட்பட்ட குழுவினர் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர்.

அதன்போது சீனா- இலங்கைக்கிடையிலான நட்புறவு தொடர்பில் கலந்துரையாடியதுடன், ஜெனிவா மனித உரிமைகள் ஆணையகத்திலும், ஜனாதிபதியின் சீன விஜயத்தின் போதும் சீனா வழங்கிய ஒத்துழைப்புக்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நன்றிகளைத் தெரிவித்துள்ளார். (இ-10)

# ஓய்வூதிய வயது 65 ஆக உயர்த்தப்பட வேண்டும்!

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு


(கொழும்பு)

அரச பணியாளர்களின் ஓய்வு பெறும் காலம் 65 வயதாக அதிகரிக்கப்படவேண்டும் என்று வெளியுறவுத்துறை பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது அவர் இதனை தெரிவித்தார்.

இலங்கை இன்னமும் நிரந்தரமான ஓய்வூதிய திட்டம் ஒன்றை கொண்டிருக்கவில்லை என்றும் இதன்போது அவர் தெரிவித்தார்.

இலங்கையில் ஆண்களின் வாழ்காலம் 72ஆகவும் பெண்களின் வாழ்காலம் 78ஆகவும் உள்ளது.

இந்தநிலையில் இலங்கையின் இறுதிக் கணக்கெடுப்பின்படி தொழில்படையில் 5.5 மில்லியன் பேர் ஆண்கள், 2.5மில்லியன் பேர் பெண்கள் என்றும் ஹர்ஷ தெரிவித்தார். (இ-10)



யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் 60 ஆவது ஆண்டின் இறுதி நாள் நிகழ்வு கடந்த புதன்கிழமை வித்தியாலய அதிபர் அருட்சகோதரி மரியஜீவந்தி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்,கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா,சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட குருமுதல்வர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்,கார்மேல் கன்னியர் சபை அருட்சகோதரி தெரேசாறானி ஆகியோர் கலந்து கொண்டனர். வித்தியாலயத்தின் 60ஆவது ஆண்டு மலர் வெளியீட் டின் முதற்பிரதியை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் இருந்து யாழ்.மறை மாவட்ட குருமுதல்வர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் பெற்றுக்கொண்டார்.

(படங்கள்:-பொ.சோபிகா)

# கேட்டிருப்பாய் காற்றே!

உலக மொழிகளில் தமிழ் மொழி ஒரு செம்மொழி என்பது இன்று எல்லோராலும் அறியப்பட்டுள்ளது. எனினும் தமிழ்மொழியைக் கற்கும் ஆர்வம் தமிழரிடையே குறைந்துள்ளது.

குறிப்பாகப் புலம்பெயர் நாடுகளில் வதியும் தமிழரிடையே இந்நிலை காணப்படுகின்றது. இதனால் மெல்லத் தமிழினிச் சாகும் என்ற கருத்தும் தோன்றியுள்ளது. புதுமைக்கவிஞன் பாரதியே இக் கருத்தைப்பாடியுள்ளான் எனச் சான்று காட்டுவோரும் உளர். அவர்களுக்கு முதலில் ஒரு தெளிவை நாம் ஏற்படுத்த வேண்டியுள்ளது.

பாரதியின் காலம் தமிழ் மொழி, பிறமொழியான ஆங்கிலமொழியின் செல்வாக்கால் இடருற்ற காலமாகும். அதனைப் பாரதியே தனது கவிதையில் பதிவு செய்துள்ளான்.

*இன்றொரு சொல்லி*
*னைக் கேட்டேன்-இனி*
*ஏது செய்வேன்?*
*எனதாருயிர் மக்காள்!*
*கொன்றிடல் போலொரு*
*வார்த்தை-இங்கு*
*கூறத் தகாதவன்*
*கூறினன் கண்டீர்!*
*புத்தம் புதிய கலைகள்-*
*பஞ்ச பூதச் செயல்களின்*
*நுட்பங்கள் கூறும்*
*மெத்த வளருது மேற்கே-*
*அந்த மேன்மைக்*
*கலைகள் தமிழினில்*
*இல்லை*
*சொல்லவும்*
*கூடுவதில்லை-அவை*
*சொல்லுந் திறமை தமிழ்*
*மொழிக்கில்லை*
*மெல்லத் தமிழினிச்*
*சாகும்-அந்த*
*மேற்கு மொழிகள்*
*புவிமிசையோங்கும்*
*என்றந்தப் பேதை*
*உரைத்தான்-ஆ*
*இந்த வசையெனக்*
*கெய்திடலாமோ?*
*சென்றிடுவீர்*
*எட்டுத்திக்கும் -கலைச்*
*செல்வங்கள் யாவும்*
*கொணர்ந்திங்கு*
*சேர்ப்பீர்!*

பாரதி, தமிழ்மொழி ஆரிய மொழிக்கு நிகரான மொழியென கூறியவன் இக் கூற்றை அவன் வெறுமனே கூறவில்லை. தனது இளமைக்காலத்தில் அலகபாத் சர்வகலாசாலையில் இந்தி மொழியையும் வடமொழியையும் கற்றுப் புலமை பெற்ற பின்னரே கூறியுள்ளான். அக்காலத்தில் வடமொழி உயர்ந்த மொழியென்ற செல்வாக்கைப் பெற்றிருந்தது.

வேற்று மொழிச் சூழலில் வாழ்ந்த போது, வேற்று மொழிகளைப் பயின்ற போது தான் பாரதி தன் தாய் மொழியாம் தமிழ்மொழியின் சிறப்பை நன்கு உணர்ந்து கொண்டான். எனவே தமிழ்மொழி பற்றிய பிழையான கூற்றை அவனால் பொறுக்க முடியவில்லை.

மெல்லத்தமிழினிச் சாகும் என்ற கருத்துக்குரிய முக்கிய காரணமாக புத்தம்புதிய கலைகளைப் பற்றியும் ஐம்பூதங்களின் நுட்பங்களைப் பற்றியும் கூறும் ஆற்றல் தமிழ் மொழிக்கு இல்லையென்று கூறப்பட்டுள்ளது.

இது ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் கூறப்பட்ட விடயமாகும். ஆனால் இந்த நூற்றாண்டில் இக் கருத்துப் பொய் யென்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானத்தையும் மருத்துவத்தையும் தமிழ் மொழியினிலேயே பயிற்றலாம் என்பது பத்தொன்பதாம் நூற்றாண்டினிறுதியிலேயே ஈழத்தில் உறுதி செய்யப்பட்டு விட்டது.

மேலை நாட்டைச் சேர்ந்த கிறீன் என்னும் பாதிரியார் இக் கற்கை நெறியை மேற் கொண்டுள்ளார். மேலை நாட்டிலிருந்து மதப் பரம்பல் பணிக்காக வந்த அவர் தமிழைக் கற்றார். தமிழ் மொழி மூலமே விஞ்ஞானத்தையும் மருத்துவத்தையும் பயிற்றினார். மருத்துவக் கல்வியைத் தமிழ் மொழியிலே கற்கலாம் என்ற கருத்தை வரலாற்றிலே பதிவு செய்தார்.

பாரதி தமிழ்மொழிக்கு ஏற்பட்ட இழிவான நிலையைப் போக்க விரும்பினான். அதற்காகவே ஒரு வேண்டுகோளையும் விடுத்தான். சென்றிடுவீர் எட்டுத்திக்கும், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர். இந்தக் கவிதையைப் பாரதி எழுதிய போது புலம் பெயர்ந்து சென்றிருந்த தமிழர்களை அவன் நினைக்கவே இல்லையெனலாம்.

அப்போது பாரதியின் தாயகத்தமிழர் மலேசியாவில் இறப்பர் தோட்டத்திலும் தென்னாபிரிக்காவில் கரும்புத் தோட்டத்திலும் ஈழத்தில் தேயிலைத் தோட்டத்திலும் வேலை செய்யச் சென்றிருந்தனர். அவர்கள் இலக்குப் பொருள்தேட்டமே. அதிலும் பலர் கூலிகளாக வற்புறுத்தி அழைத்துச் செல்லப்பட்டவர்கள். அவர்களைப் பாரதி நாம் இன்றும் காண்பதற்கும் வழி செய்துள்ளான்.

*நாட்டை நினைப்பாரோ-*
*எந்த*
*நாளினிப் போயதைக்*
*காண்பதென்றே*
*அன்னை*
*வீட்டை நினைப்பாரோ-*
*அவர்*
*விம்மி விம்மி விம்மி*
*விம்மி யழுங்குரல்*



*கேட்டிருப்பாய் காற்றே*
*துன்பக்*
*கேணியிலே எங்கள்*
*பெண்கள் அழுதசொல்*
*மீட்டும் உரையாயோ-*
*அவர்*
*விம்மி யழவுந் திறங்*
*கெட்டுப் போயினர்*

புலம்பெயர்ந்து பிறநாட்டிலே வாழ்ந்த பெண்களின் நிலையையே பாரதி பாடியுள்ளான். பிறந்த பொன்னாட்டை விட்டுப் பிறநாட்டிலே சென்று வாழும் பெண்களின் துயரம் பெரிது. எங்கள் பெண்கள் என்ற தொடரால் பாரதி புலம் பெயர்ந்து சென்ற தமிழ்ப் பெண்கள் அனைவரையுமே அடக்கிக் கூறியுள்ளான். கரும்புத் தோட்டத்திலே வீசும் காற்றும் இறப்பர் தோட்டத்திலே வீசும் காற்று தேயிலைத் தோட்டத்திலே வீசும் காற்றும் தமிழ்ப் பெண்களின் அழுத சொல்லைக் கேட்டிருக்கும். பாரதியின் பாட்டு கரும்புத் தோட்டத்திலே அழுத பெண்களைப் பற்றியதாக இருந்தாலும் ஏனைய தோட்டங்களிலே துன்பக் கண்ணீரோடு துவண்டு நின்ற பெண்கள் பற்றியும் நினைக்கத் தூண்டுகிறது.

நாட்டை நினைப்பாரோ, வீட்டை நினைப்பாரோ என பாரதி குறிப்பிடுவது ஒரு பண்பாட்டு நிலையில் தமிழ்ப் பெண்கள் அனுபவித்த அதிர்ச்சியையும் அவலத்தையும் சுட்டி நிற்கிறது. பெண்கள் தாம் பிறந்த நாட்டை விட்டுப் பிறநாட்டுக்குச் செல்லும் போது ஒரு புதிய பண்பாட்டுச் சூழலில் வாழ நேரிடுகிறது. அதிலும் குறிப்பாக பண்பாட்டின் ஒரு கூறாக உள்ள மொழியைப் பேசமுடியாத அவலநிலை ஏற்படுகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாகத் தான் பெற்றெடுக்கும் குழந்தைக்குஒருபிறமொழியையும் பயிற்றவேண்டிய கட்டாயமும் ஏற்படுகிறது. தாய் மொழி, புகலிட மொழியென இரு மொழிகளைக் குழந்தைக்கு அறிமுகம் செய்யும் முதன்மையாசிரியராக தொழிற்பட வேண்டிய பொறுப்பையும் பெண் ஏற்க வேண்டியிருந்தது.

மேலும் வீட்டு நிலையில் மாறுபட்ட நடைமுறைகள்செயற்படுத்தப்பட வேண்டியிருந்தன. மலேசிய,ஆபிரிக்க ஈழ உணவுப் பழக்கங்களும் உடைமாற்றங்களும் மரபாகப் பேணிய பண்பாட்டைக் கைவிட வேண்டிய நிலைக்குத் தள்ளின. எனவே பெண்ணால் வீட்டு வாழ்வியலால் பேணப்பட்டு வந்த தமிழர் பண்பாட்டு நடைமுறைகளின் இறுக்கம் தளர்வடையலாயிற்று. இப் புதிய பண்பாட்டுச் சூழலில் பெண் தன் நாட்டையும் வீட்டையும் நினைந்து விம்மிய முதைக் காற்றுத்தான் கேட்டுச் சென்றது. இந்த அவல நிலை அதாவது தமிழ் மொழிப்பயிற்றலையும் பண்பாட்டுப் பயிற்றலையும் தாய்மார் கைவிடவேண்டிய துன்ப நிலை இன்றும் உளது. இங்கு ஒரு விடயம் நினைவுபடுத்தப் படவேண்டியுளது. பண்டைத் தமிழர் வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் என்னும் புலமைச் சான்றோர் தான் வகுத்த இலக்கண விளக்கங்களை நூற்பா வடிவிலே தந்துள்ளார்.

*முந்நீர் வழக்கம் மகடு*
*உவோடில்லை*

என்னும் நூற்பா சிறப் பாக ஒரு நடைமுறையைக் கூறியுள்ளது. கடலிலே பய ணம் மேற்கொள்ளும் போது பெண்களைக் கூட்டிச் செல்லும் வழக்கம் நடைமுறையில் இருக்கவில்லை. பண் டைத்தமிழர் இலக்கியங்கள் பேசும் தமிழர் வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியரது முடிவு இது. கடற்பயணத்தை ஆண்கள் வணிக நிலையிலே மேற்கொண் டனர்.

இன்னும்ஆண்களின்பிரிவு நான்கு நிலையில் ஏற்பட்டது. பொருள், ஓதல், தூது, பகை எனும் நான்கு பிரிவுகளும் நடைமுறையில் இருந்தன. இவற்றுள் ஓதல் எனும் கல்விப் பிரிவு மட்டுமே சற்று நீண்ட காலமாகமூன்று ஆண்டு என்ற வரையறைக் குட்பட்டிருந்தன. ஏனைய பிரிவுகள் 6 மாதங்கள் என்ற வரையறைக் குட்ப ட்டிருந்தன.

பெண்கள் தாம் வாழும் நாட்டை விட்டுக் கடல் கடந்து இன்னொரு நாட்டிற்குச் செல்வது நாட்டின் பண்பாட்டுத் தளங்களையே மாற்றிவிடும் என்பது இன்று பெரிதும் உணரப்பட்டுள்ளது. எனவே பாரதி குறிப்பிட்ட ஒரு வழியைப் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. எட்டுத் திக்கும் சென்று அங்குள்ள கலைச்செல்வங்கள் எல்லாவற்றையும் தமிழ் நாட்டிற்கு கொண்டு வந்து சேர்ப்பீர் என்ற பாரதியின் வேண்டுகோளே அதுவாகும். பாரதி கலைச்செல்வம் எனப் பயன்படுத்திய தொடர் எல்லா விதமான மேலைத்தேய கற்கை நெறிகளையும் உள்ளடக்கி நிற்கிறது. விஞ்ஞானம், தொழில் நுட்பம் பொறிமுறை யென இன்று வகைப்படுத்தப்பட்டுள்ள கற்கை நெறிகளையே செல்வம் எனக் குறிப்பிட்டான்.

பாரதியின் வேண்டு கோள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இருபதாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டுத் தமிழர் பலர் மேலைநாடுக ளுக்கு கல்விகற்கச்சென்றனர். அங்கு பயின்ற நுட்பங்க ளைத் தாய் நாட்டிலே பயன்படுத்தி நாட்டு வளத்தைப் பெருக்கினர். எனினும் பொருள் தேட்டம் என்றதொரு நிலையே மேலோங்கியிருந்தது.

தமிழ்த்தாய் எனப் பாரதி கூறிய உணர்வுநிலை வலுப்பெறவில்லைஆங்கிலமொழியே இக்கலைகளைப் பயில்வதற்கும் பயிற்றுவதற்கும் ஏற்ற மொழியென்ற எண்ணமே தோற்றம்பெற்றது. தமிழ்மொழிக்கு அத்த கைய வளமான ஆற்றல் இல்லையெனும் கருத்துத் தோன்றி வளரலாயிற்று.

இந்நிலையில் இருபத்தொராம் நூற்றாண்டில் ஈழத்தில் ஏற்பட்ட குழப்பமான சூழல் பெரும் தொகையான தமிழர் புலம்பெயர வழிவகுத்தது. இது அந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஏறக்குறைய நாற்பது நாடுகளில் தமிழர் புகலிடம் பெறும் நிலையை உருவாக்கியது.

இப்புலப் பெயர்வு பொருள் தேட்டத்திற்கும் மேலாக உயிரைப் பேணல் என்ற நோக்குடனேயே நடைபெற்றது. பதியெழுதலறியாத மக்கள் என இளங்கோவடிகளால் சிறப்பாகப் பதிவு செய்யப்பட்டிருந்த தமிழ்மக்கள் புலத்தில் வாழும் பண்பாட்டாளராயினர்.

இவர்கள் உயிரைக் காப்பாற்றும் ஒரே எண்ணத்துடன் நாடு கடந்தபோது மொழியையும் பண்பாட்டு வாழ்வையும் சுமந்து வந்தனர்.

அதனையே தமது அடுத்த தலைமுறையினரது முதுசெம் எனஎண்ணி வாழ்ந்தனர். ஆனால் அவர்களுடைய வாழிடச்சூழல் இதற்குரிய முழுமையான வாய்ப்பை நல்கவில்லை என்ற எண்ணமே இப்போது நிலவுகிறது.

இந்த எண்ணம் தவறாது என்பதை இன்று சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. ஏனெனில் இன்று உலகின் பல நாடுகளில் இத்தகைய புலப்பெயர்வுகள் நடைபெற்றுள்ளன. அவர்களும் தமிழரைப் போன்ற பிறமொழி வாழிடச் சூழ்லகளிலே வாழுகின்றனர். ஆனால் தமது தாய் மொழியை மறவாதவராக வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாகத் தாய்மொழியை வீட்டு மொழியாக தம்மினத்தவரிடையே தொடர்பாடல் மொழியாகப் பயன்படுத்துகின்றனர்.

தமதுதாய்நாட்டையும்தாய் மொழியையும் உணர்வுடன் கலந்து வாழ்க்கை நடத்துகின்றனர். இங்கு பாரதியை மீண்டும் நினைவு கூர வேண்டியுள்ளது. தமிழ் மொழி வாழ்த்து என்னும் கவிதை

*''வானம் அறிந்ததனை*
*த்தும் அறிந்து*
*வளர்மொழி வாழியவே''*

என வாழ்த்துகிறது. வேற்று நாட்டுக்கலைச் செல்வங்களைப் பற்றித் தமிழ் மொழியிலே பதிவுகள் தேவை என்பதே பாரதியின் கருத்து.

*''பிறநாட்டு நல்லறிஞர்*
*சாத்திரங்கள்*
*தமிழ் மொழியில்*
*பெயர்த்தல் வேண்டும்*
*இறவாத புகழுடைய*
*புதுநூல்கள்*
*தமிழ்மொழியில்*
*இயற்றல் வேண்டும்''*

இந்த இரண்டு பணிகளும் இன்றைய புலம்பெயர்ந்த தமிழர்களின் தலையாய பணியாகும். அவர்கள் அதற்காகத் தமிழைப் பயில வேண்டும். அடுத்த புதிய தலைமுறையினருக்குப் பயிற்ற வேண்டும். இது பற்றிய திட்டமிடல் இன்றே தொடங்க வேண்டும்.

தாய்மொழியாகத் தமிழ் மொழி பயிற்றப்பட வேண்டும். பாரதியின் கனவு நனவாக வேண்டுமெனில் புலம் பெயர்ந்து வாழும் தமிழ்த் தாயர் முதன்மையாசிரியராகப் பொறுப்பை ஏற்க வேண்டும். வீட்டு மொழியாகத் தாய் மொழியான தமிழ்மொழியையே பேசவேண்டும். உறவு மொழியாக தமிழை நிலைபெறச் செய்ய வேண்டும் பாரதி பாடிய பாப்பாப் பாட்டின் வரிகள் காதில் பட வேண்டும்.

*தமிழ்த்திரு நாடு*
*தன்னைப் பெற்ற-*
*எங்கள்*
*தாயென்று கும்மியடி*
*பாப்பா*
*அமிழ்தில் இனியதடி*
*பாப்பா-நம்*
*ஆன்றோர்கள் தேசமடி*
*பாப்பா!*

இந்த வரிகள் தாயகத்தவர்க்கும் காதில் வந்த விழ வேண்டும். பல மொழிக் கற்கைக்கு வலுவான அடித்தளமாக அமைவது தாய்மொழிக் கல்வியே. அதுவே உலகம் உணர்ந்த உண்மை.

முனைவர்
மனோன்மணி
சண்முகதாஸ்

# ரஷ்ய ஏவுகணைகள் சில ஈரானில் விழுந்துள்ளன

## அமெரிக்கா குற்றச்சாட்டு

**(வோஷிங்டன்)**


***சிரியா மீது ரஷ்யா தொடுத்த ஏவுகணை தவறி சென்ற ஈரானை தாக்கியுள்ளதாக அமெரிக்காவைச் சேர்ந்த அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளமை பலத்த அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.***

ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக கடந்த வாரம் ரஷ்யா அவர்களுக்கு எதிரான தாக்குதலை தொடங்கியது.

இதையடுத்து ஐ.எஸ். தீவிரவாதிகளின் பல நிலைகள் அழிக்கப்பட்டதாக தகவல் வெளியாகியது.

மேலும் காஸ்பியன் கடலில் இருந்து போர்கப்பல்கள் மூலம் ரஷ்யா தொடுத்த ஏவுகணைகள் 900 மைல்களுக்கு அப்பால் உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளின் நிலைகளை தாக்கி அழித்ததாகவும் தகவல் வெளியாகியது.

இந்நிலையில் தொடர்ந்து ரஷ்யாவின் தாக்குதலை குற்றம்சாட்டி வரும் அமெரிக்கா, ரஷ்யாவின் ஏவுகணைகள் ஐ.எஸ். தீவிரவாதிகளின் நிலையை தாக்குவதற்கு பதிலாக ஈரானை தாக்கியுள்ளதாக தெரிவித்துள்ளது.



இது தொடர்பாக அமெரிக்காவை சேர்ந்த அதிகாரிகள் கூறுகையில், ரஷ்யா தொடுத்த ஏவுகணைகளில் சில ஈரானை தாக்கியுள்ளது என்று குற்றம் சாட்டியுள்ளது.

எனினும் அதற்கான எந்தவித ஆதாரங்களையும் அவர்கள் வெளியிடவில்லை.

இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ள ரஷ்யா தாங்கள் சரியான இலக்கையே தாக்கியுள்ளதாக தெரிவித்துள்ளது.

இதனிடையே சிரிய ராணுவத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியதாவது, ரஷ்யாவின் தாக்குதல்கள் ஐ.எஸ். தீவிரவாதிகளை நிலைகுலைய செய்துள்ளது.

இதன் காரணமாக மிகப்பெரிய தாக்குதலை நடத்தி ஐ.எஸ் பிடியில் உள்ள பகுதிகளை திரும்ப பெறும் முயற்சியில் அரசு படைகள் ஈடுபட்டு வருவதாக தெரிவித்துள்ளார். (3)

# பொலிஸ்-இராணுவத்தைச் சேர்ந்த 70 பேருக்கு ஐ.எஸ். மரணதண்டனை



(வோஷிங்டன்)

மேற்கு ஈராக்கில் ஐ.எஸ்.தீவிரவாதிகள் இந்த மாத ஆரம்பத்தில் அரசாங்க ஆதரவு சன்னி இனத்தைச் சேர்ந்த 70 பேருக்கும் அதிகமானோருக்கு மரண தண்டனை நிறைவேற்றியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவிக்கிறது.

அல்பு நிம்ர் இனத்தைச் சேர்ந்த மேற்படி 70 பேருக்கு ரமடி நகரின் வடக்கேயுள்ள தர்தார் பிராந்தியத்தில் தீவிரவாதிகளால் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அந்த இனத்தைச் சேர்ந்த பொலிஸ் மற்றும் இராணுவ உறுப்பினர்களது குடும்பங்களைச் சேர்ந்த ஆண்களுக்கே இவ்வாறு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. (3)




# இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெலாரஸ் நாட்டு பெண்ணுக்கு



இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெலாரஸ் பெண் எழுத்தாளர் ஸ்வெட்லானாவுக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

படைப்பிலக்கிய துறையில் உலகளாவிய சாதனை படைத்ததற்காக, ஐரோப்பிய நாடான பெலாரஸ் நாட்டை சேர்ந்த பெண் எழுத்தாளர் ஸ்வெட்லானா அலெக்ஸீவிச்சுக்கு (வயது 67), இந்த ஆண்டுக்கான இலக்கிய நோபல் பரிசு வழங்கப்படுகிறது. இதை சுவீடன் நாட்டின் ஸ்டாக்ஹோம் நகரில் நோபல் பரிசு குழு நேற்று அதிகாரபூர்வமாக அறிவித்தது.

"நமது காலத்தின் பாடுகள் மற்றும் துணிச்சலுக்கான நினைவுச்சின்னமாக இவரது பலகுரல் கொண்ட எழுத்துகள் ஒலித்துள்ளன" என நோபல் விருதுக்குழு கூறி உள்ளது.

இவருக்கு இந்த ஆண்டுக்கான இலக்கிய நோபல் பரிசு எதற்காக வழங்கப்படுகிறது என்பது பற்றி சுவிடிஷ் அகடமியின் செயலாளர் சாரா டேனியஸ் கூறியிருக்கிறார்.

அவர், "கடந்த 30 அல்லது 40 ஆண்டுகளாக சோவியத் மக்கள் மற்றும் சோவியத்துக்கு பிந்தைய காலகட்ட மக்களின் வாழ்க்கை முறையை ஆராய்ந்து பதிவு செய்து வந்துள்ளார். இது உண்மையிலேயே வரலாற்று சம்பவங்களின் தொகுப்பு அல்ல. அவர் உண்மையிலேயே உணர்வுமயமான ஒரு உலகத்தை நமக்கு வழங்கி இருக்கிறார்.

1986ம் ஆண்டு உக்ரைனில் உள்ள செர்னோபில் அணு உலை விபத்து துயரம், ஆப்கானிஸ்தான்-சோவியத் போர் போன்றவற்றின் பதிவுகளை உதாரணமாக கூறலாம். குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என பல்லாயிரக்கணக்கானோரை பேட்டி கண்டு, நாம் அறிந்திராத நிகழ்வுகளை தந்திருக்கிறார். அதே நேரத்தில் அவர் உணர்வுகளின் வரலாற்றையும், ஆன்மாவின் சரித்திரத்தையும் தந்துள்ளார்" என கூறியுள்ளார்.

இலக்கியத்தில் ஒரு புதிய உத்தியை அவர் பின்பற்றி இருக்கின்றார் என்றும் டேனியஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த ஸ்வெட்லானா அலெக்ஸீவிச், உக்ரைன் நாட்டில் 1948 ஆம் ஆண்டு, மே மாதம் 31ஆம் திகதி பெலாரஸ் தந்தைக்கும், உக்ரைன்தாய்க்கும் மகளாக பிறந்தார்.

முதலில் ஆசிரியையாகவும், பின்னர் பத்திரிகையாளராகவும் பணியாற்றி இருக்கிறார். ஏராளமான சிறுகதைகள், கட்டுரைகள், பேட்டிக்கட்டுரைகள் எழுதி இருக்கிறார்.

இந்த ஆண்டு இதுவரை அறிவிக்கப்பட்ட நோபல் பரிசுகள் அனைத்தும் ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்கு கூட்டாக அறிவிக்கப்பட்ட நிலையில், இலக்கிய நோபல் பரிசு இவருக்கு மட்டுமே தனித்து வழங்கப்படுகிறது. மேலும், பரிசுத்தொகையான 9 இலட்சத்து 72 ஆயிரம் டொலரையும் (சுமார் ரூ.6 கோடியே 31 இலட்சம்) இவர் மட்டுமே பெறுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

நோபல் பரிசினை வென்ற 14வது பெண் என்ற சிறப்பையும் இவர் பெறுகிறார். (3)

# இசையை கேட்டு பாடமுயற்சிக்கும் நான்கு மாதங்களே ஆன சிசு

## ஸ்பெயின் விஞ்ஞானிகளின் ஆய்வில் கண்டுபிடிப்பு

வயிற்றில் இருக்கும் சிசு கேட்பது குறித்த ஒரு ஆய்வை ஸ்பெயின் நாட்டை சேர்ந்த விஞ்ஞானிகள் நடத்தியுள்ளனர்.


கர்ப்பத்தில் இருக்கும் 4மாத சிசுவால் இசையைக் கேட்க முடியும் என ஆய்வில் தெரிய வந்துள்ளது. கர்ப்பத்தில் இருக்கும் குழந்தைகளால் சத்தத்தைக் கேட்க முடியும் என்பதால் நம்மூரில் வளை காப்பு என்ற பெயரில் கர்ப்பிணிகளுக்கு கை நிறைய கண்ணாடி வளையல்களை அணிவித்து விடுகின்றனர். அந்த வளையோசையைக் கேட்டு வயிற்றிலிருக்கும் குழந்தை வளரும் என்பது நம்பிக்கை. ஆனால், இவ்வாறு இசையைக் கேட்கும் வயிற்றில் இருக்கும் குழந்தைகள் அதற்குப் பாட்டுப் பாடுவது போல் வாயசைப்பது வீடியோ ஒன்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வயிற்றில் இருக்கும் சிசு கேட்பது குறித்த ஒரு ஆய்வை ஸ்பெயின் நாட்டை சேர்ந்த விஞ்ஞானிகள் நடத்தியுள்ளனர். இந்த ஆய்வானது 14 வாரம் முதல் 39 வார கர்ப்பிணிகளைக் கொண்டு நடத்தப்பட்டது. சில சிறப்பு ஸ்பீக்கர்கள் மூலம் கர்ப்பத்தில் இருக்கும் குழந்தைகளுக்கு இசையைக் கேட்க வைத்து அவர்களின் பின்னூட்டல் அல்ட்ரா ஒலி மூலம் ஆய்வாளர்கள் கண்காணித்தனர்.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள வீடியோ ஒன்றில், இசையைக் கேட்டு வயிற்றில் உள்ள குழந்தை ஒன்று வாயை அசைத்து பாட முயற்சிப்பது போல் உள்ளது.

இதன்மூலம் 16 வார கருவிற்கு காது நன்றாக வளர்ச்சியடைந்து, கேட்கும் திறன் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆனால், இதுவரை 18 வாரத்திலேயே சிசுவிற்கு காது கேட்கும் எனக் கூறப்பட்டு வந்தது.



இந்த ஆய்வை தலைமையேற்று நடத்திய டாக்டர் மாரிசா லாப்சி இது தொடர்பாக கூறுகையில், 'கர்ப்பத்தில் இருக்கும் 16 வார சிசு இசையைக் கேட்டு வாயை மற்றும் நாக்கை அசைப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது பார்ப்பதற்கு அக்குழந்தை பாட அல்லது பேச முயற்சிப்பது போல் தெரிகிறது.

இந்த ஆய்விற்காக பேபிபாட் என்ற இசைக்கருவி உருவாக்கப்பட்டது. இந்தக் கருவி மூலம் கருவில் இருக்கும் போதே குழந்தையின் பாடும் திறமைகளை வளர்த்துக் கொள்ளமுடியும் என்பது சிறப்பம்சமாகும்.

இந்த ஆய்வில் சாதாரணமாக இசையைக் கேட்டு 45 சதவீத சிசுக்கள் தலையையும், கால் மூட்டுக்களையும் அசைத்ததாகவும், 30 சதவீத சிசுக்கள் வாயை அசைத்து நாக்கை சுழற்றியதாகவும், 10 சதவீத சிசுக்கள் நாக்கை சுழற்றியதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதே சமயம் கர்ப்பப்பைக்கு அருகே சிறப்பு ஸ்பீக்கர்கள் மூலம் இசையைக் கேட்ட போது 87 சதவீதம் சிசுக்கள் தலையையும், மூட்டுப்பகுதியையும் அசைத்ததாகவும், ஒரே நேரத்தில் வாய் மற்றும் நாக்கை அசைத்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


ஆனால், இந்த அசைவுகள் எல்லாம் மியூசிக்கை நிறுத்தியதும் உடனடியாக நிறுத்தப்பட்டு விட்டதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஹெட்போன் மூலம் இசையை கர்ப்பிணிகளின் வயிற்றிற்கு அருகே வைத்த போது, சிசுக்களின் செயற்பாட்டில் எந்த மாறுதலும் ஏற்படவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர். கர்ப்பத்தில் இருந்த இரட்டைக் குழந்தைகளும் கூட இவ்வாறு இசையைக் கேட்டபோது ஒரே விதமான அசைவுகளை மேற்கொண்டதாம். (3)

# இந்துக்களும் முஸ்லிம்களும் இணைந்து செயற்பட வேண்டும்

## மாட்டிறைச்சி சர்ச்சை குறித்து பிரதமர் மோடி

**(பாட்னா)**

**மாட்டிறைச்சி சர்ச்சை பற்றி முதல் முறையாக கருத்து தெரிவித்த பிரதமர் மோடி நாட்டின் முன்னேற்றத்திற்காக இந்துக்களும், முஸ்லிம்களும் இணைந்து செயற்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார்.**



உத்தரபிரதேச மாநிலம், தாத்ரி பகுதியில் இக்லாக் என்ற இஸ்லாமியர் மாட்டிறைச்சி சாப்பிட்டதாக அடித்துக் கொல்லப்பட்ட விவகாரம், பல்வேறு அரசியல்கட்சித்தலைவர்கள் இடையே கருத்து மோதலையும், சர்ச்சையையும் ஏற்படுத்தியது.

பீகாரில், நவாதா என்ற இடத்தில் பாரதீய ஜனதா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்த அவர், தாத்ரி சம்பவம் பற்றி கூறுகையில் 'அனைத்து தரப்பினரும் ஒற்றுமையாக இருந்தால்தான் நாடு முன்னேறும்' என சுட்டிக் காட்டினார்.

மேலும் நமது நாடு எப்போதும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும்.

நான் இதற்கு முன்பும் கூறி உள்ளேன். வறுமையை எதிர்த்து போரிட வேண்டுமா, முஸ்லிம்களை எதிர்த்து போரிட வேண்டுமா என்பதை இந்துக்கள் முடிவு செய்ய வேண்டும்.

இந்துக்களை எதிர்த்து போரிட வேண்டுமா, வறுமையை எதிர்த்து போரிட வேண்டுமா என்பதை முஸ்லிம்கள் தீர்மானிக்க வேண்டும். இரு தரப்பினரும் இணைந்து நின்று, வறுமையை எதிர்த்து போரிட வேண்டும்.

இந்துக்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையாக இருந்து, வறுமைக்கு எதிராக போரிட்டால்தான், இந்த நாடு பலன் பெற முடியும்.

ஒற்றுமை, சமூக நல்லிணக்கம், சகோதரத்துவம், சமாதானம் ஆகியவைதான் இந்த நாட்டை முன்னோக்கி அழைத்துச் செல்லும்.

சில அரசியல்வாதிகள் அரசியல் லாபத்துக்காக பொறுப்பற்ற விதத்தில் பேசி வருகிறார்கள். அத்தகைய பொறுப்பற்ற பேச்சுக்களை, யார் பேசினாலும், ஏன், நரேந்திர மோடியே பேசினாலும் கூட, நீங்கள் அவற்றுக்கு செவி சாய்க்க வேண்டியதில்லை. அவற்றை காது கொடுத்து கேட்காமல் புறக்கணித்து விட வேண்டும் என்று கூறியுள்ளார். (3)

# "ஆயுஷ்காரகன் சனீஸ்வர பகவான்" புரட்டாதிச்சனி விரதச் சிறப்பும் மகிமையும்

### அறிமுகம்

புரட்டாதிமாதம் என்றதும் எம் எல்லோரதும் மனதில் தோன்றுபவை சனீஸ்வரபகவானும் அவருக்குரிய புரட்டாதிச் சனிவிரதமுமேயாகும். சைவப் பெருமக்களாகிய நாம் குறிப்பாக இப் புரட்டாதி மாதத்தில் சனீஸ்வர பகவானுக்கு ஆற்றவேண்டிய வழிபாட்டு முறைகள் பலவுண்டு. இவற்றை நாம் சனீஸ்வரபகவானை திருப்தி செய்யும் முகமாகவும் சனிதோஷத்தில் இருந்து எம்மைக் விடுவித்து காப்பாற்றும் முகமாகவும் விரதம் மேற்கொள்ளல் எமது மரபாகும். இதனாலேயே புரட்டாதி மாத சனிக்கிழமை மிகவும் சிறப்புப் பெறுகின்றது.

சனிக்கிழமை அன்று சனி ஹோரையில் (காலை 6 மணி–7மணி வரை) தைலஸ்நானம் செய்து தூய்மையான ஆடையணிந்து பயபக்தியுடன் சனீஸ்வர பகவானுக்குரிய எண்ணெய்தீபம் ஏற்றுவது மகிமையாகும். கறுப்புப் பட்டு சாற்றுவித்து நீலபூக்கொடி மலர்மாலை பகவானுக்கு அணிவித்து அர்ச்சனையும் செய்வித்து மனநிறைவு பெறுகின்றோம். புரட்டாதிச் சனி அன்று விரதம் இருந்து ஆசாரசீலராக நாம் சனிபகவான் வழிபாட்டின் பின் மதிய உணவு அருந்தமுன் சனி பகவானுடைய வாகனமான காகத்திற்கு அன்னம் படைக்கின்றோம். இதுதொன்றுதொட்டு எம்மவர்களிடையே நிலவி வரும் பழக்கமாகும்.

சனீஸ்வர பகவான் மீது எமக்கு பக்தியும் உண்டு .அத்தோடு ஒரு வித பயமும் உண்டு. சனீஸ்வர பகவானைப் போல கொடுப்பவரும் இல்லை கெடுப்பவரும் இல்லை என்ற வாக்கொன்றும் உள்ளது. முனிவர்கள், தேவர்கள் மூர்த்திகள் முதலானோரும் மனிதர்களும் சுகவாழ்வு வாழ்வதும் உன் மகிமையல்லால் வேறுண்டோ எனக் குறிப்பிடப்படும் பாடல் ஒன்று பின்வருமாறுகாணப்படுகின்றது.

கனிவுள்ளதெய்வம் நீயே கதிர் சேயே - காகம் ஏறும்

தம்பிரானே! உனைத் துதித் தேன்தமியனேற்குஅருள்செய்வாயே!

என்கின்றது நவக்கிரக ஸ்தோத்திர பாடல் ஒன்று.

### சனீஸ்வர பகவானின் வரலாறு

சூரியபகவானுக்கும் சாயா தேவிக்கும் புத்திரனாகப் பிறந்தவர் சனிபகவான். இவர் ஈஸ்வர அந்தஸ்தைப் பெற்ற வரலாறுஉண்டு. இவர் காசிதலம் சென்றுஅங்கு சிவலிங்கத் தை பிரதிஷ்டை செய்து சிவனாரைப் பூசித்ததன் காரணமாக சனிபஹவான் சனீஸ்வர பகவான் என்றஅந்தஸ்தைப் பெற்றதாக சிவபுராண வரலாறு ஒன்று உண்டு. சனி பகவானுக்குரிய மந்திரங்களாக வேத மந்திரமும் மற்றையது காயத்திரி சந்தஸ் உடைய மித்திரிஷிக்குரிய மந்திரமும் உள்ளன. சனி பகவானுக்கு"குளிகன்"எனும் நாமம் கொண்டபுத்திரன் உள்ளதாக"அபிதானசிந்தாமணி"எனும் நூல் கூறுகின்றது.

### சனீஸ்வர பகவானின் தோற்றமும் வழிபாடும்

கரியநிறமுடைய சனீஸ்வர பகவான் குறுகிய வடிவமும் முடமான ஒருகாலும் கொண்டவர். இவருக்குப் பிடித்தமான மலர்கள். கருநீலமலர், நீலமலர் ஆகியனவாம். இவருக்குகந்த தானியம் எள், நிவேதனம் எள் அன்னம். ஓர் ஆலயத் திற்குச் சென்று நவக்கிரக பரிவார மூர்த்திகளில் சனீஸ்வர பனவானுக்கு அபிஷேகம் செய்வித்து மேற்குறிப்பிட்ட எள் எண்ணெய் தீபம் நீலமலர் மாலை அலங்காரம் செய்து சக்திக்கு ஏற்றவாறு 108 அல்லது 1008 நாமங்களால் பெயர் நட்சத்திரம் சொல்லி அர்ச்சனைசெய்யவேண்டும்.

### மங்குசனி,பொங்கு சனி,மரணச்சனி

சனீஸ்வரன் எம்மை பீடிக்கும் காலப் பகுதியை மூன்று கூறுகளாகப் பிரித்துள்ளனர். அவை யாவன மங்குசனி,பொங்குசனி, மரணச்சனி என்பனவாம். இவற்றுள் பொங்குசனி காலத்தில் ஒருவருக்கு சனீஸ்வர கடாட்சத்தில் வியத்தகுநன்மைகள் இடம் பெறுவதுண்டு. ஜோதிட சாஸ்திரத்தின் படிஒரு வருக்கு அட்டமத்துச்சனி , ஏழரைச்சனி இடம்பெறும் காலப் பகுதியில் அவருக்கு தொடர்ந்து இன்னல்களும் அலைச்சல்களும் ஏற்படுவதுண்டு. ஆனால் சனீஸ்வரனைப் பிரீதிப்படுத்துவதனாலும் இறைவணக்கத்தாலும் குறிப்பாக காசிவிசுவநாதப் பெருமானைத் தரிசித்துவழிபடுவதாலும் ஸ்ரீமத் நாராயணனை வழிபடுவதனாலும் ஸ்ரீ ஆஞ்சநேயர் வழிபாட்டாலும் இத் துன்பங்கள் சிறிது சிறிதாக குறைந்து இல்லாமல் போய் விடும்.

சனிபகவானின் தோஷம் பீடிக்கப்பட்டிருந்த காலத்தில் இராம பிரான் வனவாசம் செல்ல நேரிட்டது என்பதும் அரிச்சந்திரமன்னன் அரசு இழந்து, நாடு இழந்து, மனைவியையும் மகனையும் இழந்து சுடலைகாக்கும் நிலையை அடைந்தான் என்பதும் இலக்கியம் தரும் தகவல்களாம். நளமகாராஜன் தனது ஏழரைச்சனி காலத்திலேதான் கானகத்தே காதலியை காரிருளில் கைவிட்டு கரும்பாம்பால் தீண்டப் பெற்று இன்னல்கள் பலவற்றை அனுபவித்தான். இவை எல்லாவற்றிற்கும் பரிகாரமாக அமைவது சனீஸ்வர வழிபாடும் சிவனார் வழிபாடும் நாராயண வழிபாடும் ஸ்ரீ ஆஞ்சநேயர் வழிபாடுமேயாகும். வடமொழிநூல்களின் கூற்றுப்படி சனீஸ்வரனுக்கு கழுகு பட்சியும் வாகனமாக அமைந்துள்ளது. சனீஸ்வர பகவானுக்குரிய தியான சுலோகங்களையும் மங்கள சுலோகங்களையும் இக் காலங்களில் அவசியம் படிக்க வேண்டும்.

### சனீஸ்வர பகவானின் சிறப்பு

சங்கடங்களை கொடுக்கவல்ல வரும்தீர்க்கவல்ல வருமான நவக்கிரகங்களுள் பிரபல்யமாகப் பேசப்படும் சனிபகவான் கிரகங்களுள் முதன்மை கிரகமாக விளங்குகின்றார். "சனி"சிவனை நோக்கிதவமிருந்து அவரது திருவருளால் பெற்ற பட்டமே சனீஸ்வர பட்டமாகும். வேறு எந்தகிரகத்திற்கும் ஈஸ்வரபட்டம் கிடையாது.

108 திருநாமங்களால் அர்ச்சிக்கப்படும் சனீஸ்வரன் மேற்குமுகம் நோக்கி காகத்தினைவாகனமாகக் கொண்டு காட்சியளிப்பதை சனீஸ்வர ஆலயங்களிலும் நவக்கிரக பரிவாரங்களிலும் காணமுடியும்.

வருடம் முழுவதும் வரும் சனிக்கிழமைகளில் விரதம் அனுஷ்டித்தால் கிடைக்கும் பலனை புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் அனுஷ்டித்தால் பலனை அனுபவிக்கலாம் என அறியப்படுகின்றது. புரட்டாதிமாதத்தில் அப்படியொரு அற்புதமான மகத்துவம் அமைந்திருப்பது விசேடமாகும். புரட்டாதிமாதம் பிதிர்களுக்குரிய மாதமாகவும் சனீஸ்வர பகவானுக்குரிய மாதமாகவும் அம்பிகை வழிபாடடுக்குரிய நவராத்திரி காலங்களைக் கொண்டமைந்த மாதமாகவும் காணப்படுகிறது. ஒருவனுடைய ஆயுளைத் தீர்மானிக்கின்ற கிரகமாக சனீஸ்வர பகவான் சிறப்பிக்கப்படுகின்றான்.

### ஜோதிடக் குறிப்பு

விருச்சிக ராசியில் பகையான தன்மையில் இருக்கின்ற சனி பகவான் தானிருக்கும் இடத்தில் இருந்து 3, 7, 10 ஆம் இடங்களை பார்வை செய்கின்றனர். அந்த வகையில் மகரராசி, இடபராசி, சிம்மராசி ஆகியவற்றை அவரது பார்வை சென்றடையும்.இதனால் இந்தராசியினர் அவசியம் புரட்டாதிச் சனிவிரதமிருந்து எண்ணெய்ச் சிட்டிருந்து பிரீதி செய்து கொள்வதுடன் ஸ்ரீமத் நாராயண மூர்த்தியையும்வழிபடுவது நன்மையை பயக்கும்.ஏனெனில் பகைத் தன்மையான பார்வையாகும். இனி சனி"சஞ்சாரப்படி" மேட ராசியினருக்கு அட்டமத்துச் சனியாகும். இதனால் மரணபயமும் துக்கங்களை அனுபவிக்கவும் நேரலாம். இடபராசியினருக்கு ஏழாமிடத்தில் சனி இருப்பு. இது உடல் உபாதைகளையும் கஷ்டங்களையும் ஏற்படுத்தக்கூடும். மிதுன ராசியினருக்கு ஆறாம் ஸ்தானம் இருப்பாக அமைகிறது. ,துநல்ல அமைப்பாகும். இதனால் இல்லத்தில் லட்சுமிகரமும் உடலாரோக்கியமும் இருக்கக்கூடும்.

கடகராசியினருக்கு ஐந்தாமிடத்தில் சனி இருக்கின்றது. இதனால் பலவிதமான சேதங் களும் வீண் அலைச்சல்களும் ஏற்படக்கூடும். சிம்ம ராசியினருக்கு நான்காமிடம் அமைகின்றது. இதனால் உடற்சுகமும், அதே நேரம் அயலவர்களுடன் வீண் விரோதங்களும் வரக்கூடும். கன்னி ராசியினருக்கு சனி இருப்பு மூன்றாமிடமாகும். அது நன்மை தரக்கூடிய அமைப்பு எனலாம். தனசம்பத்து, வெற்றி வாய்ப்புக்கள் என்பன ஏற்படும். துலாம் ராசியினருக்கு இரண்டாமிடச் சஞ்சாரமாகும். இதனால் உடலாரோக் கியம் பாதிப்படைதல்,பொருளாதார நட்டங்கள் என்பன வரக்கூடும். விருச்சிக ராசியினருக்கு சனி ஜென்மச் சனியாக இருப்பார். இதனால் நிலைக்கேடு. அலைச்சல் பிராணஅசதி என்பன தோன்றக் கூடும். தனுசு ராசியினருக்கு பன்னிரெண்டாம் வீட்டில் உலாவுகின்றார். இச் சூழ்ற்சியினால் வீண் செலவுகள், நோய் துன்பங்கள் கவலை என்பன வந்து மறையலாம்.

மகரராசியினருக்கு சனி பதினொராம் இடத்தில் அமர்ந்துள்ளார். இந்த அமைப்பு நல்ல அமைப்பு என்லாம். இலாபம் உடலாரோக்கியமென்பன சிறப்பாக அமையும். கும்பராசியினருக்கு பத்தாமிடத்தில் சனி பயணமாகும். இதனால் அபகீர்த்தி, வீண் செலவுகள் என்பன ஏற்படக்கூடும். மீன ராசியினக்கு சனி ஒன்பதாமிடத்தில் இருப்பார். இதனால் செய் காரியங்கள் பலிதமாகாது எனலாம். இங்கே குறிப்பிட்ட பன்னிரெண்டு ராசிகளது பலன் களையும் "சனியிஸ்தான அமைப்பின் படி கூறப்பட்டுள்ளது. இக் குறிப்பிட்ட ராசிகளில் வியாழ பகவானது பார்வை படும் 5, 7, 9 ஆகிய இடங்களிலுள்ள ராசி வீடுகளாக தனுசு, கும்பம் மேடராசியினருக்கு பிரகஸ்பதியின் திருப்பார்வையால் சனி பகவானது கெடுபலன்கள் விலகி விடும. குரு பார்வை கோடி நன்மை தரும். இது சோதிடக்கூற்று. இனிப் பொதுவான பலன் அமைப்பு நோக்கும் போது ஆனிமாதத்தின் மேல் பலத்தகாற்று, கடும் மழை, மண் சரிவு, விவசாயம் பாதிப்பு,திடீர் விபத்துக்கள் என்பன நடைபெறக் கூடும்.

இம்முறை கடைச் சனி 17.10. 2015 அன்று நவராத்திரி காலங்களில் வந்தாலும் சனிதோஷமுள்ளவர்கள் தவறாது எள்ளெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து எள்ளெரித்து புரட்டாதிச் சனி விரதத்தை அனுஷ்டித்தல் சனி பகவானது அனுகூலம் பெற்றுக் கொள்வதன் மூலம் சனியினது தோசங்களில் இருந்து விடுபடமுடியும். ஆன்மீக வழிபாட்டு முக்கியத்துவமும் அவசியமும் கொண்ட இப் புரட்டாதிமாதத்தில் இப் புண்ணிய நாட்களிலே நாமும் இவற்றின் முக்கியத்துவத்தை நன்கு புரிந்து அவற்றை எமது இளைய தலைமுறையினருக்கும் எடுத்துக் கூறி எமக்குநேரும்இன்னல்களைப் போக்கும் நல்ல வழிபாடுகளை ஆற்றுவோமாக.

கலாநிதி.மகேஸ்வரக் குருக்கள்
பாலகைலாசநாத சர்மா
சிரேஷ்ட விரிவுரையாளர்
கிழக்கு பல்கலைக்கழகம்

# தமிழ் சினிமா வரலாறு

## 24 “ராஜமுக்தி” அதிர்ச்சி தோல்வி

....எனினும் ரேலங்கி கோஷ்டியின் நகைச்சுவைக் காட்சிகள் கோமாளித்தனமாக வும் அறுவையாகவும் இருந்ததால் படம் தோல்வி அடைந்தது.

இந்த ஒரே ஒரு படத்தில் மட்டுமே பாகவதர் மீசையுடன் தோன்றினார்.

**கம்பர் வேடத்தில் நடிக்க மறுப்பு**

இந்த சமயத்தில் அம்பிகாபதி கதையை, பட அதிபர் ஏ.எஸ்.சீனிவாசன் மீண்டும் படமாக எடுத்தார். சிவாஜிகணேசன் அம்பிகாபதியாகவும் பானுமதி அமராவதியாகவும் நடித்தனர்.


ஏ.எல். சீனிவாசனுக்கு ஒரு ஆசை. பழைய அம்பிகாபதியில் அம்பிகாபதியாக நடித்த பாகவதரை இதில் கம்பராக (அதாவது சிவாஜியின் தந்தையாக) நடிக்க வைக்க வேண்டும் என்று விரும்பினார். பாகவதரை அணுகி, சிவாஜிக்கு தரும் ஊதியத்தை விட 10 ஆயிரம் ரூபாய் கூடுதலாகத் தருகிறேன். கம்பராக நடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.


பாகவதர் யோசித்தார். சிவாஜி கணேசனுக்கு தந்தையாக எந்தப் படத்தில் வேண்டுமானாலும் நடிக்கத் தயாராக இருக்கிறேன்.

ஆனால் அம்பிகாபதியாக முன்பு என்னைப் பார்த்த ரசிகர்கள், இப்போது கம்பராக ஏற்கமாட்டார்கள். உங்கள் அன்புக்கு நன்றி என்று கூறி கம்பராக நடிக்க பாகவதர் மறுத்து விட்டார்.

இதேபோல் ஏவி.எம். தயாரித்து மகத்தான வெற்றி பெற்ற ஸ்ரீவள்ளியை, நரசு ஸ்டூடியோஸ் மீண்டும் தயாரித்தது. அதில் சிவாஜிகணேசன் முருகனாகவும் பத்மினி வள்ளியாகவும் நடித்தனர். இந்தப் படத்தில் நாரதராக நடிக்க பாகவதருக்கு அழைப்பு வந்தது. அந்த அழைப்பையும் ஏற்க மறுத்துவிட்டார்.

பாக்கிய சக்கரம் என்ற பெயரில் சொந்தப் படம் தயாரிக்க பாகவதர் ஏற்பாடு செய்தார். இதில் பாகவதருக்கு ஜோடியாக வசுந்தராதேவியும்





மீசையுடன் பாகவதர் தோன்றிய ஒரே படம் சியாமளா

இளம் ஜோடியாக சிவாஜிகணேசன்-எம்.என்.ராஜமும் நடிப்பார்கள் என்று விளம்பரம் வெளிவந்தது. ஆனால் அப்போது சிவாஜி கணேசன் பல படங்களில் நடித்து வந்ததால் கால்ஷீட் கிடைக்காமல் படம் கைவிடப்பட்டது.

**புதுவாழ்வு**

பாக்கிய சக்கரத்துக்குப் பதிலாக புதுவாழ்வு என்ற படத்தைத் தயாரித்தார் பாகவதர். இதில் அவருக்கு ஜோடி லலிதா (பத்மினியின் மூத்த சகோதரி)

மாதுரிதேவி, டி.எஸ்.பாலையா, என்.எஸ்.கிருஷ்ணன், டி.ஏ. மதுரம் ஆகியோரும் நடித்தனர். முதன் முதலாக ரைடக்ஷன் பொறுப்பையும் பாகவதர் ஏற்றிருந்தார்.

பாகவதரின் சில பாடல்கள் இனிமையாக இருந்தன. என்றாலும் கதை, தொழில்நுட்பம் சரியாக அமையாததால் படம் சுமாராக ஓடியது.

**கடைசிப்படம்- சிவகாமி**

இதன்பின்னர் முதலாளி சம்பூர்ண ராமாயணம் முதலிய படங்களைத் தயாரித்த எம்.ஏ. வேணுவுடன் கூட்டு சேர்ந்து சிவகாமி என்ற படத்தை பாகவதர் தயாரித்தார்.

இது பாக்கியசக்கரத்தின் கதை தான். பாகவதரின் ஜோடி ஜி.வரலட்சுமி. தெலுங்கில் பிரபலமாக இருந்த ஜக்கையாவும் ஜெயசித்ராவின் தாயார் ஜெயஸ்ரீயும் இளம் ஜோடியாக நடித்தனர். (தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 292**

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

....இதை நீங்கள் புரிந்துகொள்ளாத பொழுதுதான், மந்தமாகவும் மனச் சோர்வுடனும் எப்பொழுதும் கேட்டுக்கொண்டும், ஏதோ நீங்கள் மட்டும்தான் இந்த உலகில் ஏதுமற்றவர் போலவும் எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்.

இங்கு சொல்லப்பட்டவற்றை நீங்கள் உங்கள் இருப்புத் தன்மையிலிருந்து கவனமாகக் கேட்டீர்களானால் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் அற்புதமான கொடுக்கும் வழிகளுக்கு உங்களை இசைவாக வைத்துக் கொள்ளவும் அதனை நுட்பமாக உணரும் திறனையும் பெறுவீர்கள்!

நம்மில் பலரும் கடவுளிடம் ஒரு பயத்துடனேயே பிரார்த்தனை செய்கிறோம்.

தாய்மார்கள் தங்கள் குழந்தைகளிடம், அவர்கள் சில விடயங்களைச் செய்யவில்லையென்றால் கடவுள் அவர்கள் மீது கோபமடைவார் என்று சொல்வதைக் கண்டிருக்கலாம்.

இதுபோன்ற சொற்கள், குழந்தையின் சிறுவயதிலேயே கடவுளைப் பற்றிய ஒரு தவறான கருத்து வேரூன்றக் காரணமாகிவிடுகின்றன.

இவையெல்லாம்தான் குழந்தைகளுக்கு அவர்களின் இளம் பிராயத்திலேயே நாம் கொடுக்கும் நெறிப்படுத்தல்கள்.

இதனால் அவர்கள் வளரும் பொழுது கடுமையான குழப்பத்தை எதிர்கொள்கிறார்கள்.



பிரபஞ்ச இருப்புத் தன்மையை அன்புடனும் நன்றியுணர்வுடனும் அரவணைத்துக்கொள்வதற்குப் பதிலாக மரியாதையுடனும் பயத்துடனும் அதிலிருந்து விலகி நிற்கிறார்கள்.

பயத்துடன் பின்பற்றப்படும் மதம் உங்களை எங்கேயும் எடுத்துச் செல்லாது.

அது உங்களுள் உருமாற்றம் நிகழ்வதற்கான வழியமைக்காது.

உங்களுக்குக் கேட்பதன் மீதுள்ள விசுவாசத்தினால் நீங்கள் பொருளாதார ரீதியாக முன்னேறக்கூடும்.

ஆனால், இருப்புத் தன்மை நிலையிலோ நீங்கள் இருக்கும் இடத்திலிருந்து நகர மாட்டீர்கள்.

வாழ்க்கையின் நோக்கம் அல்லது உண்மையான நிறைவு ஒருபோதும் பொருளாதார ரீதியாக நிகழ முடியாது. அது இருப்புத் தன்மை நிலையில்தான் நிகழ முடியும்.

வெற்றியினால் வரும் மனச்சோர்வினால் பாதிக்கப்பட்டவர்களால் நான் சொல்வதை இன்னும் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும்.

வெற்றியினால் வரும் மனச்சோர்வைப்பற்றி இதற்கு முந்தைய அமர்வுகளில் நாம் நிறைய பேசியிருக்கிறோம். தெய்வீகம் அல்லது பிரபஞ்ச இருப்புத் தன்மையை நோக்கிய ஆழமான அன்பினால் நன்றியுணர்வினாலும் மதமானது பின்பற்றப்பட வேண்டும்.

சமூகம் பயத்தின் பெயரால் கடவுளை வழிபடக் கற்றுக்கொடுப்பினும் நான் சொல்கிறேன், ஒரு போதும் அதைச் செய்யாதீர்கள்.

எப்பொழுதும் தெய்வீகத்தை நோக்கிய அன்புடனும் நன்றியுணர்வுடனுமே பிரார்த்தனை செய்யுங்கள்.


ஒரு சின்னக் கதை...

ஜுன்னாயத் எனும் ஒரு சூஃபி குரு, தினமும் ஐந்து முறை கடவுளுக்குத் தன் நன்றியுணர்வைச் செலுத்துவார். (தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

# இலஞ்சம், ஊழலில் ஈடுபடுவோரை முற்றாகப் புறக்கணிக்க வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு) —

**இலஞ்ச, ஊழலில் ஈடுபடும் கீழ் மட்ட அதிகாரிகளில் இருந்து உயர்மட்ட அதிகாரிகள் வரை புறக்கணிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

பெரிய மனிதர்கள் பில்லியன், ட்ரிலில்லியன் கணக்கில் கொள்ளையிடும் போது கீழ் மட்ட ஊழியர்கள் 400 முதல் 500 ரூபா வரை இலஞ்சம் பெறுவதை நான் பார்த்திருக்கின்றேன்.

ஊழல், மோசடிகளை ஒழிக்கும் முனைப்புகளை கீழ் மட்ட அதிகாரிகளில் இருந்து உயர் மட்ட அதிகாரிகள் வரை செயற்படுத்த புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

இலங்கை மத்திய வங்கி புதிதாக நாணயங்களை வெளியிடுமாயின் அண்மையில் வெளியிட்ட நாணயங்களுக்கு பதிலாக அதற்கு முன்னர் வெளியிட்ட நாணயங்களை வெளியிடுமாறு மத்திய வங்கியின் பிரதிப் பணிப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன்.

தற்போது புழக்கத்தில் உள்ள நாணயத்தாள்களை அடையாளம் காணமுடியவில்லை என பார்வையற்ற பட்டதாரிகளின் சங்கம் முன்வைத்த குறையை கவனத்தில் கொண்டு இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-10)

# இலங்கை முப்படை உயரதிகாரிகளுக்கு விசிஷ்ட சேவை விருது வழங்கப்பட்டது



(கொழும்பு)

இலங்கை முப்படையிலும் நீண்ட காலம் பணியாற்றிய முப்பது அதிகாரிகளுக்கு விசிஷ்ட சேவைக்கான விருது நேற்று முன்தினம் ஜனாதிபதியால் வழங்கி வைக்கப்பட்டது.

இராணுவ வரலாற்றில் வழங்கபடும் விருதுகளில் விசிஷ்ட சேவை விருது மிக உயரியதாகும்.

தரைப்படையின் லெப்டினண்ட் கேணல் தரம் அல்லது அதற்கு மேலான தரத்தில் உள்ள அதிகாரிகள் மற்றும் வான்படையில் வைஸ் மார்ஷல், கடற்படையின் அட்மிரல் தரத்திலான அதிகாரிகள் ஆகியோரில் இருந்து சுமார் 25 வருடங்கள் அல்லது அதற்கு மேலான சிறந்த சேவை வரலாற்றைக் கொணடிருக்கும் அதிகாரிகளுக்கு இந்த விருது வழங்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் விருது பெற்றுக்கொண்டவர்களில் 18 பேருக்கு மேற்பட்டோர் இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்ட பின்னர் இந்த விருதைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

விருது பெற்றுக் கொண்டவர்களில் இராணுவத்தளபதி லெப்டினண்ட் ஜெனரல் கிருஷாந்த டி சில்வா, கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தன, வான்படைத் தளபதி எயார் மார்ஷல் ககன் புளத்சிங்கள ஆகியோரும் விசிஷ்ட சேவா விருது பெற்றுக் கொண்டுள்ளனர். (இ-10)

# பொலிஸார் விடும் தவறுகள் சகஜமானவையாம் - ராஜித



(கொழும்பு)

இலங்கைப் பொலிஸார் திறமையானவர்கள் என்றும் , சிறு சிறு தவறுகள் ஏற்படுவது சகஜம் என்றும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கொட்டதெனியாவ சிறுமி சேயா படுகொலை தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

குறித்த படுகொலைச் சம்பவத்தில் பொலிஸார் பலரைக் கைது செய்த போதும் அவர்கள் அனைவரும் நிரபராதிகள் என்பதுடன், பொலிஸாரின் செயற்பாடு காரணமாக பலத்த அநீதிக்குள்ளாக்கப்பட்டிருப்பதாகவும் ஊடகவியலாளர்கள் சுட்டிக்காட்டினர்.

இதற்குப் பதிலளித்து கருத்து வெளியிடும் போது அமைச்சர் ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அமைச்சர் ராஜித , துப்பறியும் சிங்கம் என்று பெயர் வாங்கிய ஷெர்லக் ஹோம்சுக்கு கூட தவறுகள் நடைபெற்றுள்ளது.

ஏதாவது பாரதூரமான சம்பவங்கள் நடைபெறும் போது கிடைக்கும் சிறு தகவல்களின் அடிப்படையில் சந்தேகத்திற்குரியவர்களை கைது செய்வது வழக்கமான விடயமே.

இல்லாவிட்டால் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் போன்ற விடயங்களை மேற்கொண்டு அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தி விடுவார்கள்.

அதேநேரம் தவறான நபர்கள் கைது செய்யப்பட்டால் அவர்களுக்கு சிறு அநீதி இழைக்கப்பட்டாலும் பின்னர் விடுதலையாகி விடுவார்கள். எனவே பொலிஸார் மட்டும் இந்த விடயத்தில் குறை சொல்ல முடியாது.

இவ்வாறான சம்பவங்களின் போது ஊடகங்களும் பரபரப்பு செய்திக்காக உண்மைகளை திரித்து வெளியிடுகின்றன.

இலங்கைப் பொலிஸார் திறமையானவர்கள் என்பதில் சந்தேகமில்லை. எந்த மனிதரிடத்திலும் சிறு சிறு தவறுகள் நடப்பதைப் போன்று பொலிஸாரும் சிறு சிறு தவறுகள் செய்வது சகஜமானது என்றும் அமைச்சர் ராஜித மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# இன்று ஒரு தகவல்

## வேறுபட்ட பார்வை மாறுபட்ட உணர்ச்சி!

அழகான ரோஜாச் செடி. பரபரப்பாகப் பறிக்கப் போனவன் கையில் கூரிய முள் ஒரு குத்துக் குத்தியது. அழகான ரோஜாப்பூ பூக்கும் செடியில் கடினமான முள்ளை வைத்த கடவுள் முட்டாள் என்பது அவன் முடிவு. அதையே ஒரு ஞானி பார்த்தார். "ஆஹா...கடவுள் கருணையே கருணை! இந்த ரோஜாச் செடி வெறும் முட்செடியாக இருந்திருந்தால் யாராவது இதை வளர்ப்பார்களா? நேசிப்பார்களா? நீர் விடுவார்களா? இந்த முட்செடியை எல்லோரும் வெறுப்பார்களே. இடை இடையே ரோஜாவைச் சிரிக்க விட்டு; இந்தச் செடிக்கும் ஒரு மரியாதை ஏற்படுத்திய கடவுள் "மகா ஞானி" என்று முணுமுணுத்தார்.

உலகமே நாம் எப்படிப் பார்க்கிறோமோ, அப்படியே தெரிவதால்தான் உலகத்தையே "பார்" என்று தமிழர் கூறினர் போலும்!

கார் வைத்திருந்த ஒருவர், விற்றபின் பஸ்ஸில் போக நேர்ந்தால் இதுவும் ஓர் அனுபவம் என்று எடுத்துக் கொண்டால் சிக்கல் இல்லை. "எப்படி எப்படி எல்லாம் வசதியாக இருந் தேன். இப்போது இப்படி ஆகிவிட்டதே" என்று ஒப்பிட்டுப் புலம்பி னால்... கஷ்டம் இன்னும் பெரிதாகத் தெரியும். கந்தபுராணத்தில் இந்தக் கருத்து புலப்படுகிறது.

சூரபன்மன் மகன் பானுகோபன், தேவலோகத்தை எரித்து, இந்திரன் மகன் ஜயந்தனைச் சிறைபிடித்தான். சிறையில் அவன் கைகள் கட்டப்பட்டன. பிறகு வெட்டப்பட்டன. துடித்தான். சாகவும் முடியவில்லை. அமிர்தம் உண்டதால் துண்டித்த கைகள் மீண்டும் சேர்ந்தன. ஜயந்தன் இந்தத் துன்பத்தை ஓர் அனுபவம் என்று ஏற்கவில்லை. இந்திரன் மகனாகச் சுகபோகமாக வாழ்ந்ததை இப்போது நினைத்து...அப்படிப்பட்ட தனக்கா இந்தக் கதி என்று ஒப்பிட்டு அழுதான்.

துன்பத்தின் முடிவில் சிவபெருமானைத் தொழுது ஆறுதல் அடைந்தான் ஜயந்தன். அதை ஏன் முன்கூட்டியே செய்திருக்கக்கூடாது. அந்த நல்லறிவு அவனுக்கு இல்லை. அது இராமபிரானிடம் இருந்ததாகக் கம்பன் படைக்கிறான். எப்படி?

தசரதர் இராமனை அழைத்து "நாளை உனக்கு அரச பதவி" என்றார். மகிழவும் இல்லை. வெறுக்கவும் இல்லை. "கடமை" என்கிறான் காகுத்தன். ("காதல் உற்றிலன், இகழ்ந்திலன், கடன் இது என்று உணர்ந்தும்...")

அரண்மனை உத்தரவை அந்தப்புரம் இரத்து செய்தது! அந்தக் காலத்திலேயே அந்தப்புரம் அரண்மனை முடிவுகளை மாற்றி இருக்கிறது! பதினான்கு வருட வனவாசம் இடியாக வந்து இறங்கியது. இராமன் துடிக்கவில்லை. "கைகேயி ஒழிக!" என்று அரண்மனைச் சுவர்களை அசிங்கப்படுத்த ஆட்களை ஏவவில்லை. "சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை" யாக இருக்கிறான் இராமன்.

இராமன் இன்பத்துக்கு இன்பப்படாத துன்பத்துக்குத் துன்பப்படாத ஞானி-என்பதை ஓவியத்தில் வரைந்த தாமரையாக விளங்கும் இராமன் முகம் விளக்கும் தாமரை என்று எழுதாமல் ஓவியத்தில் வரைந்த தாமரை என்று எழுதி கம்பன் ஆழமான உண்மையை அழகாக விளக்கினான்.

தாமரை மலரும் வாடும். மீண்டும் மலரும். வாடும் ஆனால் ஓவியத்தில் வரைந்த தாமரை மலராது வாடாது என்றும் ஒன்று போல அழகு காட்டும். அதனால்தான் இன்ப துன்பங்களால் பாதிக்கப்படாத இராமனுடைய நல்லறிவை ஓவியத் தாமரை போன்ற முகம் என்று எழுதினான் கம்பன்.

இராச்சியத்தை இழந்த போது கூட இராமன் வருந்தவில்லை. துன்பத்தைத் துன்பமாக நினைக்காத துணிவு அவன் சொத்து. நாற்காலிகள் நம்மை விடக் கீழானவை. நாற்காலியைத் தூக்கிக் கொண்டு நிற்க முடியாது! அதன் மேல்தான் நாம் உட்கார வேண்டும். பதவிகளைத் தம்மை விடப் பெரிதாக நினைப்பவர்கள் தான் பதவிகளை இழக்கும்போது பதறுகிறார்கள்.

"காட்டுக்குப் போ" என்கிற கைகேயி "புழுதி படிந்த கொடிய காட்டுக்குப் போ" என்ற பொருளில் "பூமிவெங்கானம்" என்கிறாள். இராமனோ "மின்னுகிற ஒளி பொருந்திய காட்டிற் குப் போகிறேன்" என்ற பொருளின் "மின் ஒளிர் கானம்" என்றான். கொடுமை காட்டிலே இல்லை. கைகேயி மனத்தில் இருக்கிறது. ஒளியும் காட்டிலே இல்லை. இராமன் மனத்திலே இருக்கிறது. இராமன் வனவாசத்தை ஒரு புதிய அனுபவமாக வரித்துக் கொண்டானே ஒழிய அரண்மனை வாழ்வோடு ஒப்பிட்டு அழுது துடிக்கவில்லை.

ஆனால் துரியோதனன்..அப்படியா? தன் செல்வத்தைத் தருமனுடைய செல்வத்தோடு ஒப்பிட்டுப் பார்த்துத் தரித்திரனாகிப் புலம்பித் துடிக்கிறான். பாஞ்சாலி சபதத்தில் பாரதி பாடுகிறார்.

**"ஏழையாகி இரங்குதல் உற்றான்"**

துரியோதனன் எப்போது ஏழையானான்?

தருமனுடைய செல்வத்தோடு ஒப்பிட்டால் தான் ஒரு பஞ்சை பராரி என்பது துரியன் நினைப்பு. அதனால் பொறாமையில் புலம்பியவன் ஏழையாகி அழுகிறான் என்றான் பாரதி.

இதற்கு எதிராகக் குமரகுருபரர் என்ற ஞானி, செல்வம் என்பது என்ன? என்ற கேள்விக்கு செல்வம் என்பது சிந்தனையின் நிறைவு என்கிறார். துரியோதனன் தரித்திரன் அல்லன். ஆனால் தரித்திர உணர்வு அவனைத் தாக்கிவிட்டது.

கோயில் பூசை செய்யும் ஏழை பிராமணர் மகளான ஆண்டாள் மனதால் பணக்காரி. எப்படி? திருமால் இருஞ்சோலை நம்பிக்கு நூறு அண்டா நிறைய நெய், நூறு அண்டா நிறைய அக்கார அடிசில் படைக்கிறாள். தன் பாசுரத்தில் எப்படி? அவள் மனத்தில் வறுமை இல்லை. தரித்திரபுத்தி அவளிடம் எப்படி வரும்? திருமாலின் தேவியல்லவா அவள்!

# ஆரோக்கியமான வாழ்க்கை முறையால்

# இதய நோய்களை தவிர்க்க முடியும்!




இதய சிகிச்சை நிபுணர் பூ.லக்ஷமன்

ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றினால் மட்டுமே இதய நோய்கள் வராமல் தவிர்க்க முடியும் என யாழ். போதனா வைத்தியசாலை இதய சிகிச்சை நிபுணர் பூ.லக்ஷமன் தெரிவித்துள்ளார்.

நேர்காணல்:-பொ.சோபிகா

இதய நோய்கள் தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலை இதய சிகிச்சை நிபுணர் பூ.லக்ஷமனுடனான நேர்காணலின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,




இதய நோய் இரண்டு பிரிவாக ஏற்படுகின்றது. முதலாவது பிறப்பில் இருந்தே ஏற்படும் நோய். அதாவது இதயச் சுவரில் உள்ள துவாரம், இரத்தக்குழாயின் அமைப்பில் உள்ள வேறுபாடு காரணமாகவே குழந்தைகளுக்கு இதயக் கோளாறுகள் ஏற்படுகின் றன.

இரண்டாவது பிற்காலத்தில் வயது வந்தவர்களுக்கு ஏற்படும் நோய். அதாவது பெரியவர்களுக்கு இரத்தக்குழாய் அடைப்பு போன்ற பிரச்சினைகள் வயதான காலத்தில் ஏற்படுகின்றது.

பொதுவாக இதயத்திற்கு இரத்தத்தை வழங்கும் முடியுருநாடியில் கொழுப்பு படிவு ஏற்பட்டு அடைப்பு ஏற்படுகின்றது.

மற்றும் இதய வால்வுகளை பாதிக்கும் நோய். இது சிறுவயதில் ஏற்படும் மூட்டு வாத காய்ச்சலை சரியான முறையில் கவனிக்கப்படாததால் அது காலப் போக்கில் இதய வால்வுகளை பாதிக்கின்றது.

இந்த மூட்டுவாதக் காய்ச்சல் இலங்கையில் குறைவடைந்து வருகின்ற போதிலும் துரதிர்ஷ்டவசமாக வடகிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் இந்த நோய்த்தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. அதாவது, வாழ்க்கைத் தரம் உயர்வடையாத காரணத்தினால் வறுமை தொடர்ந்து இருப்பதனாலும் இடப்பெயர்வினாலும் அகதி முகாம்களில் இடநெருக்கடியில் இருப்பத னாலும் இந்த நோய் ஏனைய மாவட்டங் களை விட வடமாகாணத்தில் அதிகரித்துக் காணப்படுகிறது.



அந்த வகையில் இதய நோய்க்கான அறிகுறிகளை தெரிந்து கொள்ளுதல் மிக முக்கியம் ஆகும்.

**சிறு பிள்ளைகளுக்கான அறிகுறி**

குழந்தை பிறந்தவுடன் நீலமாக இருத்தல். அழும்போதும் பால் குடிக்கும் போதும் நாக்கு, பாதம், கை என்பன நீலநிறமாக மாறுதல் மற்றும் குழந்தை வளரும்போது சாதாரண நிறையை விட குறைவாக இருத்தல்.

இவ்வாறான மாற்றங்கள் தென்பட்டால் உடனடியாக வைத்தியரை நாடி குழந்தைகளை பரிசோதனைக்கு உட்படுத்துவது நல்லது.

**வளர்ந்தவர்களுக்கான அறிகுறி**

வேலை செய்யும் போதும் வேகமாக நடக்கும் போதும் படிகளில் ஏறும் போதும் நடு நெஞ்சில் இறுக்கம் ஏற்பட்டு நெஞ்சு வலி மற்றும் கழுத்து, தாடை, தோள் பட்டை, முதுகு ஆகியவற்றில் வலி ஏற்படுதல்.

சாதாரண நேரங்களில் வேலை செய்யும்போது படபடப்பு, களைப்பு, மூச்செடுப்பதற்கு கடினமாக இருத்தல்.

பாரம் தூக்கும்போதும் ஓடும்போதும் கடின வேலை செய்யும் போதும் மூச்சுத் திணறல், வாந்தி, வியர்த்தல், மயக்கம் என்பன ஏற்படுதல்.

இதில் எந்த அறிகுறியை உணர்ந்தாலும் உடனடியாக கவனத்தில் எடுத்து அவசர சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

இதயநோய் ஏற்படுவதற்கு மிக முக்கியமாக 4 காரணிகளை குறிப்பிட முடியும்.

நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், புகைத்தல், உயர் கொழுப்பு காணப்படுதல் போன் றவை குறிப்பாக மாரடைப்பு ஏற்படுவத ற்கு ஏதுவான காரணிகளாக இருக்கிறது.

இதில் நீரிழிவு இலங்கையில் அதிகரித்துக் காணப்படுகிறது. அதிலும்யாழ் மாவட்டத்தில் இளம் வயதினரிடையே அதிகரித்துள்ளது. இதனால் 40 தொடக்கம் 60 வயதுக்கு இடைப்பட்டவர்களையே இதயநோய் அதிகமாக பாதிக்கின்றது. இதற்கு முக்கிய காரணம் நீரிழிவு நோய் ஆகும்.

புகைத்தல் தொடர்பாக இளம் சமூகத்தினரிடையே விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் புகைத்தல் பழக்கம் குறைவடைந்து வருகின்றது. அதனால் இதய நோய் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் குறைவடைந்து வருகின்றது.

அடுத்து உயர் குருதி அமுத்தம் மற்றும் குருதியில் உள்ள உயர் கொழுப்பு அதிகரிப்பு தற்போது அதிகமாகத்தான் காணப்படுகிறது. ஏனெனில் முன்னைய காலங்களை விட இப்பொழுது உணவுப் பழக்க முறையில் முற்று முழுதாக மாற்றம் ஏற்பட்டுள்ளது. உணவு வியாபாரமயமாக்கப்பட்டதனால் கடை உணவு களையே அதிகமானவர்கள் உட்கொண்டு வருகின்றனர். இந்த உணவுகளில் எண்ணெய்த்தன்மை, உப்புத்தன்மை அளவுகளில் உள்ள மாற்றம் காரணமாக கொழு ப்பு உடலில் அதிக ரிக்கிறது.

அத்துடன் உடல் உழைப்பு குறைந்து விட்டது. பாடசாலை, வேலை, வீடு என மனிதர்களின் பழக்க முறை இய ந்திரமயமாக்கப்பட்டமையால் உடற்பயிற்சி என்பதில் பலர் அக்கறை காட்டுவதில்லை.

இவ்வாறான செயற்பாடுகள் தான் மனிதர்களை இதய நோயை நோக்கித் தள்ளுகின்றன.

தற்போது இதய நோய்க்குரிய சிகிச்சை முறை முன்னேறிச்செல்கின்றது. எனவே மாரடைப்பில் இருந்து தப்பிப்பவர்கள் கூடிக் கொண்டே செல்கின்றார்கள். ஆகவே இதய நோயுடன் வாழ் பவர்கள் அதிகரித்துக்கொண்டேதான் இருக்கின்றார்கள்.

அதே போன்ற மூட்டுவாதக் காய்ச்சல் பெண்களை அதிகமாக தாக்குகின்றது. சிறு வயதில் ஏற்படும் இந்த நோய் கவனிக்கப்படாமல் இருப்பதால் 20 தொடக்கம் 30 வயதுகளில் இந்த நோய்க்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

கூடுதலாக கர்ப்பம் தரிக்கும் போது பெண்களை அதிகமாக பாதிக்கின்றது.

இந்த நோய் வருமுன் தடுப்பதற்கும் நோயை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் எமது பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

அதாவது உடற்பயிற்சியை அதிகரித்து புகைத்தல் பழக்கத்தை முற்றுமுழுதாக இல்லாமல் செய்ய வேண்டும்.

இலைக் கறிவகைகள், பழவகைகள், சிறுதானியங்களை கூடுதலாக உள்ளடக்கிய கோதுமை மாவினாலான உணவுகளை அளவுடன் உட்கொள்வதை பழக்கமாக்கிக்கொள்ள வேண்டும்.

சிறுவயதில் இருந்து பழம் சாப்பிடுவதை முக்கியமான பழ க்கமாகக்கொள்ள வேண்டும்.



அதாவது பிரதான உணவுக்குப்பின் பழம் சாப்பிடுவதை தவிர் த்து பிரதான உணவுக்கு இடையில் பழம் சாப்பிடும் பழக்க த்தையும் ஏற்படுத்த வேண்டும்.

உடற்பயிற்சியை எமது அன்றாட கடமைகளில் ஒன்றாக கொண்டுவரவேண்டும். அத்துடன் உடற்பருமன் கூடுவதை கவனத்தில் எடுத்து அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

இயந்திரமயமாக்கப்பட்ட வாழ்க்கைமுறையை மாற்றி மனநிலையில் அமைதியை உருவாக்க வேண்டும்.

மன அழுத்தம் உடல் உறுப்புக்களை பாதிக்கின்றது. எனவே அதை தடுப்பதற்கு ஓய்வும் வெவ்வேறு விதமான கலை, கலாசார நிகழ்வுகளில் பங்கு கொள்வதும் அவசியமாகும்.

சமூக நிறுவனங்களுடனும் கிராம மட்ட அமைப்புக்களுடனும் தொடர்பில் இருக்க வேண்டும். பல்வேறு சமூக செயற்பாடுகளில் ஈடுபட்டு மன அழுத்தத்தை குறைத்து சுதந்திரமாக வாழ பழகிக்கொள்ள வேண்டும். இச் செயற்பாடுகளில் சிறுவர்களையும் ஈடுபடுத்த வேண்டியதும் கட்டாயமாகும்.

வட பகுதியில் துரதிர்ஷ்டவசமாக இளம் வயதினரிடையே இந்த இதய நோய் தாக்கம் அதிகரித்துள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இதய நோய்க்கான சிகிச்சைகள் நடைபெற்று வருகின்ற போதிலும் இதய நோய் சத்திர சிகிச்சை வெளி மாவட்டங்களிலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நாளொன்றுக்கு இதய சத்திர சிகிச்சைக்காக அண்ணளவாக 5 பேர் புதிதாக வருகின்றார்கள். இடைநிலை சிகிச்சை பெறுவதற்கு நாளொன்றுக்கு 10 பேர் வரையில் வருகின்றார்கள். அதிகளவாக ஆண்களே மாரடைப்பு நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றார்கள்.

யாழ். போதனா வைத்தியசாலையில் ஒரு கிழமைக்கு 3 தடவைகள் இதய நோய்க்கான சிகிச்சை (கிளினிக்) நடைபெற்று வருகின்றது.

அதாவது திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் பி.ப. 1 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெற்று வருகின்றது. ஒரு கிழமைக்கு 600 இற்கு மேற்பட்டவர்கள் இதய நோய் சிகி ச்சைக்காக வருகின்றார்கள்.

தொற்றா நோய்களில் மிகப் பாதிப்பை ஏற்படுத்துகி ன்றபெரிய நோயாக இந்த இதய நோயை குறிப்பிட முடியும். இந்த நோய் ஏற்படாமல்குணப்படுத்து வதை விட கட்டுப்படுத்த முடியும். எனவே எமக்கு சுக வாழ்வு என்பது மிக முக்கியமாகும்.

சுகவாழ்வு என்பது நோயற்றநிலை மாத்திரம் அல்ல. உடல்,உள, சமூக ஆன்மீக நலம் ஒன்றுபட்டிருந்தாலே ஒரு மனிதனின் வாழ்வு சுகவாழ்வு பெற முடியும். அதற்கான நடவடிக்கைகளை நாம் தொடர்ந்து மேற்கொண்டால் மாத்திரமே எமது எதிர்கால சந்ததியினரை காப்பாற்றிக்கொள்ள முடியும்.

# போரால் வெற்றிகொள்ள முடியாத இதயங்கள் கருணையால் வெற்றி

## மகிந்தவை இகழ்ந்து மைத்திரியை புகழ்ந்த அமைச்சர் பீ.ஹரிசன்

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வினால் போர் மூலம் வெற்றிகொள்ள முடியாத இதயங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருணையின் ஊடாக வென்றெடுத்துள்ளார் என அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்துள்ளார்.**



மகிந்த ராஜபக்ஷ போரை வென்றெடுத்த போதிலும் தமிழ் மக்களின் இதயங்களை வெற்றிகொள்ள முடியவில்லை.

நாட்டின் தமிழ் மக்களது மட்டுமன்றி சர்வதேச சமூகத்தின் கவனத்தையும் பாராட்டுக்களையும் வென்றெடுக்க மகிந்தவினால் முடியவில்லை.

எனினும், தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, போர் செய்யாத போதிலும் வடக்கு கிழக்கு தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் உள்ளிட்ட அனைவரினதும் ஆதரவினைப் பெற்றுக்கொண் டுள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது இந்த விடயம் உறுதியாகியுள்ளது.

நாட்டின் அனைத்து மக்களும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கே ஆதரவளித்தனர்.

அவருக்கு மட்டுமன்றி வடக்கில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஆதரவளிக்கப்பட்டது.

ஜனாதிபதிக்கு உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் நன்மதிப்பு கிட்டியுள்ளது.

இலங்கையர்கள் என்ற ரீதியில் இதனை வெற்றியாகவும் கௌரவமாகவும் கருத வேண்டும்.

எனவே இனி நாட்டில் இன, மத, நிற பேதங்கள் கிடையாது என அமைச்சர் ஹரிசன் சிங்கள ஊடகமொன்றுக் குத் தெரிவித்துள்ளார். (இ-10)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 140 |
| தக்காளி | 60 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 |
| கோவா | 40 | 60 | 70 |
| கரட் | 60 | 80 | 60 |
| பூசணி | 40 | 50 | 30 |
| புடோல் | 40 | 60 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 90 |
| பெரிய வெங்காயம் | 140 | 100 | 110 |
| பாகற்காய் | 100 | 120 | 250 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 80 |
| பயற்றங்காய் | 60 | 120 | 120 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 20 | 50 | 40 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 60 | 80 | 60 |
| போஞ்சி | 180 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | 50 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 40 |
| தேசிக்காய் | 250 | 320 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 250 | — | — |
| வெங்காயப்பூ | 150 | 200 | 160 |
| முள்ளங்கி | 30 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 25 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 513

ராகுலன் பாலா




என்ன ஒரு தன்னடக்கம்

ராம்குமரன்



பாக்காம கால விட்டா பாலுதான்

கௌதம்



டொறீன்



கால் கொடுத்தவன் - கரம் கொடுத்திருந்தால் கல்விச்சாலைக்கு போயிருப்பான் இந்த சிறுவன் !

பிரதி மகாராஜா



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அவன்கார்ட் நிறுவனம் 9100 மில்லியன் ரூபா திருப்பி செலுத்த சம்மதம்

அவன்கார்ட் நிறுவனத்திற்கு எதிராக நேற்று முன்தினம் இடம்பெற்ற விசாரணைகளின்போது ரூபா 9100 மில்லயின் திருப்பி செலுத்த சம்மதம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பணத் தொகையினை எதிர்வரும் 10 மாதங்களுக்குள் இலங்கை ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்திற்கு செலுத்த ஒத்துக்கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் நடத்தப்பட்ட விசாரணைகளின் போதே இலங்கை ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவன கணக்காளர் பிரசாத் இந்திக இதனைத் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் 2009 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்நிறுவனத்தினால் அதிகரித்த இலாபம் ஈட்ட முடியாமல் போனதாகவும் இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# வடக்கில் மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்தம் மற்றும் தாழ் அழுத்த மின் விநியோகங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை வட மாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென இலங்கையின் மின்சாரசபை அறிவித்துள்ளது.

அந்த வகையில்,

இன்று சனிக்கிழமை யாழ்.பிரதேசத்தில் மயிலங்காடு, குப்பிளான், வேலணை, மடத்துவெளி, ஆலடி, புங்குடுதீவு, இறும்பிட்டி, குறிகட்டுவான், கொடிகாமம், கலைவாணி, வறணி, இயற்றாலை, மந்துவில், கரம்பைக்குறிச்சி, வறணி, கரம்பன், வலைத்தோட்டம், புங்குடுதீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் இரத்தினபுரம், கோவிந்தன்கடை சந்தி, பன்னன்கண்டி, வட்டக்கச்சி, கறுப்பிக்குளம், உடச்சகண்டி, மாயவனூர், இராமநாதபுரம், முழுங்காவில், நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், 652 ஆவது படைப்பிரிவு முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் மொகமட் ஐஸ் தொழிற்சாலை, இரணைமடு, வட்டக்கச்சி பாம், இரணைமடு விமானப்படை முகாம் I மற்றும II ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் மடுக்கந்த கிராமத்திலும், மன்னார் பிரதேசத்தில் தாராபுரம், வங்காலை, வங்காலை கடற்படைமுகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும்,

11.10.2015 ஞாயிறு யாழ் பிரதேசத்தில் மயிலங்காடு, குப்பிளான், தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி, சிவன் அம்மன் வீதி, கந்தர்மடம், இலுப்பையடி சந்தி, பருத்தித்துறை வீதியில் நாக விகாரையில் இருந்து பாரதியார் சிலை வரை, விக்ரோறியார் வீதி, மின்சார நிலைய வீதியில் ஒரு பகுதி, புகையிரத நிலையப் பிரதேசம், மார்டின் வீதி, யாழ் 2ம் 3ம் 4ம் குறுக்கு தெருக்கள், ஸ்ரான்லி வீதியில் புகையிரதக் கடவையிலிருந்து இராசாவின் தோட்ட வீதி வரை, அம்பலவாணர் வீதி, அன்னசத்திர வீதி, ஆஸ்பத்திரி வீதி,வேம்படி சந்தியிலிருந்து மார்டின் வீதி வரை, ஸ்ரான்லி வீதியில் ஆரியகுளத்திலிருந்து முட்டாசுக்கடை சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதியில் ஒரு பகுதி, அரசடி, சம்மந்தர்கடை, கிழவிதோட்டம், யாக்கரு, கலிகை, துன்னாலை, தாமரைக்குளத்தடி, இந்திரஅம்மன் கோவிலடி, கப்பூது, சங்கத்தானை, சாவகச்சேரி, கச்சாய் வீதி, சாவகச்சேரி நகரம், நுணாவில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத்தொகுதி, நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆண்கள் விடுதி, டம்றோ பலாலி வீதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, AVNOR பிறைவேற் லிமிற்றெட், மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் முழுங்காவில், நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், வட்டக்கச்சி, இராமநாதபுரம், திருவையாறு 11, தொண்டமான்நகர், இரணைமடு, திருமுறிகண்டி, கொக்காவில், கனகபுரம், செல்வநகர், கோணாவில், ஸ்கந்தபுரம், அக்கராயன்குளம், வன்னேரி. ஆனைவிழுந்தான், ஜெயபுரம், முழுங்காவில், நாச்சிக்குடா, வேரவில், வலைப்பாடு, விக்கிரமரட்ண, மத்திய வங்கி, SFHQ இரணை மடு, MAS , Active, யுனிச்செலா, பொறியியல் பீடம், விவசாயபீடம், கார்கில்ஸ் Argo, இராணுவ பாசறை I, இராணுவ பாசறை II, இராணுவ பாசறை, 7வது படையணி, கிளிநொச்சி ஸ்ரீலங்கா ரெலிக்கொம், கிளிநொச்சி வைத்தியசாலை, 651வது படைப்பிரிவு முகாம், 652வது படைப்பிரிவு முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் மொகமட் ஐஸ் தொழிற்சாலை, வட்டக்கச்சி பாம், விமானப்படை-I மற்றும் II, 2 வது விஷேட படைப்பிரிவு, TRC I, TRC II, Signal Medium 652வது படைப்பிரிவு முகாம், நாச்சிக் குடா கடற்படை முகாம், இயாஸ் மொகமட் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சாம்பல் தோட்டம் கிராமத்திலும், மன்னார் பிரதேசத்தில் முசலிப்பிரதேசம், பரிகாரிக் கண்டல், பூந்தீவுக்கண்டல், மடுக்கரை, புதுக்காமம், மருதமடு, பொன்னாச்சிக் குளம், மணற்குளம், மேதாவெளி, பொற்கேணி, கொக்குப்படையான், தம்பட்டமுசலி, மறிச்சசுக்கட்டி, கூழாங்குளம், புதுவெளி, அரிப்பு நீர்ப்பாசன சபை, சிலாவத்துறை, CECB, முள்ளிக்குளம் கடற்படை முகாம், சிலாவத்துறை கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

## பொலிஸ்மா அதிபராக கனடாவில் ஈழத் தமிழர்

கடனாவின் பாதுகாப்புப்படை, காவல்துறை ஆகியவற்றில் கால்பதித்துவரும் பெரும்பாலான தமிழர்களில் ஒருவர் துணைப்பொலிஸ்மா அதிபராக தெரிவு செய்யப்பட்டு கனடியத் தமிழருக்கு பெருமை சேர்த்துள்ளார்.

ஹால்ரன்பிரதேசபொலிஸ் சேவையில் கான்ஸ்டபிள் பதவியில் இணைந்து தனது திறமைகளில் சார்ஜன்ட் மற்றும் ஒருங்கிணைப்பாளர், பொறுப்பதிகாரி, பொலிஸ் அத்தியட்சகர் போன்ற பதவி நிலைகளை வகித்த நிசாந்தன் துரையப்பா தற்போது துணைப்பொலிஸ்மா அதிபராக தரமுயர்த்தப்பட்டிருக்கிறார். (3)

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கைக்கு ஐரோப்பியர் வருகை 08



....இந்தியாவுக்கு வியாபாரம் செய்ய வந்த வெள்ளையர்கள் எப்படிச் சூழ்ச்சிகள் செய்து நாட்டைப் பிடித்தார்களோ, அதேபோல் இலங்கைக்கு வியாபாரம் செய்யப் போன ஐரோப்பியர்கள் தந்திரமாக நாட்டைக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

இலங்கைக்கு முதன் முதலாக வந்த ஐரோப்பியர்கள் போர்ச்சுக்கீசர்கள். ஏறக்குறைய இந்தியாவுக்குள் போர்ச்சுக்கீசியர்கள் அடியெடுத்து வைத்த காலகட்டத்தில்தான் அவர்கள் இலங்கையும் கைப்பற்றினர்.

கி.பி. 1505 ஆம் ஆண்டின் இறுதியில் போர்ச்சுக்கீசர்கள் வந்த கப்பல் ஒன்று, புயலில் சிக்கியது. புயலில் திசை மாறி அந்தக் கப்பல் இலங்கையின் கடலோரப்பகுதியில் ஒதுங்கியது. அந்தக் கப்பலின் கேப்டன் பெயர் டாம் லூரங்கோ.

### உள்நாட்டு குழப்பம்

அப்போது இலங்கையில் கோட்டை, சித்தவாகா, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய 4 ராஜ்ஜியங்கள் இருந்தன. இந்த 4 ராஜ்ஜியங்களின் ஆட்சியாளர்களிடம் ஒற்றுமை இல்லை. உள்நாட்டுக் குழப்பங்கள் நிலவின.

முதலில் வியாபாரம் செய்வதே போர்ச்சுக்கீசியர்களின் நோக்கமாக இருந்தது. பின்னர் இலங்கையின் சூழ்நிலையைப் பார்த்த அவர்கள், ஆட்சியைப் பிடிக்க இதுவே தக்க தருணம் என்று தீர்மானித்தனர்.

அவர்களிடம் நவீன போர்க் கருவிகள் இருந்தன. அவற்றைப் பயன்படுத்தி, இலங்கையின் மேற்கு கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டனர்.

பிறகு கொஞ்சம் கொஞ்சமாக மற்ற பகுதிகளிலும் ஊடுருவினர்.

### தமிழ் மன்னன்

போர்ச்சுக்கீசியர்கள் இலங்கையில் கோட்டை இராச்சியத்தைக் கைப்பற்றிக்கொண்டபோது யாழ்ப்பாண ராஜ்ஜியத்தை ஜெகராஜசேகரன் என்கிற முதலாவது சங்கிலி (1519-1561) என்ற தமிழ் மன்னன் ஆண்டு வந்தான். யாழ்ப்பாண அரசைக் கைப்பற்ற போர்ச்சுக்கீசியர்கள் பலமுறை முயன்றும் தோற்றுப் போனார்கள்.


முடிவில் மன்னாரில் வியாபாரம் மட்டும் செய்து கொள்கிறோம் என்று சங்கிலி மன்னனிடம் அனுமதி பெற்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு வியாபாரம் செய்து வந்த போர்ச்சுக்கீசியர்கள் தமிழரிடையே இருந்த சாதிப் பாகுபாட்டைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு பகுதியினரைத் தங்களோடு சேர்த்துக்கொண்டு சங்கிலிகது எதிராகக் கலகம் செய்தனர்.

சங்கிலி அங்கு தன் படையோடு சென்று கலகத்தை அடக்கினான். கலகத்துக்குக் காரணமாக இருந்தவர்களின் தலையைத் துண்டித்தான். (தொடரும்)



தூக்கு மேடையில் சங்கிலி மன்னன்



யாழ். மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாபெரும் நடைபவனி நிகழ்வு நேற்றையதினம் கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்றது. மேற்படி நடைபவனியை பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்த யாழ்.இந்தியத் துணைத்துவர் ஆ.நடராஜன் கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார். காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகிய நடைபவனி புகையிரதக் கடவை வீதியூடாக சென்று புகையிரதக் கடவை வீதியூடாக பலாலி வீதிக்கு சென்று இராமநாதன் வீதி, பிற வுண் வீதி, அரசடி வீதி ஊடாக கஸ்தூரியார் வீதியைச் சென்றடைந்து அங்கிருந்து கல்லூரி வீதி காங்கேசன் துறை வீதியையடைந்து வேம்படி வீதியூடாக கல்லூரியை வந்தடைந்தது. மேற்படி நடைபவனியில் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:உ.சாளின்)

# லலித் வீரதுங்கவை ஏன் கைது செய்யவில்லை?

## கொழும்பு நீதிபதி கேள்வி



முன்னாள் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்பு மானிய ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் அனுஷா பல்பிட்ட ஆகியோரை கைது செய்யாதது ஏன் என்பது குறித்து தம்மிடம் விளக்கம் அளிக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கை அரசின் நிதியை தவறாக பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்பு மானிய ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் அனுஷா பல்பிட்ட ஆகியோருக்கு எதிராக மேல்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் அவர்களைக் கைது செய்து நீதவான் நீதிபதி முன்னர் ஆஜர்படுத்தத் தவறியது ஏன் என்பது குறித்து தம்மிடம் விளககமளிக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் பொலிஸ்துறை நிதி மோசடிப் பிரிவின் பொறுப்பதிகாரிக்கே உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் நடந்தபோது 600 மில்லியன் ரூபா அரச நிதியை அப்போதைய ஜனாதிபதியும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகவும் போட்டியிட்ட மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக பயன்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ள லலித் வீரதுங்க மற்றும் அனுஷா பல்பிட்ட ஆகிய சந்தேக நபர்களுக்கு எதிராக சட்டமாஅதிபர் கடந்த புதன்கிழமை நேரடியாக மேல்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்.

ஆனால் அரச சொத்துக்கள் தொடர்பான சட்டத்துக்கு அமைய இவ்வாறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும் நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவது அவசியமென்று நீதவான் நீதிமன்ற நீதிபதி தெரிவித்தார்.

அப்படி செய்யாமல். லலித் வீரதுங்க மற்றும் அனுஷா பல்பிட்ட ஆகிய சந்தேக நபர்களைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் தவறியமை குறித்து கடுமையான குற்றச்சாட்டுக்களை சுமத்திய நீதிபதி நிஷாந்த பிரிஸ் இதன் மூலம் பொலிஸார் நீதவான் நீதிமன்றத்தின் அதிகாரத்தை அவமதித்துள்ளதாக தெரிவித்தார்.

எனவே இந்த வழக்கில் தமது செயற்பாடு குறித்து அடுத்த மாதம் 5 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கம் தருமாறு நீதிபதி நிஷாந்த பிரிஸ் பொலிஸ் நிதி மோசடிப்பிரிவின் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார். (இ-10)

# இலங்கை வந்த சீனாவின் உயர்மட்டக்குழு ஜனாதிபதி, மகிந்தவுடன் கலந்துரையாடல்

இலங்கைக்கு விஜயம்மேற்கொண்டிருக்கும் சீனாவின் உயர்மட்டக் குழுவொன்று நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் முக்கிய கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

சீன பிரதி வெளிவிவகார அமைச்சர் liu zhenmin தலைமையில் இந்தக் குழுவினர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம்வியாழக்கிழமை முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இந்தக் குழுவினர் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவை சந்தித்து கலந்துரையாடல்ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு சீன நிதியுதவி தொடர்பாகவும் கருத்துப் பரிமாற ல்கள இடம்பெற்றுள்ளது.

இதன் பின்னர் சீனாவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் liu zhenmin முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்து சிநேகபூர்வமான கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

## சித்திரக்கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் இயங்கும் ஐ.ஏ.ரி.சித்திரப் பயிற்சி நிறுவனத்தின் 15 ஆவது நிறைவினை முன்னிட்டு நிறுவன மாணவர்களின் படைப்புக்கள் அடங்கிய இணைய வழி சித்திரக் கண்காட்சி இலவச இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய www.iatart webs.com என்ற இணையத்தளத்தில் கண்காட்சியை பார்வையிட முடியும்.

அத்துடன் கூகுளிலும் iatart என பதிவு செய்து கண்காட்சியை பார்வையிட முடியும்.

நிறுவனத்தில் பயிலும் 5 வயது தொடக்கம் 17 வயது வரையான மாணவர்களின் இணைய வழி ஓவியக் கண்காட்சிகளே இவ்வாறு இணையத்தளத்தில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது. (இ-5)

# கலாமை பெருமைப்படுத்தும் கனிவுமதியின் "அக்கினிக்குஞ்சு" கவிதை நூல் வெளியீடு



உலகப்புகழ்பெற்ற விஞ்ஞானியும் இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவருமான 'பாரத ரத்னா' டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாமின் பிறந்த தினத்தை (15.10. 2015) முன்னிட்டு இலங்கைக் கவிஞர் கனிவுமதியால் எழுதப்பட்ட கவிதைத் தொகுப்பான 'அக்கினிக் குஞ்சு' நூல் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு வெள்ளவத்தை சங்கம் ஒழுங்கையில் அமைந்துள்ள கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

கல்வி அமைச்சின் பிரதி ஆணையாளர் லெனின் மதிவானம் தலைமையில் நடைபெறவுள்ள வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் கவிஞர் 'மல்லியப்பு சந்தி' திலகராஜ் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் வாழ்த்துரையினை பேராசிரியர் சோ.சந்திரசேகரன் நூலின் சிறப்பு குறித்தான நயப்புரையினை மு.மயூரன் ஆகியோர் வழங்கவுள்ளார்கள்.

அப்துல் கலாம் பற்றி எழுதப்பட்டுள்ள இக்கவிதை நூலில் அடங்கியுள்ள கவிதைகள் இதுவரை எந்த ஒரு அச்சு ஊடகத்திலோ இணையத்தளத்திலோ வெளிவந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)




# கரடி தலையில் தர்பூசணி



...இப்போதெல்லாம் இது போன்ற தலைக்கவசங்கள் கடைகள்ல நிறைய கிடைக்கின்றன. அதனால பொலிஸ்காரங்கள ஈஸியா ஏமாத்திடலாம்" என்றது கரடி.

"அட! பொல்லாத கரடியாரே. நீங்க தான் அவுங்கள ஏமாற்ற நினைச்சால், நீ தான் ஏமார்ந்து போவீங்க" என்றது நரி.

"சரிசரி, பேசியே என்னோட நேரத்தை வீணாக்காங்தீங்க. ஒரு பழத்தைக் கொடு" என்று கூறி வாங்கிக் கொண்டு போனது கரடி.

இரண்டு நாட்களுக்கு பிறகு...

வெளியே செல்ல தனது குட்டிக்கரடியை வண்டியின் முன்னே உட்கார வைத்துக் கொண்டது. தயாராக வைத்திருந்த தர்பூசணி தலைக்கவசத்தைத் தலையில் மாட்டிக்கொண்டு புறப்பட்டது கரடி.

முந்தைய நாள் செய்திருந்த மழையால் சாலையெங்கும் ஒரே தண்ணீர். எதிரே இருந்த பள்ளத்தைக் கவனிக்காமல் கரடி ஓட்டி வந்த வாகனம், பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது. அந்த வேகத்தில் கரடி தூக்கி எறியப்பட்டது. கரடி விழுந்த வேகத்தில் தலையில் போட்டிருந்த தர்பூசணி சுக்கல் சுக்கலானது. கரடியின் மண்டை உடைந்து ரத்தம் பெருக்கெடுத்தது. குட்டிக் கரடி சிறிய காயத்துடன் தப்பியது.

அருகிலிருந்தவர்கள் இருவரையும் மருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கு வந்த பொலிஸ்காரர்கள், தலைக்கவசம் என தர்பூசணியைப் போட்டுகொண்டு ஏமாற்றியதாக கூறி அபராதம் விதித்தார்கள்.

கரடி விபத்துக்குள்ளான செய்தியைக் கேள்விப்பட்டு, மருத்துவமனைக்கு வந்தது நரி.

நரியைக் கண்டதும், "வாங்க நண்பரே! எழுநூறு ரூபாய்க்காக சிக்கனம் பார்த்தேன். இப்போது மருத்துவ செலவு, அபராதச் செலவு என எல்லாம் சேர்ந்து நாலாயிரம் ரூபாய் ஆகிடுச்சி" என்று கண்ணீர் விட்டபடியே கூறியது.

நரியைக் கண்டதும், "வாங்க நண்பரே! எழுநூறு ரூபாய்க்காக சிக்கனம் பார்த்தேன். இப்போது மருத்துவ செலவு, அபராதச் செலவு என எல்லாம் சேர்ந்து நாலாயிரம் ரூபாய் ஆகிடுச்சி" என்று கண்ணீர் விட்டபடியே கூறியது.

"கரடியாரே! சாலை விபத்துகளை தடுக்கவும், இறப்புகளையும் தவிர்க்கவும்தான் தலைக்கவசம் போடச் சொல்லி உத்தரவு போடுறாங்க. நம்ம நல்லதுக்குத்தானே சொல்றாங்க. அதை விட்டுவிட்டு இப்படி ஏமாற்ற நினைக்கலாமா" என அன்பாக அறிவுரைச் சொன்னது

"நீங்க சொல்வது உண்மைதா நரியாரே. குட்டிக்கரடியும் பல முறை தலைக்கவசத்தின் அவசியத்தைச் சொல்லுச்சி. இப்போதுதான் சரியாகப் புரிந்து கொண்டேன். இனி இது போன்ற தவறைச் செய்ய மாட்டேன்" என்றது கரடி.

(முற்றும்)

## 10:2015 10 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖1575 - பிரான்சில் ரோமன் கத்தோலிக்கப் படைகள் புரட்டஸ்தாந்தர்களைத் தோற்கடித்தனர்.

❖1631 - சாக்சனி இராணுவத்தினர் பிராக் நகரைக் கைப்பற்றினர்.

❖1780 - கரிபியனில் நிகழ்ந்த பெரும் சூறாவளியினால 20,000- 30,000 பேர் வரை இறந்தனர்.

❖1868 -கியூபாவின் முதலாவது விடுதலைப் பிரதேசம் "லாடெமஹாகுவா" பகுதியில் கார்லோஸ் செஸ்பெடஸ் என்பவர் தலைமையில் அறிவிக்கப்பட்டது.

❖1916 - வட இலங்கை அமெரிக்க மிஷன் தனது நூற்றாண்டு நிறைவை யாழ்ப்பாணம், பட்டிககோட்டா செமினறியில் கொண்டாடியது.

❖1942 - சோவியத் ஒன்றியம் ஆஸ்திரேலியாவுடன் தூதரக உறவை ஏற்படுத்தியது.

❖1945 - போருக்குப் பின்னரான சீனா குறித்து சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் குவோமின்டாங்கும் உடன்பாட்டிற்கு வந்தனர். இது இரட்டைபத்து உடன்பாடு என அழைக்கப்படுகிறது.

❖1949 - விடுதலை பெற்ற இலங்கையின் புதிய இராணுவம் உருவாக்கப்பட்டது.

❖1957 - ஐக்கிய இராச்சியம், கம்ப்றியா என்ற இடத்தில் உலகின் முதலாவது அணுக்கரு உலை விபத்து நிகழ்ந்தது.

❖1967 - விண்வெளி தொடர்பாக அறுபதுக்கும் அதிகமான நாடுகள் ஜனவரி 27 ஆம் நாள் கையெழுத்திட்ட உடன்பாடு அமுல்படுத்தப்பட்டது.

❖1970 - பீஜி, ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலை பெற்றது.

❖1970 - மொண்ட்றியால் நகரில் கியூபெக்கின் உதவிப் பிரதமரும், தொழிலமைச்சரும் கியூபெக் விடுதலை முன்னணி தீவிரவாதிகளினால் கடத்தப்பட்டனர்.

❖1971 - விற்பனை செய்யப்பட்டு அமெரிக்காவுக்குக் கொண்டுபோகப்பட்ட லண்டன் பாலம் அரிசோனாவின் லேக் ஹவாசு நகரில் மீள அமைக்கப்பட்டது.

❖1986 - 7.5 ரிக்டர் அளவு நிலநடுக்கம் எல் சல்வடோரின் சான் சல்வடோர் நகரைத் தாக்கியதில் 1,500 பேர் இறந்தனர்.

❖1987 - விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப் படையினருக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் போர் ஆரம்பமானது.

❖1991 - தமிழ்நாட்டில் நாகப்பட்டினம் மாவட்டம் உருவாக்கப்பட்டது.

### பிறப்புகள்

❖1822 - சாமுவேல் ஃபிஸ்க் கிறீன், அமெரிக்க கிறிஸ்தவ ஊழியர், யாழ்ப்பாணத்தில் பணி புரிந்தவர், (இ. 1884)

❖1888 - நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை (இ. 1972)

❖1906 - ஆர். கே. நாராயண், இந்திய எழுத்தாளர் (இ. 2001)

❖1908 - கே. பி. சுந்தராம்பாள், தமிழிசைப் பாடகி, நாடக, திரைப்பட நடிகை (இ. 1980)

❖1913 - கிளோட் சைமன், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 2005)

❖1927 - நேதுநூரி கிருஷ்ணமூர்த்தி, தென்னிந்திய கருநாடக இசைப் பாடகர், (இ. 2014)

❖1930 - ஹரோல்ட் பிண்டர், நோபல் பரிசு பெற்ற ஆங்கில எழுத்தாளர் (இ. 2008)

❖1936 - கெரார்ட் எர்ட்டில், ஜேர்மனிய வேதியியல் அறிஞர்

❖1960 - வைகைப்புயல் வடிவேலு , இந்திய தமிழ் நகைச்சுவை நடிகர்

### இறப்புகள

❖1659 - ஏபெல் டாஸ்மான், டச்சு கடல் ஆராய்ச்சியாளர், நாடுகாண் பயணி (பி. 1603)

❖1974 - மு. வரதராசன், தமிழறிஞர் (பி. 1912)

❖ 2000 - சிறிமாவோ பண்டாரநாயக்கா, இலங்கையின் பிரதம மந்திரி, உலகின் முதல் பெண் பிரதமர், (பி. 1916)

## சிறிமாவோ பண்டாரநாயக்க



சிறிமாவோ ரத்வத்தை டயஸ் பண்டாரநாயக்க 1916 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி பிறந்தார். இவர் இலங்கையின் ஓர் அரசியல்வாதியாவார். இவர் இலங்கையின் பிரதம மந்திரியாக மூன்று முறை, 1960-1965, 1970-1977 மற்றும் 1994-2000 ஆகிய காலப்பகுதிகளில் பதவியில் இருந்தவர்.

இவரே உலகிலேயே முதலாவது பெண பிரதமருமாவார். இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்தவர். இவரது கணவர் மறைந்த முன்னாள் இலங்கை பிரதமர் சொலமன் பண்டாரநாயக்க. மகள் சந்திரிக்கா பண்டாரநாயக்க இலங்கையின் நான்காவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்தவர்.

இவரது ஏனைய மக்கள் அநுராபண்டாரநாயக்க, சுனேத்திரா பண்டார நாயக்க ஆகியோர்.

எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க கொல்லப்பட்டபின்னர் கட்சியின் தலைமைப் பொறுப்பில் நியமிக்கப்பட்டார். ஜூலை 21, 1960 இல் முதன் முறையாக பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1965 இல் நடந்த பொதுத்தேர்தலில் கட்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து 1970 வரை எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கட்சியை வழி நடாத்தினார். 1970 பொதுத்தேர்தலில் இடதுசாரிகளுடன் கூட்டுச் சேர்ந்து பெரும் வெற்றி பெற்று இரண்டாம் முறை மீண்டும் பிரதமரானார்.

1977 இல் நடந்த தேர்தலில் கட்சி படுதோல்வி அடைந்தது. 1980 இல் அன்றைய ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சியினால் ஊழல் குற்றச்சாட்டுகளில் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு குடியுரிமை பறிக்கப்பட்டு ஏழு வருடங்களுக்கு அரச பதவிகளை ஏற்கத் தடை செய்யப்பட்டார்.

குழந்தையின் எதிர்காலம் எப்போதும் தாயின் செயலில் அடங்கியிருக்கிறது.
- நெப்போலியன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மரண தண்டனையை நிறைவேற்றுவது சரியா?

மிக மோசமான குற்றம் புரிந்தவர்களுக்கு மரண தண்டனையை தீர்ப்பாக எழுதுகின்ற சட்டமுறைமை நம் நாட்டில் உண்டு.

குறிப்பாக கொலைச் சம்பவங்களுடன் தொடர்பு பட்டவர்களுக்கு இத்தகைய தண்டனை விதிக்கப்படுகிறது.

இருந்தும் மரண தண்டனை என்ற தீர்ப்பானது நிறைவேற்றப்படாததன் காரணமாக அந்தத் தண்டனை ஆயுட்காலத் தண்டனையாக நடைமுறையில் உள்ளது.

மரண தண்டனை என்ற தீர்ப்பை நீதிமன்றம் வழங்குகின்றபோது அதனை நிறைவேற்ற வேண்டும் என்கிறது ஒரு தரப்பு; நிறைவேற்றக் கூடாது என்று இன்னொரு தரப்பும் வாதம் புரிகின்றது.

இதில் எது சரி என்ற கேள்வி எழுகிறது. இத்தகையதொரு கேள்விக்கான பதிலை பொது மக்களே வழங்க முடியும்.

எனினும் மரண தண்டனை விதிக்கப்பட்டமைக்கான குற்றச்செயல் என்ன என்று ஆராய்வது அவசியம்.

உதாரணத்திற்கு, மூன்று பேர் கொண்ட குழு ஒன்று நடுச்சாமத்தில் வீடொன்றில் புகுந்து திருடுகிறது. அந் நேரத்தில் வீட்டு உரிமையாளர் எழுந்து விடுகிறார். திருட்டுக்கோஷ்டி அவரைத் தாக்கி அந்த இடத்தில் கொல்கிறது.

இக் களேபரத்தில் வீட்டு எஜமானியும் எழுந்துவிட, அவருக்கும் ஒரே அடி. அதே இடத்தில் கணவனும் மனைவியும் கொல்லப்படுகின்றனர்.

ஒரு நடுச் சாமப் பொழுதில் உறங்கிக் கொண்டிருந்த குழந்தைகள் அநாதைகளாக்கப்படுகின்றனர்.

மேற்படி குற்றச் செயலுக்காக அந்த மூன்று கொலைகாரர்களுக்கும் நீதிமன்றம் மரண தண்டனை விதிக்கிறது என எடுத்துக் கொண்டால், இப்படியான சம்பந்தப்பட்ட மூன்று குற்றவாளிகளுக்கும் மரண தண்டனை நிறைவேற்றுவது சரி என்று முடிவு எடுப்பதா? அல்லது அவர்களுக்கு மரண தண்டனை வழங்காமல் ஆயுட்காலம் வரை சிறைகளில் அடைத்து வைப்பது சரி என்று முடிவு எடுப்பதா? என்பதை பொதுமக்களே தீர்மானிக்க வேண்டும்.

எதுவாயினும் இறுக்கமான சட்டங்கள், தீர்ப்புகள், அவற்றின் அமுலாக்கங்கள் குற்றச் செயல்களைக் குறைக்கும் என்ற உண்மையையும் நாம் மறந்துவிடலாகாது.

அதேநேரம் கொலை என்பது மிக மோசமான குற்றச் செயல். அந்தக் குற்றத்தை இழைத்து மரணத்தை வழங்கியவர் சிறையில் இருப்பது கூட உரிய தண்டனையாகாது என்பதை பலரும் வலியுறுத்துகின்றனர். இதில் நியாயமும் இருக்கிறது என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இவை ஒரு புறம் இருக்க, மரண தண்டனை தீர்க்கப்பட்ட ஒரு குற்றவாளிக்கு அந்தத் தண்டனையை நிறைவேற்றுவதன் ஊடாக, அவர் சார்ந்த குடும்ப உறவுகளுக்கு உள ரீதியான தண்டனை வழங்கப்படுகிறது என்று வாதிடுவோரும் உளர்.

அப்படியானதொரு சூழ்நிலையில் மரண தண்டனை என்ற தீர்ப்பை நிறைவேற்றுவதா? அல்லது ஆயுள் தண்டனையாக மாற்றுவதா? என்ற இறுதி முடிவை பாதிக்கப்பட்ட தரப்பு தீர்மானிப்பதற்கான சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும். இது மிகப் பொருத்தமானதாக இருக்கும்.

எதுவாயினும் மரண தண்டனையை நிறைவேற்றுவது ஏற்புடையதா? இல்லையா? என்பது குறித்து பொதுமக்களின் அபிப்பிராயம் எடுக்கப்படுவது அவசியமானதாகும்.

# பட்டதாரிகளின் உண்ணாவிரதம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காந்திப் பூங்காவுக்கு அருகில் கடந்த மூன்று தினங்களாக மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் மேற்கொண்டு வந்த உண்ணாவிரதம் நேற்றுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

கடந்த புதன்கிழமை காலை தொடக்கம் மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் மட்டக்களப்பு நகரிலுள்ள காந்திப்பூங்காவுக்கு முன்னாள் அரச நியமனத்தை வழங்குமாறு கோரி காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பித்து 3 ஆவது நாளாக நேற்றும் மேற்கொண்டனர்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட் நேற்று பிற்பகல் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்களை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் குறித்த உண்ணாவிரதம் கைவிடப்பட்டுள்ளது.

இதன் போது உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் கிழக்கு மாகாண முதலமைச்சரிடம் தமது நிலைப்பாட்டை எடுத்துக் கூறியதுடன் நான்கு கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றையும் கையளித்தனர்.

இதனையடுத்து கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட் எதிர்வரும் 2016-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-க்கு முன்பாக வேலையற்ற பட்டதாரிகளுக்கு கிழக்கு மாகாண சபையினால் வேலை வாய்ப்பினை வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதிமொழி வழங்கினார்.

இதன் போது கிழக்கு மாகாண முதலமைச்சர் வழங்கிய உறுதிமொழிக்கு அமைவாக வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்காவிட்டால் கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் ஒன்றிணைத்துக் கொண்டு கிழக்கு மாகாண சபைக்கு முன்னால் உண்ணாவிரதத்தினை மேற்கொள்வதுடன் கிழக்கு மாகாண சபையையும் முற்றுகையிடுவோம் என வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் சார்பில் உறுப்பினர் ஒருவர் முதலமைச்சரிடம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## பனை விதை நடுகை ஆரம்ப விழா

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையின் பனை விதை நடுகை ஆரம்ப விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாமுனை பகுதியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் மாதிரி பனம் பண்ணையில் நடைபெறவுள்ளது.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் சோ.கோகுலதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினரராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், கௌரவ விருந்தினராக யாழ.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரன், மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.திரவியராசா, மாமுனை தமிழ் கலவன் பாடசாலை அதிபர் க.சந்திரமோகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த ஆரம்ப நிகழ்வில் 50 பனை விதைகள் நாட்டப்படவுள்ளன. இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பனை அபிவிருத்திச் சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)

## புதிய உறுப்பினர்களின் விபரம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பு பேரவையினால் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு, அரச சேவைகள் ஆணைக் குழு, பொலிஸ் ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிய வற்றுக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை கூடிய அரசியலமைப்பு பேரவையின் நிறைவேற்று சபையினால் குறித்த ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தொடர்பில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக சபாநாயகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் ஜனாதிபதியின் அனுமதியைப் பெறுவதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் கூடிய அரசியலமைப்பு பேரவை மீண்டும் எதிர்வரும் நவம்பர் மாதம் 4-ம் திகதி கூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அன்றையதினம் சுயாதீன ஆணைக்குழுக்கள் சம்பந்தமான இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## மோ.சைக்கிள் - பஸ் விபத்து
## சிகிச்சை பலனளிக்காத நிலையில் அரச ஊழியர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - பஸ் விபத்தில் படுகாயமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அரச ஊழியர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் யாழ் போதனா வைத்திய சாலையில் உயிரிழந்துள்ளார்.

நெடுந்தீவைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையும் நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் கடமையாற்றுபவருமான குழந்தைவேலு மோகனதாஸ் வயது (29) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த முதலாம் திகதி கிளிநொச்சிக்கு தனது காணி ஒன்றினை பார்வையிடுவதற்காக மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.

இவர் சந்தியில் திரும்புவதற்காக இரணைமடுச் சந்தியில் வாகனங்களை விலத்திவிட்டு காத்திருந்த நிலையில் பின்னால் வேகமாக வந்த காரை நகர் சாலைக்குரிய இலங்கை போக்கு வரத்து சபையின் பஸ் வண்டி முன்னால் தரித்து நின்ற மோட்டார் சைக்கிளை மோதி தள்ளியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

40 மீற்றர் தூரம் இழுத்து செல்லப்பட்ட இவரை உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் அவர் உயிரிழந்துள்ளார்.

நீதிமன்றத்தின் பணிப்புரைக்கு அமைவாக யாழ்.போதனா வைத்திய சாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்ட மரண விசாரணையைத் தொடர்ந்து சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



வீரர்களே கட்டுண்டவர்களின் தளைகளை வெட்டியெறியவும் எளியவர்களின் துயரச் சுமையைக் குறைக்கவும் பாமரர்களின் இருண்ட உள்ளங்களை ஒளிபெறச் செய்யவும் முன்னேறிச் செல்லுங்கள். அஞ்சாதே! அஞ்சாதே! என்று முழங்குகிறது வேதாந்த முரசு. பூமியில் வசிக்கின்ற மனிதர்கள் அனைவருடைய இதய முடிச்சுக்களையும் அது அவிழ்த்தெறியட்டும்!

முக்தியின் முழு ஒளியில் ஒரு நாளாவது வாழ்ந்திருப்பதும் எளிமையின் சுதந்திரக் காற்றை சுவாசிப்பதும் ஆகா, அது எத்தகைய பேரனுபவம்! மிக உயர்ந்த தூய நிலையல்லவா அது?

ஐரோப்பாவில் பல நகரங்களின் வழியே யாத்திரை செய்தபோது அங்கு வாழ்கின்ற ஏழைகளுக்கு உள்ள வசதிகளையும் கல்வியையும் கண்டேன். அப்பொதெல்லாம் நம் ஏழைகளை நினைத்துப்பார்த்து நான் கண்ணீர் விட்டு அழுதிருக்கிறேன். இந்த வேறுபாட்டிற்குக் காரணம் என்ன? கல்வி என்ற விடையே நான் கண்டது. கல்வியால் நம்பிக்கை வருகிறது. தன்னம்பிக்கையின் வலிமையால் உள்ளிருக்கும் ஆன்மா விழித்தெழுகிறது. நம்முள் இருக்கும் ஆன்மாவோ மெல்ல மெல்லச் செயலிழந்து கொண்டிருக்கிறது.

துயரம் என்பது யாரையும் ஒருபோதும் நெருங்கக்கூடாது என்று நான் மனமார விரும்புகிறேன். ஆனாலும் அது ஒன்றுதான் நமது வாழ்வின் ஆழ்ந்த பகுதிகளுக்குள் நம்மை ஊடுருவிக் காணச் செய்கிறது. அல்லவா?

# அமரர் கீர்த்திகன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டம் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை சம்பியன்







யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் அமரர் கீர்த்திகன் ஞாபகார்த்தமாக கொக்குவில் இந்துக் கல்லூரியினால் கூடைப் பந்தாட்ட போட்டி நடத்தப்பட்டது.

யாழ் மாவட்டப் பாடசாலைகளின் ஆண்கள் கூடைப்பந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இந்த கூடைப்பந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மின்னொளியில் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் ஒரு அணி மற்றைய அணிக்கு சளைத்தவர்கள் இல்லையென்பதை நிரூபிக்கும் வகையில் இறுதி வரை மோதிக் கொண்டமை ரசிகர்களை மிகவும் உற்சாகப்படுத்தியது.

நான்கு கால் பாதி ஆட்டங்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதற்கால் பாதி ஆட்டத்தில் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை 26இற்கு 07 புள்ளிகள் என்ற முன்னிலையில் முடிவடைந்தது.

ஆனாலும் மனம் சோராது திடத்துடன் மோதிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தொடர்ந்து போராடிய போதிலும் ஏஞ்சல் பாடசாலை இரண்டாம் கால் பாதி ஆட்டத்தில் 12 இற்கு 09 புள்ளிகள் என்ற முன்னிலையில் முடிவடைந்தது.

மூன்றாம் கால் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஒரு அணி மற்றைய அணிக்கு சளைத்தவர்கள் இல்லையென்பதை நிரூபிக்கும் வகையில் மாறி மாறி புள்ளிகளை பெற்ற நிலையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 22 இற்கு 21 புள்ளிகள் என்ற முன்னிலையில் முடிவடைந்தது.

நான்காம் கால் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தமது முழுத் திறமைகளையும் வெளிப்படுத்தி மோதிய போதிலும் இறுதி நிமிடத்தில் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலையின் கைகள் ஓங்கிய நிலையில் 23 இற்கு 21 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை 82 இற்கு 59 புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை வெற்றி பெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

போட்டியின் ஆட்டநாயகனாக ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலையைச் சேர்ந்த எம்.சிம்ரோனும் தொடர் ஆட்டநாயகனாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை சேர்ந்த என். கீர்த்திகனும் தெரிவு செய்யப்பட்டார்கள். (க)

## மைக்கல் உதைபந்தாட்டம் ஞானமுருகன் வெற்றி



மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தினால் யாழ். மாவட்டத்திலுள்ள அழைக்கப்பட்ட கழக ங்களுக்கிடையே நடத்தப்பட்டு வரும் அணிக்கு 7 வீரர்கள் பங்கு பற்றும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற போட்டியில் வதிரி பொம்மர்ஸ் அணியும் ஞானமுருகன் அணியும் மோதிக்கொண்டது.

இப்போட்டியில் ஞானமுருகன் அணி 5:1 கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

## இருபது-20 முரளி கிண்ணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றி



முரளி கிண்ணத் தொடர் கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும் நுவரெலியா- கேகாலை இணைந்த அணியும் மோதிய ஆட்டத்தில் 45 ஓட்டங்களால் வெற்றி பெற்றது சென். ஜோன்ஸ் கல்லூரி அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஓட்டங்கள் எவையும் பெறப்படாத நிலையிலேயே சென்.ஜோன்ஸின் முதலாவது இலக்குச் சரிக்கப்பட்டது.

ஓட்டங்கள் எதனையும் பெறாமல் விடை பெற்றார் சஜீந்திரன். வந்த வேகத்தல் ஆட்டமிழந்தார் அருளானந்தன். பிறேமானந்தனும் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சக ஆரம்ப வீரரான மணிவண்ணனும் 10 ஓட்டங்களுடன் வீழ்ந்தார்.

சென். ஜோன்ஸ் 37 - 5. மத்திய வரிசை வீரர்கள் தொடர்ந்தும் சொதப்ப சென்.ஜோன்ஸ் தடுமாற்றம் பலமானது. பின்வரிசை வீரர்களின் அதிரடியில் சரிவில் இருந்து மீண்டு 110 ஓட்டங்களை வெற்றியிலக்காக நிர்ணயித்தது சென். ஜோன்ஸ் அணி. பந்துவீச்சில் நுவரெலியா-கேகாலை இணைந்த அணி சார்பாக சணுக்க 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

எட்டக்கூடிய இலக்கை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நுவரெலியா- கேகாலை மாவட்டங்களின் இணைந்த அணிக்கும் ஆரம்பம் சொதப்பவே செய்தது. கித்துகமுவை வீழ்த்தி இலக்குச் சரிவை தொடக்கி வைத்தார் பிறேமானந்த். பத்துப் பந்துகளை வீணடித்து விடை பெற்றார் ரவிகரா. மூன்றாம் நிலை வீரரான கோபினாத் ஒரே ஒரு ஓட்டத்துடன் பவிலியன் திரும்ப தற்பொழுது நுவரெலியா, கேகாலை இணைந்த அணி 3d5. தீக்சன மட்டும் நிலைத்து நின்றார். மத்திய, பின்வரிசை வீரர்கள் எவரும் நிலைக்கவில்லை. முடிவில் 64 ஓட்டங்களில் சுருண்டு படுதோல்வியடைந்தது மலையக (நுவரெலியா, கேகாலை) இணைந்த அணி. (க)

## வானவில் வி.கழக உதைபந்தாட்ட தொடர் பைஸ்ரார் வெற்றி



வலிகாமம் உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் வானவில் விளையாட்டுக்கழகம் நடத்தும் 2015 ஆம் ஆண்டுக்கான 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரில் நடைபெற்ற ஆட்டத்தில் மாதகல் பிறைஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஏழாலை பைஸ்ரார் விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது.

இப்போட்டியில் ஏழாலை பைஸ்ரார் விளையாட்டுக்கழகம் 4:3 என்ற கணக்கில் வெற்றி பெற்று முதல் வெற்றியைப் பதிவு செய்தது. (க)

## டி.எஸ்.சேனநாயக்கவை வென்றது யாழ்.மாவட்ட இணைந்த அணி



டி.எஸ்.சேனநாயக்க கல்லூரிக்கு எதிரான போட்டியில் 3 இலக்குகளர்ல் யாழ். மாவட்ட இணைந்த அணி வெற்றி பெற்றது.

முரளிகிண்ணத்தொடர்கடந்தபுதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இதில் நடைபெற்ற போட்டியில் யாழ்.மாவட்ட இணைந்த அணியும் டி.எஸ்.சேனநாயக்க கல்லூரியும்மோதிக்கொண்டது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். மாவட்ட இணைந்த அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்ய, அசத்தல் தொடக்கம் கொடுத்தது டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி அணி. அந்த அணியின் ஆரம்ப வீரர்களான விஜயசேகர, குணசிங்க இருவரும் அதிரடியில் மிரட்டி எடுத்தனர். இறுதி இலக்காக 200 ஓட்டங்கள் நிர்ணயிக்கும் வகையில் சராசரி சென்று கொண்டிருந்தது. விஜயசேகரவை வெளியேற்றி இணைப்பாட்டத்தை பிரித்தார். இணைந்த அணியின் பிரதீபன். சக ஆரம்ப வீரரையும் வெளியேற்றினார் தசோபன். சாரசரி சடுதியான வீழ்ச்சி காண முதல் பத்துப் பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சேனநாயக்க அணி 61- 2. பின் வரிசை வீரர்கள் தொடர்ந்து சொதப்ப முடிவில் டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி அணி 121 ஓட்டங்களில் சுருண்டது. பந்துவீச்சில் யாழ். மாவட்ட இணைந்த அணி சார்பாக பிரதீபன் 3 இலக்குகளையும், கதியோன் இரண்டு இலக்குகளை யும், மதுசன், டியோன், தசோபன் மூவரும் தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

120 பந்துகளில் 122 ஓட்டங்கள் என்ற சாத்தியமான இலக்கை நோக்கிப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட இணைந்த அணிக்கு ஆரம்ப வீரர்களான சயந்தன், அலோடின் இருவரும் சுமாரான தொடக்கம் கொடுத்தனர். இணைப்பாட்டமாக 33 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சயந்தன். மறுமுனையில் அலோடினும் ஆட்டமிழக்க யாழின் வெற்றி கேள்விக்குறியானது. களத்தில் கயானத் மற்றும் கார்த்தீபன். மீண்டும் ஒரு சிறந்த இணைப் பாட்டம் நம்பிக்கை துளிர்விட்டது. ஆனால் நிதானத்துக்கு ஏற்ப பந்துகள் வீணடிக்கப்படவும செய்தன. இருவரும் இருபது ஓட்டங்களை தாண்டி அணியை நிலைப்படுத்த 3 இலக்குகளால் சேனநாயக்க கல்லூரியை வீழ்த்தியது இணைந்த யாழ். அணி. (க)

## முள்ளியவளை காட்டில்...

எனப்படும் வன்னியின் முக்கிய வரலாற்றுச் செய்தியுடன் தொடர்புபடுத்தி அழைக்கப்படும் காட்டுப் பகுதியே மிகவேகமாக அழிவுக்குள்ளாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

இதுவரை குறித்த வீதியிலிருந்து கிட்டத்தட்ட ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரம், கிட்டத்தட்ட 600 ஏக்கர்கள் வரையில் காடழிப்பு நடந்துள்ளது.

அத்துடன் காடழிக்கப்பட்ட நிலம் தனிநபர்களுக்குப் பிரித்தும் கொடுக்கப்பட்டுள்ளது. அங்கு வேலிகளும், கடுகினால் ஆன வீடுகளும் அமைத்திருப்பதுடன். சிலர் நிரந்தர வீடுகளை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

25 ஏக்கர், 30 ஏக்கர் என பிரித்து பெரியளவு தோட்டங்களையும் சிலர் செயயத் தொடங்கியிருக்கின்றனர். தென்னை, வாழை, மா என நிரந்தரப் பயிர்களும் நடுகைசெய்யப்பட்டிருக்கின்றன. மேலும் கிணறுகளும், கட்டடங்களும் கட்டப்படடுக் கொண்டிருக்கின்றன.

அழிக்கப்பட்ட காட்டுப் பகுதிக்குள மேற்படி சம்பவங்கள் நடக்க மேலதிக காடழிப்பும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. வன்னியன் மேட்டின் மறுகரையில் இருக்கின்ற உப்பு மாவெளி, தங்கபுரம் கிராமங்களின் எல்லை வரை இந்தக் காடழிப்பு சென்றுவிட்டதாக பிரதேசவாசிகள் அச்சத்துடன் கூறுகின்றனர்.

இதனைத் தடுக்க கோரி அரச அதிகாரிகளிடம் முறையிட்ட போதும அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும் பிரதேசவாசிகளிடம் கவலையை ஏற்படுத்தியிருககிறது.

மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து தொடரும் இக் காடழிப்பு குறித்து அரச அதிகாரிகளும் அரசியல் தலையீடுகள் காரணமாக மௌனம் சாதித்தே வருகின்றனர்.

தலையீடுகளை மீறியும் நடவடிக்கை எடுத்தால் உடனடியாக அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுவதாகவும் அரச அதிகாரிகள் கூறுகின்றனர்.

முன்னர் வில்பத்து காட்டினை அழித்து அங்கு யார் மீள்குடியேற்றம் செய்தார்களோ அவர்கள் தான் இந்த காட்டினையும் அழித்து முஸ்லிம்மக்களை மீள்குடியேற்றம் செயவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கரைத்துறைப்பற்று பிரதேச செயலகம் விடுத்துள்ள மீள்குடியேற்றம் தொடர்பிலான அறிக்கையில் ஆயிரத்து 158 முஸ்லிம் குடும்பங்களே மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 777 குடும்பங்கள் அங்கு மேலதிகமாக குடியேறியுள்ளதாக அதே செயலக புள்ளிவிபரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

தமிழர்களின் வரலாற்று சிறப்புடைய இடமாக விளங்கும் மேற்படி காடு அழிக்கப்படுவதனை தடுத்து இப்பகுதியை இன்னொரு வில்பத்தாக மாறிவிடும் அபாயத்திலிருந்து காப் பாற்றுமாறு அப்பகுதி மக்கள் கோருகின்றனர். இல்லாது போனால் இப் பகுதியின் அடையாளம் மாற்றப்பட்டு தமிழர் தாயகத்தின் எல்லை குறுக்கப்படும் எனவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (செ-4)

## தமிழர்களுக்கு மைத்திரி...

ளார்.

வடக்கில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் மற்றும் தலைமைத்துவப் பெண்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இங்கு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோல்வியுற்ற பின்னர் வடக்கு மக்கள்தான் என்னை தோல்வியடைய வைத்தார்கள் என தெரிவித்தார்,

மைத்திரிபால சிறிசேனவும் ஜனாதிபதியாகிய பின்னர் தமிழர்களின் வாக்கு இல்லையென்றால் நான் இன்று ஆறடி நிலத்திற்குள் அடக்கப்பட்டிருப்பேன் என்று தெரிவித்திருந்தார்.

ஆகவே தமிழர்கள் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கி அவரை வாழவைத்துள்ளனர். எனவே முதற்கட்டமாகவே அதற்கு நன்றிக்கடனை அவர் செலுத்தவேண்டும்.

விடுவிக்கப்படாமல் உள்ள பொது மக்களின் காணிகளை விடுவித்து இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த வாழ்விடங்களில் குடியமர்த்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த அரசாங்கம் வெகு விரைவில் இந்த நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் இவர்களுக்கெதிராகவும் நாங்கள் போராட்டங்களை முன்னெடுப்போம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இக்கலந்துரையாடல் யாழ் தனியார் விடுதியொன்றில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் நீண்டகாலமாக வாழும் மக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் பிரதி நிதிகள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர். (செ-12)

## ஐ.நா.தீர்மா...

விடுத்துள்ளோம். கட்சித் தலைவர்கள் எதிர்வரும் வாரத்தில் இது இடம்பெற்றால் சிறந்தது என கூறினார்கள். ஆகவே, அதற்கு முன் ஜனாதிபதி அலுவலகத்தில் பரணகம ஆணைக்குழு அறிக்கை, உதலகம ஆணைக்குழு அறிக்கைகளை விரைவாக வழங்கவேண்டும்.

இவை இன்னும் சிங்களத்திலும் தமிழிலும் மொழி பெயர்க்கப்படவில்லை. அடுத்த வாரத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதாயின் ஆங்கில அறிக்கையை மாத்திரமே எமக்கு வழங்க முடியும்.

இதுகுறித்து சபாநாயகருடன் கலந்துரையாடினேன். தேவையான பிரதிகளை செவ்வாய்க்கிழமை வழங்கினால் வியாழன், வெள்ளி விவாதத்தை முன்னெடுக்க முடியும்.

மேலும் விவாதத்தை நாடாளுமன்றத்தில் முன்னெடுப்பதன் மூலம் தீர்மானம் தொடர்பாக தவறான பரப்புரைகளை முடிவுக்கு கொண்டுவரமுடியும் என தான் நம்புவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இதேவேளை ஐ.நா. தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் வைத்து தோற்கடிக்க வேண்டும் என பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த எட்டுக்கட்சிகள் ஒருமித்து கருத்துத்தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## சதாம், கடாபியின் கதியே...

சதாம் ஹுசேன் ஆகிய தலைவர்களுக்கு ஏற்பட்டிருந்த நிலையே இன்று அவருக்கும் ஏற்பட்டிருக்கும் என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக முன்னெக்கப்பட்ட விசாரணை நடவடிக்கையானது மிகவும் வலுபெற்றிருந்தது.

அவ்வாறான நிலையிலேயே மகிந்த ராஜபக்ஷ தேர்தல் ஒன்றுக்கு அறிவித்தல் விடுத்து சக்திமிக்கதான அரசாங்கம் ஒன்றை உருவாக்கி குறித்த பிரச்சினைகளை கையாள திட்டமிட்டிருந்தார். மகிந்தவின் திட்டத்தின் படி அன்றைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கும்பட்சத்தில் எமது நாடு சர்வதேச ரீதியில் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிட்டிருப்பதேர்டு சர்வதேச நாடுகளின் நட்புறவையும் இழந்திருப்போம்.

மறுபுறம் லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கடாபி, ஈராக் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசேன் ஆகிய தலைவர்களுக்கு ஏற்பட்டிருந்த நிலையே இவருக்கும் இன்று ஏற்பட்டிருக்கும்.

கடந்த வாரங்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை மனித உரிமை உரிமை விவகாரம் தொடர்பில் அமெரிக்கா உள்ளிட்ட நான்கு நாடுகளினால் கொண்டு வரப்பட்ட பிரேரணை தொடர்பில் வாத பிரதிவாதங்கள் இடம் பெற்றதோடு கடந்த வியாழக்கிழமை முதலாம் திகதி குறித்த பிரேரணையானது வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்த பிரேரணை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது அதிருப்தியையும் இதனை முழுமையாக ஏற்றுகொள்ள முடியாது என்ற கருத்தினையும் தெரிவித்திருந்தார்.

அவரின் ஆட்சிகாலத்தில் மனித உரிமை தொடர்பில் வாக்குறுதியளித் தவற்றை செயற்படுத்த எமது நாடு தவறியமையினாலேயே நாம் சர்வதேச நாடுகளின் அதிருப்திக்கு ஆளானதோடு ஜி.எஸ்.பி வரிசலுகை போன்றவற்றை இழக்க நேரிட்டது. இன்று தேசிய அரசாங்கத்தின் கீழ் இவை அனைத்தும் மாற்றம் பெற்று வருகின்றன.

இவ்வாறான மாற்றம் ஒன்றை முன்னெடுத்து வரும் நிலையில் ஒரு சில தரப்பினர் ஐக்கிய நாடுகளின் அறிக்கையின் பிரகாரம் விசாரணை முற்று முழுவதுமாக இராணுவத்தினரிடமே முன்னெடுக்கப்பட போவதாக போலியான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை. காரணம் எமது இராணுவத்தினரினால் எவ்வித குற்றச்செயல்களும் மேற்கொள்ளப்படவில்லை என்பதனை சர்வதேசத்திடம் தெரிவிப்பதற்கு இதுவே எமக்கு கிடைத்த இறுதி வாய்ப்பாக காணப்படுகிறது.

விடுதலை புலிகளினால் முன்னெடுக்கப்பட்ட யுத்த குற்றசாட்டுகளை சர்வதேசம் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் அறிந்து கொள்வதற்கு இச் சந்தர்ப்பம் வாய்ப்பாக அமையும். எனவே எதிர்வரும் காலத்தில் குறித்த பிரேரணையின் அடிபடையில் யுத்த நடவடிக்கையின் போது உண்மையில் நடந்தது என்ன, பாதிக்கப்பட்டவர்களுக்கான தீர்வு, குறித்த பிரச்சனைக்கான நிரந்தர தீர்வு, சட்டம், நீதித்துறைகளை சுயாதீனமாக இயங்க வைப்பதற்கான நடவடிக்கை உள்ளிட்ட நான்கு விடயங்களை அடிபடையாக கொண்டே எமது செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவித்தார். (செ-12)

## தமிழர்களை சம பிரஜை...

சோபித தேரர் தெரிவித்தார்.

தமிழ் மக்களை சம பிரஜைகளாக மதித்தாலே பாதிப் பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிடலாம் என்று கூறியுள்ள சோபித தேரர் நாட்டில் நல்லிணக்கமும் நீண்டகால இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்பதும் எம் அனைவரதும் நீண்டகால எதிர்பார்ப்பு என்றும் கூறினார்.

அதை சிலர் ஏற்படுத்த முயற்சித்த போதும் கடந்த காலத்தில் பலர் நாட்டில் சமாதானத்தை குழப்பும் வகையில் செயற்பட்டுள்ளனர் என்று தெரிவித்த அவர் நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தால் பல நல்ல விளைவுகள் ஏற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் எதிர்கட்சித் தலைவராக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் சர்வதேச நிலைப்பாடுகளும் மாறியுள்ளன என்றும் இலங்கை மீதான அழுத்தங்கள் குறைந்துவிட்டன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் தமிழ் மக்கள் சம பிரஜைகள் என்று தெரிவித்த நாட்டில் உள்ள அனைத்து உரிமைகளும் தமிழ் மக்களுக்கும் உண்டு என்றும் அதை புரிந்து கொண்டாலே பாதிப் பிரச்சினை தீரும் என்றும் சோபித தேரர் தெரிவித்தார்.

மேலும் மைத்திரி - ரணில் ஆட்சியில் ஜனநாயகம் வென்றெடுக்கப்பட்டுள்ளது என்று கூறிய அவர, அரசியல் தீர்வை பெற இது சிறந்த சந்தர்ப்பம் என்றும் அனைத்து கட்சிகளும் இணக்கப்பாட்டுடன் இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண முன்வர வேண்டும் என்றும் அவர் கூறினார். (செ-12)

## வாகன விபத்...

ாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், கடந்த 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துகளில், ஆயிரத்து 695 விபத்துகள் இடம்பெற்ற நிலையில், ஆயிரத்து 822 பேர் பலியாகினர்.

இந்நிலையில் கடந்த வருடத்துடன் ஒப்பிட்டு பார்க்கையில், தற்போது விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## முழு ஊடக சுதந்திரத்தை...

ப்பாகும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டின் சுதந்திரத்தையும் ஊடகத்துறையின் சுதந்திரத்தையும் முழுமையாக உறுதிப்படுத்துவதற்கு புதிய அரசாங்கம் அர்ப்பணிப்போடு இருப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிரதான பத்திரிகைகளின் தலைப்புகளை பிரசுரிக்குமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்ட யுகத்தை புதிய அரசாங்கம் முடிவுக்கு கொண்டு வந்ததாகவும் தெரிவித்தார்.

நேற்றுக் காலை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை பத்திரிகை சங்கத்தின் 60-வது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

தமது அமைச்சரவையின் அமைச்சர்களுக்கு எதிராக எழுதுவதற்கு அரசியல் தலைவர்கள் அன்று பத்திரிகைகளுக்கு தொலைபேசி அழைப்புக்களை மேற்கொண்ட பண்பாடற்ற அனுபவங்களுக்கு அன்று ஒரு அமைச்சராக இருந்த தானும் முகம்கொடுக்க வேண்டியிருந்ததாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

தான் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தொடரில் பங்கு பற்றியமை தொடர்பாக கடந்த வாரம் ஒரு ஆங்கிலப் பத்திரிகை பொய்யான பல விடயங்களை பிரசுரித்திருந்தமையை தாம் பார்த்ததாக குறிப்பிட்ட ஜனாதிபதி, விமர்சனமும் உரையாடலும் நல்லாட்சிக்கு அவசியம் என்ற போதும், அதன் போது ஊடகத்திற்கு இருக்க வேண்டிய ஊடக ஒழுக்கம், பண்பாடு மற்றும் நியமங்களை பாதுகாப்பது அவசியமானதாகும் எனவும் குறிப்பிட்டார்.

அண்மைக் காலங்களில் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு ஜெனிவாவில் மேற்கொண்ட தீர்மானங்கள் தொடர்பில் அரசாங்கம் பெற்ற வெற்றிகளை குறைத்து மதிப்பிடுவதற்கு சில அடிப்படைவாதிகள் தூரநோக்கற்ற வகையில் முயற்சிகளை மேற்கொண்டபோது ஊடகங்கள் மிகவும் பொறுப்புடனும் அறிவுபூர்வமாகவும் செயற்பட்டமை தொடர்பாக ஜனாதிபதி இதன்போது ஊடக நிறுவனங்களுக்கும் ஊடகங்களுக்கும் தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

இலங்கை பத்திரிகை சங்கத்தின் 60-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு 10 சிரேஷ்ட ஊடகவியலாளர்களுக்கு ஜனாதிபதியால் விருதுகள் வழங்கப்பட்டன.

ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக, ஊடகத் துறை அமைச்சின் முன்னாள் செயலாளரான பிரதி அமைச்சர் கருணாரத்தன பரணவித்தான, இலங்கை பத்திரிகை சங்கத்தின் தலைவர் முதித்த காரியகரவன, தேசிய அமைப்பாளர் உப்புல் ஜனக ஜெயசிங்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்திய தொழில்சார் ஊடகவியலாளர்கள் சங்கத்தின் சமூக வலையமைப்பு இணையதளத்தின் ஆசிரியர் விஸ்வதேவராவ், மதன் கடுவா ஆகியோர் உள்ளிட்ட இந்திய ஊடகவியலாளர் குழு ஒன்றும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டது. (செ-12)

## பிரகீத் கடத்தல் வழக்கு...

அவரது மனைவி சந்தியா எக்னெலிகொட குற்றம்சாட்டியுள்ளார்.

வழக்கு விசாரணை ஒன்றுக்காக உச்ச நீதிமன்றத்திற்கு வந்திருந்தபோதே இதனை அவர் தெரிவித்தார்.

எக்னெலிகொட காணாமல்போன வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகளின் சார்பில் வழக்கறிஞர் காலிங்க இந்திரதிஸ்ஸ ஆஜராகி வருகிறார்.

காலிங்க இந்திரதிஸ்ஸ பல முறை தன் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளதாக கூறிய சந்தியா, ஐ.நாவின் மனித உரிமை பேரவை கூட்டங்களுக்குச் சென்று, தான் நாட்டைக் காட்டிக் கொடுத்துள்ளதாக குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாகவும் கூறினார்.

விசாரணைகளை சீர்குலைத்து சந்தேக நபர்களை காப்பதற்கு ராஜபக்ஷ குடும்பத்தினர் செயற்பட்டு வருவதை இதன் மூலம் உறுதி செய்துகொள்ள முடியு மென்றும் சந்தியா எக்னெலிகொட கூறினார்.

இதேவேளை பிரகீத் எக்னெலிகொட வழக்கில் கைதுசெய்யப்பட்டுள்ள நான்கு இராணுவ அதிகாரிகள் தங்களை விடுதலை செய்யுமாறு கோரி தாக்கல்செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பாக எதிர்வரும் 16 ஆம் திகதி நீதிமன்றத்தில் விளக்கமளிக்குமாறு மேல்முறையீட்டு நீதிமன்றம் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

எந்த விதமான காரணங்களுமின்றி தங்களை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பொலிஸார் தடுத்து வைத்துள்ளதாக கூறிய அவர்கள், தங்களை விடுதலை செய்ய உத்தரவிடுமாறு நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (செ-12)

2 மணித்தியாலத்தில்
**கணினி திருத்தம்**
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா?
உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.அழையுங்கள்
077 9086737
Computer Laptop Repair & Sale
GUNAA BEST PC
52,Hospital Road Jaffna. (Telecom Side)
(2016)



SIKARAM
Any Visa to Any Country
School of Hospitality &ENGLISH
உள்நாட்டு, வெளிநாட்டு தொழில் & விசா ஏற்பாட்டுடன்
Business & Hotel Management
புதிய பிரிவு ஆரம்பம் 15-10-2015, வியாழன் 10 மணி
Certificate – Diploma – Bachelors Degree
Leading to University of Sunderland UK
கற்கைநெறிக் காலத்தில் ரூ.15,000 வரை வருமானம்
SWISS – AUSTRALIA – SINGAPORE – MALAYSIA VISAS
with ENGLISH
Beginner's Level
Advanced Learners
IELTS Preparatory
MONEY BACK 100% GUARANTEE
3 மாதங்களில் ஆங்கிலத்தில் பேசும் திறன் & தொழில்வாய்ப்பு பெறும் உத்தரவாதம்
(C-2425)
இதுவரை கற்கைநெறியில் இணைந்த 13 பேருக்கு வெளிநாட்டு விசா ஏற்பாடு
077 36 16 798, 021 222 0011
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m


# கொலையாளிகளை...

குளோபல் அம்புனிட்டி இன்டெக்ஸ் அறிக்கையில் இந்த தரப்படுத்தல் வெளியிடப்பட்டுள்ளது. சோமாலியா, ஈராக், சிரியா, பிலிப்பைன்ஸ், தென் சூடான் ஆகிய நாடுகள் இலங்கைக்கு முதல் 5 இடங்களில் உள்ளன.

இலங்கை 5 ஆம் இடத்தில் இருந்து 6 ஆவது இடத்திற்கு வந்திருப்பது சிறந்த விடயம் எனவும் அண்மையில் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தற்போதைய அரசாங்கம் கடந்த 30 வருடங்களில் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் தேடி அறிய நடவடிக்கை இதற்கு காரணமாக அமைந்துள்ளதாகவும் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் ஊடகவியலாளர்கள் லசந்த விக்ரம துங்க, பிரகீத் எக்னெலிய கொட ஆகியோர் தொடர்பில் நடத் தப்படும் விசாரணை குறித்தும் அறிக்கையில் கவனம் செலுத் தப் பட் டுள்ளது. (செ-12)


BRITISH COLLEGE OF HIGHER STUDIES
வழங்கும்
After AL What Next ?
உங்களின் கனவும் பெற்றோரின் ஆசைகளும் நிறைவேற
பல்கலைக் கழகமா? உயர்கற்கை நெறியா? புதிய தொழில் வாய்ப்பா?
உங்களின் ஆங்கில அறிவை நனவாக்குவதே ஒரே வழி
அதை மேம்படுத்துவதே எமது நோக்கு
Spoken English with Grammar 1½ Months
100% பயிற்சி
சர்வதேசத் தரம் கொண்ட பாடத்திட்டங்களை உள்ளடக்கி மிகவும் இலகுவான விளக்கங்களுடன் அனைவருக்கும் பயனுள்ள வகையில் கற்பிக்க வகை செய்திருக்கின்றோம். ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே இந் நெறி நடாத்தப்படுகிறது. மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும்ஆங்கிலம் கற்க
100% வெற்றி
(C-2422)
Diploma In English 2½ Months
ஒரு தொழில் தேடுவதாயினும், உயர் கல்வியினைத் தொடருவதாயினும், ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதுள்ளது. இவை யாவையும் கருத்தில் கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கபடுகிறது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.
* வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
* எமது கற்கை நெறிகள் Reading,Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
* Excellent Teachers' Panel & Individual Attention
* கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
* ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்கட்கு தனிப்பட்ட கவனமும், கூடுதல் பயிற்சிகளும் வழங்கப்படும்
Spoken English with Grammar ~~Rs.10'000~~ Rs.7'500
Diploma in English ~~Rs.14'000~~ Rs.9'500
Batches Start On
12.09.2015@ 9.00am 12.10
14.09.2015@ 9.00am 13.10
16.09.2015@ 2.00pm 14.10
19.09.2015@ 9.00am 15.10
21.09.2015@ 9.00am 16.10
BCHS
No.15, Chirambiyady Lane (off Stanley Road), Jaffna (Near Ariyakulam & Above Sathosa SM)
Tel : 021-2224550, 0777222422,0776555677



# வேலையாட்கள் தேவை

ஸ்ரான்லி வீதியில் புதிதாக திறக்கப்படவுள்ள குளிர்பான நிலையத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

- முகாமையாளர் (மும்மொழியும் சரளமாக பேசக்கூடியவர்)
- மேற்பார்வையாளர்
- Supplier
- Tea Maker
- Receptionist
- சமையல் உதவியாளர்
- Bill Clerk
- Cleaners (சுத்திகரிப்பாளர்)
- சிற்றுண்டித் தயாரிப்பாளர்

(C-2412)

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் பேசித் தீர்க்கப்படும் (முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.)

11.10.2015 ஞாயிற்றுக்கிழமை 213, ஸ்ரான்லி வீதி, வெலிங்டன் சந்தி எனும் முகவரிக்கு காலை 9.00 மணி முதல் 2.00 மணிவரை சமுகம் தரவும். தகுதியானவர்கள் உடனேயே தெரிவு செய்யப்படுவர்.

தொடர்புகளுக்கு - 077 998 5970


## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடாத்தும் "ஆசிரியர்தின விழா"

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடாத்தும் ஆசிரியர்தின விழாவை இம்முறை வடமாகாணத்தில் கொண்டாடுவதற்குத் தீர்மானித்துள்ளோம். இவ்விழாவில் கலந்துகொள்ளும் அனைத்து உறுப்புரிமை அதிபர்கள், ஆசிரியர்களைக் கௌரவிக்கவுள்ளோம். கலந்துகொள்ளும் அதிபர்கள், ஆசிரியர்கள் உடன் தொடர்புகொள்ளுங்கள்.

விசேடமாக 2015ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை வழிப்படுத்தி சித்திபெறவைத்த ஆசிரியர்களை கௌரவிக்கவுள்ளதால் கற்பித்து வெட்டுப்புள்ளிகளுக்கு மேலே பெற வைத்த ஆசிரியர்கள் தமது விபரங்களை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் கீழ்வரும் முகவரிக்கு 16.10.2015இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். (ஒரு வகுப்பிற்கு ஒருவர் மட்டும்)

பொதுச்செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்,
தலைமைப் பணிமனை,
131, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

மேலதிக விபரங்களுக்கு:
0773126807


SPEED LANKA EXPRESS

வெளிநாடுகளுக்கான தபால் பொதி விநியோக சேவை
(C-2424)
உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
Speed Lanka Express (Pvt) Ltd.
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0776217926



# சைப்பிரஸ் (ஐரோப்பா) மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்பு

| வேலை | COUNTRY | வெற்றிடம் | SALARY |
|---|---|---|---|
| HEAVY VEHICLE DRIVER | சவுதிஅரேபியா | 05 | 45,000 ரூபா |
| ELECTRICIAN | சவுதிஅரேபியா | 07 | 55,000 ரூபா |
| CARPENTERS | சவுதிஅரேபியா | 05 | 55,000 ரூபா |
| MASON | சவுதிஅரேபியா | 15 | 55,000 ரூபா |
| STEEL FIXER | சவுதிஅரேபியா | 15 | 55,000 ரூபா |
| AC- TECHNICIANS | சவுதிஅரேபியா | 06 | 63,000 ரூபா |
| PLUMBER | சவுதிஅரேபியா | 06 | 55,000 ரூபா |
| CIVIL ENGINEER (DIPLOMA) | சவுதிஅரேபியா | 05 | 130,000 ரூபா |
| MECHANICAL ENGINEER | சவுதிஅரேபியா | 05 | 130,000 ரூபா |
| COOK -(சமையல்) | சவுதிஅரேபியா | 01 | 60,000 ரூபா |
| HELPER -(சமையல் உதவியார்) | சவுதிஅரேபியா | 01 | 45,000 ரூபா |
| CASHIER -(காசாளர்) | சவுதிஅரேபியா | 10 | 50,000 ரூபா |
| WELDER -(வெல்டர்) | சவுதிஅரேபியா | 02 | 74,000 ரூபா |
| CLEANER - ( கிளீனர்) | சவுதிஅரேபியா | 35 | 35,000 ரூபா |
| FARM LABOURERS (தோட்ட வேலையாளர்) | சைப்பிரஸ் | 50 | 150,000 ரூபா |
| CARE TAKER(முதியோர் பராமரிப்பாளர்) | சைப்பிரஸ் | 25 | 60,000 ரூபா |
| COOK -(சமையற்காரர்) | சைப்பிரஸ் | 01 | 80,000 ரூபா |

MANTEK ENTERPRISES
V3 TRAVELS & TOURS
(S-2319)
நேர்முகத்தேர்வு: 11-10-2015
தொடர்புகளுக்கு: 0768226243
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
கட்டாயமாக சுயவிபரக்கோவை(CV)மற்றும் தகுமைச்சான்றிதழ்களின் நிழல்பிரதிகளுடன்(photo copy)வரவும். காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை(ஞாயிற்றுக்கிழமை)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.